www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

நவ.02–.08,1997

11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 229

## தவறான ஊகங்கள்

## மற்றுமொரு இழுத்தடிப்பு

## தடுமாறும் விசாரணைகள்

## மயக்கமான செய்திகள்



## மேக்கப் புன்னகை

பட்டுக்கோட்டை பிரபாகர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தினமும் தீபாவளி

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இந்துக்களுக்கு
வருடத்தில் ஒரு நாள்தான்
தீபாவளி!

யுத்தம்
நாடெங்கும் தினமும்
தீபாவளி கொண்டாடுகிறது!

யுத்தத்தில்
இந்துக்கள் நிலையும்
நொந்த நிலைதான்!

எத்திக்கும்
எரிகிறது யுத்தத் தீ!
தீபாவளி
எப்படித் தித்திக்கும்?

தீய அசுரன்
ஒழித்துக் கட்டப்பட்ட
திரு நாள்தான்
தீபாவளி என்கிறது புராணம்!

தேவாலயங்களை ஒழிக்க
ஷெல்களும், குண்டுகளும்
தீய அவதாரங்களாகத்
தோன்றியிருப்பது இக்காலம்!

கொடுக்கிற தெய்வம்தான்
கூரையைப் பிய்த்துக்கொண்டு
கொடுக்கும் என்பார்கள்.

இப்போதோ,
ஷெல்களும், குண்டுகளும்தான்
கூரைகளைப் பிய்த்துக்கொண்டு
கொட்டுகின்றன!

ஆட்டிலெறிகளும்,
கபிர்களும், புக்காராக்களும்
சந்நிதிகளில்
சந்நதம் ஆடியுள்ளன!

தெய்வங்களுக்கே
பதுங்கு குழிகள் தேவை!
திருவாளர் பொதுஜனம்
எம்மாத்திரம்?

"வடக்கு-கிழக்கில்
அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்
திருவிழாக்களில்
பக்தர்கள் கூட்டம் திரள்கிறது!
முன்னெப்போதும்
இல்லாதளவு பக்தர் கூட்டம்."
தேவாலயங்களில் கூடுவதாக
அரச பிரசாரங்களில்
பறை சாற்றப்படுகிறது!

எண்ணிக்கைக் கணக்கில்
எப்போதும் விளையாடும்
அரச பிரசார சாதனங்கள்
இதில் மட்டும்
பொய் சொல்லவில்லை!

தேவாலயங்களை நாடுவோர்
எண்ணிக்கை
வடக்கு-கிழக்கில்
இப்போது மிக அதிகம்தான்!

துன்பமும், பிணியும்
மலையெனச் சூழும்போதுதான்
மக்கள் அதிகளவில்
தெய்வ சந்நிதானங்களை
நாடுவது இயல்பு!

பற்றிக்கொள்ள
எந்தத் துரும்பும் இல்லாமல்
பரிதவிப்போருக்கு
தேவாலயப் படிக்கட்டுக்களே
நம்பிக்கை தருகின்றன!

ஆகவே- யாழ் குடாநாடு
படையினர் கட்டுப்பாட்டில்
சென்ற பின்னர்
ஆலயம் செல்வோர் தொகை
அதிகமாகியிருப்பதாக
அரச பிரசாரம் சொல்வதை
நாம் மறுப்பதற்கில்லை!

ஆனால்-வடக்கு-கிழக்கில்
தெய்வத்தின் நிலைகூட
திருப்திகரமாக இல்லை!

பக்தர்கள் சென்று
தெய்வத்திடம் முறையிடலாம்;
அந்தத் தெய்வமே
கலங்கி நிற்கும்போது
திருவாளர் பொதுஜனத்தின்
கதறல் காதில் விழுமா?

மொத்தத்தில்
யுத்தம்தான்
இருள் அரக்கனாக
ஆட்சி செய்து கொண்டிருக்கிறது!

சமாதான தீப ஒளி
சுடர்விட்டுப் பிரகாசிப்பது
எக்காலம்?
அக் காலம் வரும்வரை
தீயவை அழிந்தன என்று
தித்தித்து மகிழ்வது எவ்வாறு?

அதற்காக
வாழ்க்கையே வெறுத்ததுபோல
ஜடங்களாக இருத்தலும் கூடாது!
தீயவை ஒழியட்டும் என்று
திடசங்கற்பம் கொள்ளும்
நாளாகட்டும் இத் தீபாவளி!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## சொல்லிமுடியாத ஈவு!

"தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்." (2 கொ 9:15)

ஆம், தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என அப். பவுல் கூறுகிறார். பரம ஈவாகிய கிறிஸ்துவைக் குறித்து வார்த்தைகளால் சொல்லி முடியாது. அவர் பரலோக பாக்கியங்களெல்லாம் பூமிக்கு கொண்டுவந்தார். "நன்மையான ஈவை பிதாவினிடத்தில் பெற்றுத் தந்தார்." (யாக் 1:17) "இரட்சிப்பின் ஈவை இலவசமாக நமக்கு அளித்தார்." (எபே 2:8)

இயேசு கிறிஸ்துவே இந்த உலகிற்கு அருளிய சொல்லி முடியாத ஈவாகும். இன்றைக்கு எத்தனையோ பேர் தேவன் அருளிய ஈவாகிய கிறிஸ்துவை அசட்டை பண்ணி, புறக்கணித்து தள்ளிவிட்டு ஜீவிக்கிறார்கள். நமக்கு அன்பானவர்கள் யாராவது அன்பளிப்பொன்றைக் கொடுத்தால், சந்தோஷத்துடன் ஏற்று மகிழ்கிறோம். அது மாத்திரமல்ல, அந்த அன்பளிப்பைக் கொடுத்தவருக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருந்து அவரைக் கனப்படுத்துகிறோமல்லவா?

ஆனால், மனிதர்கள் எவராலும் கொடுக்க முடியாத ஈவாகிய கிறிஸ்துவை கொடுத்த பரம பிதாவுக்கு இன்று எத்தனை பேர் நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கிறோம்? கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூரப்போகும் இக் காலங்களில், தேவன் அருளிய ஈவுக்காக-சந்தோஷத்திற்காக நன்றி செலுத்துகிறோமா? தேவன் அருளிய ஈவை நம் வாழ்க்கையிலே நாம் அனுபவிக்கிறோமா? சந்தோஷத்துடன் அவரை ஏற்றுள்ளோமா? ஸ்தோத்திரம் செலுத்துகிறோமா? என ஆராய்ந்து பார்ப்போம்.

தி. தேவபாலன், மட்டக்களப்பு.

## ஆன்மீகம்



### எண்ணங்களுக்கேற்ப எழுப்பப்படுவர்

உலகின் எந்த எண்ணங்களோடு மிகைத்து வாழ்ந்தார்களோ அதற்கேற்றபடியே மறுமை நாளில் எழுப்பப்படுவார்கள். (-அல் ஹதீஸ்-)

கோபத்தால் கொடியவர்களாய் வாழ்ந்தோர்- ஓநாய் போல எழுப்பப்படுவர்.

பொறாமையால் பொல்லாதவராய் வாழ்ந்தோர்- நாய், பாம்பு, தேள், போல் எழுப்பப்படுவர்.

தந்திரத்தால் ஏமாற்றிப் பிழைத்து வாழ்ந்தோர்- நரிபோல் எழுப்பப்படுவர்.

சூழ்ச்சியால் சுற்றிப் பிழைத்து வாழ்ந்தோர்- யானை போல் எழுப்பப்படுவர்.

மடத்தனத்தால் மனம்போன போக்கில் வாழ்ந்தோர்-கழுதை போல எழுப்பப்படுவர்.

விபச்சாரம், அசுத்தம், வெட்கமின்மை, அலட்சியம் இப்படி வாழ்ந்தோர்- பன்றி போல் எழுப்பப்படுவர்.

உலகப் பற்றிலேயே ஊறி வாழ்ந்தோர்- எறும்புபோல எழுப்பப்படுவர்.

நன்றிகெட்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருப்போர்- குதிரை போல் எழுப்பப்படுவர்.

பொய், புறம், கோள், மோசடி கலகம் இவைகளில் புரண்டு வாழ்ந்து கொண்டிருப்போர்- ஷைத்தான் போல் எழுப்பப்படுவர்.

(நூல்: நூருல் ஹகாயிக்)

எம். சாஹுல் ஹமீது- மன்னார்.

## கவிதைப் போட்டி இல. 226

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



பரிசுக்குரிய கவிதை

### தீர்வு என்று...?

நரையும் வரும்
நமக்கு விடிவு வராது;
திரையும் வரும்
தீர்வு கிடைக்காது;
மூப்பும் வரும்
மூண்ட போர் ஓயாது!

பஷீரா முஹைமீன்-
பாலையூற்று, திருகோணமலை.

### இறுதி ஆசை

உழைத்திளைத்து ஓய்ந்த உடல்
களைத்துயிர்த்துப் பார்ப்பதென்ன?
அனைத்தினங்கள் ஒன்றுபடும்
சமாதானம் தெரியுதென்றோ?

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்- வவுனியா.

### இப்படி எத்தனை பேர்!

சேமலாப நிதியைக் கூட
சேர்ந்தவர்கள் பறித்த பின்னர்
சோர்ந்து போன பெரியவரின்
சோகமான இறுதி நிலை!

சதா கணபதி- அதிகாரவத்தை,
உடபுஸ்ஸலாவ.

### தலைவிதி!

தாமரை மலர்ந்தென்ன.....
தவளம ஊர்ந்தென்ன....
தலை விதி என்று மாறும்?
தலையிடி என்று தீரும்?

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.

### நினைவு

முதுமை நினைவெல்லாம்
இளமையானால்,
முதுமையென்ன...
இளமையென்ன....?

அ. மரியதாஸ்-கச்சேரி, மன்னார்.

### தேவைதானா?

யாரை நாம் நோவோம்....?
யார்க் குறைப்போம் எம்நிலமை?
என்ன தலையெழுத்தோ?
எம்கதிக்கு யார் பொறுப்போ?
எல்லாம் சரிவருமாம்
சந்ததியே சரிந்தபின்னே!

நிஐந்திக்கா கனகசிங்கம்-
கல்லடி, மட்டக்களப்பு.

### சுதந்திர சிந்தனை..

நாம் இரு(வாழ்)ந்த நாடாஇது-?
தேன் சும (சொரி)ந்த ஊராஇது?!
ஓ! போர்படர்ந்து போவதென்ன..?
வீன்சா மலிந்த கோலமென்ன?!
என்று தணியுமிந்த யுத்த தாகம்...?
என்று முடியுமிந்த யுத்த யாகம்?!

வாஹிட் ஏ.குத்தூஸ்- அக்குறணை.

### வாடும் முதுமை

காலம் சப்பித்துப்பிய
மனுஷ சக்கை இது!
காலன் அழைப்பும்
கைக்குள் வராத
தீர்வு பொதியாகி
திசைமாறி நிற்பதால்
வழிமேல் விழிவைத்து
வாடிக் கிடக்கிறதே!

மெய்யன் நட்ராஜ்-
கொழும்பு-4.

### மு(பு)திய உரம்!

பொருளாதாரச் 'சாறு' பிழியப்பட்ட
கழிவுத் தேயிலை-மீண்டும்
தோட்டத்திற்கே உரமாக்கப்பட
ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது!

மலையகன்-கலகா.

## கவிதைப் போட்டி இல. 229



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 08.11.1997

முகவரி: கவிதைப் போட்டி இல. 229
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை



முத்தான முரசே!

இராஜதந்திரியின் 'சாத்தான் ஓதும் வேதம்' அரசியல் அலசல் அருமை! இரும்புப் பெண் என்ற இந்திராகாந்தி அம்மையாரால் இந்தியா முன்னேறுவதை பொறுக்காத அமெரிக்கா சீக்கிய தீவிரவாதிகளைப் பயன்படுத்தியிருக்கலாம். தன்னைத் தவிர எந்த நாடும் சுபிட்சமாய் முன்னேறுவதை விரும்பாது. அவை அடித்துக் கொண்டு இருக்கவே அமெரிக்கா விரும்பும்!

செல்வி பிரிய மூர்த்தி, அரநாயக்க.

■ ■

என் அபிமான முரசே, நீ வாரம் தோறும் தரும் தகவல் சூப்பராகப் போகிறது. டயானா ஆல்பம் அசத்திவிட்டதே! 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' என் மனதை உருகவைத்துள்ளது.

ஏ. ஆர். ருபி, புதுக்குடியிருப்பு-வாழைச்சேனை.

■ ■

### மனமார்ந்த நன்றிகள்

நான் முரசை வாங்கினால் முதலில் புரட்டுவது இராமாயணப் பக்கத்தைத்தான். நான் முன்னர் இராமாயணம் படித்திருக்கிறேன். ஆனால் இராஜகுமாரன் எழுதும் இராமாயணம் படிக்கப் படிக்க அலுப்பு ஏற்படுவதே இல்லை. சுமந்து வரும் முரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

ஜா. றாஸி முஹம்மத், அக்கரைப்பற்று-06.

■ ■

பயங்கரவாதம் பற்றிப் பேசுவதற்கு யோக்கியம் இல்லாத அமெரிக்கா, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியதை பாராட்டும் நம்நாட்டு தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு சாட்டையடியாக இராஜதந்திரியார் அலசி இருந்தது உண்மையிலும் உண்மை.

புலி எதிர்ப்பு என்ற ரீதியில் அடிப்படைக் கோட்பாடுகளை குழிதோண்டிப் புதைக்கும் நம்மவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையும்.

பா. அரியநேத்திரன், அம்பிளாந்துறை.

■ ■

சுமதி செய்தது புரட்சி அல்ல. புரட்சி என்று சொல்லி சுமதியை தனிமைப்படுத்தக்கூடாது. எது தேவையோ, எது சரியோ அதைத்தான் செய்திருக்கிறாள். பெண் விவாகரத்துக்கேட்டால் உடல்ரீதியான காரணம் கற்பிக்கும் வக்கிர எழுத்தாளர் மத்தியில், உணர்வுகளை தொட்டுக்காட்டிய பிரபஞ்சனுக்கு பாராட்டுக்கள்.

செல்வி ஜி. உமாதேவி, திருக்கோணமலை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772,
கொழும்பு.

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன், என்றவர்கள், புல்லானாலும் மனைவி, கல்லானாலும் மனைவி என்று சொன்னதுண்டா? கையாலாகாத சில ஆண்கள் தங்கள் தாழ்வு மனப்பான்மை நிமித்தம், எங்கே தங்கள் மனைவியர் தங்களை குறைவாக நினைப்பரோ என்ற நினைப்பில் எழுதியவைதான் அந்தக் கருத்துக்கள். தன்னம்பிக்கையுள்ள ஆண் பெண்ணை அடக்கி வைக்க நினைக்கமாட்டான்.

எம். சியாமளா, வவுனியா.

■ ■

இலக்கிய நயத்தில் ரசிகன் தந்த புதிய தாலாட்டு நன்று. டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' டயானா பக்க நியாயத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

பி. பாத்திமா, கொழும்பு-13.

■ ■

'கனவு மெய்ப்பட வேண்டும்' தொடர் கதை எம் உள்ளத்தை உருக்கிவிட்ட உன்னத படைப்பு. பெண்மைக்கு பெருமையையும் மதிப்பையும் நிதர்சனமாய்க் காட்டிவிட்டது.

வித்தியாசமான எழுத்தாளரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

எஸ். பத்மா, உமாஜினி, கொழும்பு-10.

■ ■

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'உடைந்த இரவு', 'இராமாயணம்', 'கனவு மெய்ப்பட வேண்டும்' அருமையிலும் அருமை!

நிர்மலா சாமிநாதன், வாரியகலை.

■ ■

'இலக்கிய நயம்', 'உடைந்த இரவு', 'கொள்ளை ராணி பூலான்தேவி', டயானா ஆகிய சகல படைப்புகளும் பிரமாதம். முரசுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

செல்வி ஸரீமா ஸஹுான், மக்கொன.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

### பெருமை தலைமைகளுக்கல்ல...!

உரிய தருணத்தில் 'அரசியல் தொடரில்' இயக்கங்களின் அந்தக்கால அமெரிக்கா எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார் அற்புதன். இயக்கத் தலைமைகளுக்கு அப்போதுகூட அதில் எல்லாம் நம்பிக்கை இருந்தது கிடையாது. குறிப்பிட்ட சில இயக்கங்களில் இருந்த முற்போக்கு எண்ணம் கொண்ட உறுப்பினர்கள் தான் அமெரிக்க எதிர்ப்பு, மற்றும் புரட்சிகர கருத்தோட்டங்களை முன்னெடுத்தனர். தலைமைகளுக்கு அந்தப் பெருமை சேராது. அதனை இன்று அந்தத் தலைமைகள் நிருபித்தும் வருகின்றன.

எம். சூரியப்பிரகாஷ் (முன்னாள் இயக்க உறுப்பினர்)
சுவிற்ஸர்லாந்து.

### கனவு மெய்ப்பட்டது

'கனவு மெய்ப்பட வேண்டும்' முடிவு மன நிறைவாக இருந்தது. ஒரு மிருகத்துடன் இணைந்து வாழ்ந்து அழிவதைவிட, தனி வழியே சென்ற சுமதியின் துணிச்சல் தேவையானது. கனவு மெய்ப்பட்டது.

திருமதி உதயா ரத்னம், கொழும்பு-06.

### சாத்தானின் வேதம்

'சாத்தான் ஓதிய வேதம்' அரசியல் அலசலில் இராஜதந்திரியார் அமெரிக்க முகமூடியைக் கிழித்திருந்தார். அமெரிக்காவின் சுயரூபத்தை இங்குள்ள பல விமர்சகர்கள் மென்மையாகவே காட்டப் பார்க்கின்றனர். 'முரசு' வல்லரசின் வாலைப் பிடிக்கவில்லை என்பது மகிழ்ச்சி தருகிறது.

இ. பேரின்பநாதன், கொழும்பு-09.

### அகண்ட ஈழமும்-அமெரிக்காவும்

அகண்ட ஈழப்படம் வெளியிட்டு இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்க சதி செய்தது அமெரிக்கா. அமெரிக்காவில் உள்ள சில 'பெரும் தமிழர்கள்' மூலம் சி.ஐ.ஏ. வெளியிட்ட வரைபடம்தான் அகண்ட ஈழம். இந்திய தமிழ்நாட்டையும் உள்ளடக்கியதாக அது காணப்பட்டது. இந்தியாவை கூறுபோட்டு, அதன் பலத்தை சிதைக்க ஈழப் போராளிகளை பாவிக்க நினைத்தது அமெரிக்கா. இன்று அந்தச் சாத்தான்தான் வேதம் ஓதுகிறது. அதனையும் இராஜதந்திரியார் சுட்டிக்காட்டியிருக்கலாம்.

பி. தியாகராஜன், மட்டக்களப்பு.

### அவசரப் பேட்டிகள்

பத்திரிகையில் தங்கள் பெயர் வரவேண்டும் என்பதற்காக அவசரப்பட்டு அறிக்கைகளும், பேட்டிகளும் கொடுக்கும் வழக்கம் தமிழ்க் கட்சித் தலைவர்களின் பொதுப் பண்பாகும். அமெரிக்கத் தடை தங்களுக்கும் விழுந்த அடி எனத் தெரியாமல் அக் கட்சிகள் சில வரவேற்றன. அதனைக் குத்திக் காட்டிய அய்யாத்துரை யாருக்கும் பாராட்டுக்கள்.

கே. சிவனேசன், கண்டி.



படிப்பகம்

www.padippakam.com

# புதிய யோசனைகள்! புலிகள் நிராகரிப்பு

# முதன் முதல் வெளியாகியுள்ள உத்தியோக பூர்வ கருத்து!

## ‘அரசியல் நியூத்திரன் குண்டுகள்’ என விபரிப்பு

✪ வடக்கு–கிழக்கு பிரிப்பு. கிழக்கும் பல துண்டுகளாக நறுக்கப்பட்டுள்ளது.

✪ தீர்வுப் பொதி தமிழர் தேசியத்தை குறிவைக்கிறது.

✪ தமிழர் தேசம் அங்கீகரிக்கப்படவேண்டும்.

✪ தேசிய இனம் என்பது ஏற்கப்படவேண்டும்.

**வ**டக்கு-கிழக்கில் அம்பாறையை பிரிப்பது, வடக்குடன் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் இணைந்திருப்பதா இல்லையா? என்பதை முடிவு செய்ய கருத்துக் கணிப்பு நடத்தவது, எல்லை மீள் நிர்ணயக் கமிஷன் மூலம் மாவட்ட எல்லைகளை மாற்றுவது என்பவற்றை புதிய யோசனைகளாக 3.10.97 ல் அரசாங்கம் அறிவித்திருந்தது.

தீர்வு யோசனைகள் தொடர்பாக புலிகளுடன் பேசத் தயார் என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்களும் கூறியிருந்தார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் தமது கருத்தை வன்னியில் வெளியிட்டுள்ளனர். புலிகள் இயக்கத்தினரின் உத்தியோகபூர்வ பத்திரிகையான ‘விடுதலைப் புலிகளி’ன் ஐப்பசி மாத வெளியீடு தற்போது வெளியாகி உள்ளது. அப்பத்திரிகையில் புதிய தீர்வு யோசனை தொடர்பாக புலிகளின் உறுதியான கருத்து வெளியாகி உள்ளது.

### நிர்வாக அலகுகள்

அதில் கூறப்பட்டுள்ளதாவது: "அதிகாரப் பரவலாக்கலுக்கான நிர்வாக அலகுகள் என்ற போர்வையில் தீர்வு யோசனையில் தமிழர் தாயகம் கூறுபோடப்பட்டுள்ளது. இச் செய்தியை 3.10.97 அன்று பத்திரிகையாளர் மாநாட்டில் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டுள்ளார்.

வடக்கென்றும், கிழக்கென்றும் தமிழர் தாயகம் பிரிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியுடன், கிழக்கு மாநிலம் பல துண்டுகளாக நறுக்கப்பட உள்ளது என்ற அறிவிப்பையும், அதிலே சில துண்டுகள் அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் சங்கமமாகப் போகின்றது' என்ற செய்தியையும் அவர் அறிவித்தார்.

தமிழர் தாயகத்தின் மையப்பகுதியான மணலாறு அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி இதற்கு முன்னரே வெளியிடப்பட்டுவிட்டது.

தமிழர் தாயகத்தையும், தமிழர் தேசியத்தையும் குறிவைத்தபடி சந்திரிகாவின் தீர்வுப் பெட்டகம் உள்ளது என்ற உண்மை இப்போது அம்பலமாகிவிட்டது.

இரண்டு அரசுகளின் படைகள்போல தமிழர் சேனையும், சிறீலங்கா படையினரும் மரபுப்போர் முறையில் சமர் புரிந்து இன முரண்பாட்டின் அதி உச்சக்கட்டத்தை புலப்படுத்தி உள்ளனர். இந்த சூழலில் தமிழர் தேசத்தை ஏற்றுக்கொண்டு, தமிழர் தேசியத்தை அங்கீகரித்து இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக, ஒரு நாடு, ஒரு மக்கள் என்று கூறுவது உள்நோக்கம் கொண்டதாகும்.

தேசிய இன அந்தஸ்த்தில் இருந்து தமிழர்களை சமூகக்குழு என்ற தரத்திற்கு கீழிறக்கி சிங்கள இனத்துடன் சங்கமிக்கச் செய்வதே நீண்டகாலத் திட்டமாகும்.

### தடைகள்

தமிழரின் இனப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க இரண்டு பிரதான விடயங்கள் தடையாக உள்ளன என சந்திரிகா அரசாங்கம் கருதுகின்றது.

ஒன்று: காலம் காலமாக சுடர் விட்டெரியும் தமிழர் தேசியம் என்ற அரசியல் நெருப்பு.

இரண்டு: இந்த உணர்வுத் தீயை கட்டிக்காத்து வளர்க்க முற்படும் புலிகள் இயக்கம்.

இந்த இரண்டையும் இல்லாது செய்வதன் மூலமே இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

தீர்வுத்திட்டம், அதிகாரப் பரவலாக்கம் என்ற மகுடங்களின் கீழ் தமிழர் தாயகத்தை கூறுபோட்டுச் சிதைத்து, தமிழர் தேசியம் என்ற அரசியல் விருட்சத்தை அடியோடு சாய்க்க முயற்சிக்கின்றனர்.

நில ஆக்கிரமிப்பில் ஒரு முன்னேற்றத்தைக் காட்டிவிட்டு, தீர்வுப் பொதியின் சில விடயங்களை அது அவிழ்த்துவிடுகின்றது. நில ஆக்கிரமிப்பு அதிகரிக்க அதிகரிக்க, தமிழர் தேசியத்துக்கு விரோதமான அரசியல் விடயங்கள் தீர்வுத்திட்டத்தின் அம்சங்களாக அறிவிக்கப்படுகின்றன.

பாலஸ்தீன தேசியத்தை அங்கீகரித்து 50 வருட யுத்தத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க யூத தேசம் முயலும் இன்றைய சூழலில், ஸ்கொட்லாந்து தேசத்தை அங்கீகரித்து தனது பரந்த மனப்பான்மையை பிரிட்டன் வெளிப்படுத்தியுள்ள இன்றைய 21ம் நூற்றாண்டு சூழலில் சந்திரிகா அரசாங்கமானது மகாவம்சம் எழுதப்பட்ட 13ம் நூற்றாண்டுக்கு செல்ல விரும்புகிறது.

கட்டடங்கள், சொத்துக்களை அப்படியே இருக்கவிட்டு உயிர்களை குடிக்கும் நியூத்திரன் குண்டைப்போல, ஆட்களை விட்டுவிட்டு தமிழர் தேசியத்தை அழிக்க முயலும் சாதுரிய அரசியல் சூழ்ச்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது."

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள் அரசின் புதிய யோசனைகள் பற்றி விபரித்துள்ளனர். ■

# பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது என்ன?

## அவசர அறிக்கையின் நோக்கம் யாது?

**நீ**தியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் பாராளு மன்ற தெரிவுக் குழுவின் சார்பாக, அக் குழுவின் விசேட அறிக்கையைத்தான் 24.10.97ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் அவற்றின் உள்ளடக்கத்தில் ஒன்றாக தெரிவுக்குழுவுக்கு முன் வைக்கப்பட்ட யோசனையும் அடங்கியிருந்தது. தெரிவுக்குழு முன் ஏனைய கட்சிகளின் சாட்சியங்களும் இணைக்கப்பட்டிருந்தன.

ஆனால் தீர்வு யோசனைகளை அரசாங்கம் சமர்பித்தது போல தவறான செய்திகள் வெளியாகின.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 94ன் கீழ்தான் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

நிலையியற் கட்டளை 94ல் கூறப்பட்டுள்ள முழு வாசகம் பின்வருமாறு: "ஒரு தெரிவுக்குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு சட்ட மூலத்திலோ, விடயத்திலோ, அத் தெரிவுக்குழு சாட்சியங்களை விசாரிக்க வசதி செய்ய வேண்டுமென விரும்பினால், ஆட்களையோ, பத்திரங்களையோ, பதிவேடுகளையோ அத் தெரிவுக்குழு வரவழைக்க ஒரு தீர்மானம் மூலம் பாராளுமன்றம் அதிகாரம் வழங்கலாம். இத்தகைய அதிகாரம் வழங்கப்பட்ட எந்தவொரு குழுவும் தன் முன் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் பதிவறிக்கையுடன் பாராளுமன்றத்திற்கு தனது கருத்துக்கள், குறிப்புரைகள் பற்றி அறிக்கையிட அனுமதி பெற்றிருக்கும். அத்துடன் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர தகுந்தது என்று தான் கருதும் எந்த விடயம் பற்றியும் ஒரு விசேட அறிக்கை சமர்பிக்கவும் அனுமதி பெற்றிருக்கும்" என்று கூறப்பட்டுள்ளது.

இதன்படி அரசாங்கம் அறிக்கை சமர்ப்பிக்க முடியாது. தெரிவுக் குழு சார்பாகத்தான் சமர்பிக்கலாம். அவ்வாறுதான் நடந்தது. ஆனால் அரசாங்கம் சமர்பித்தது போலவே செய்திகள் வெளியாகின.

தெரிவுக்குழுவில் என்ன நடந்தது என்பதும் அரசின் யோசனைகள் எவை என்பதும் நாடறிந்த விடயங்கள்தான். அவற்றை அவசரமாக பாராளுமன்றத்தில் அறிக்கையாக சமர்பிக்க முன்வந்தது ஏன்?

தெரிவுக்குழு இன்னமும் உள்ளது. மேலும் விவாதம் நீடித்துச் செல்லப் போகிறது. இந்நிலையில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டதின் நோக்கம் என்ன?

பாராளுமன்றத்தில் ஆவணத்தை சமர்ப்பித்தாகிவிட்டது என்பது முக்கிய நிகழ்வாக வெளியுலகில் நோக்கப்படும். அறிக்கைதான் என்று தெரியவா போகிறது? சமார்த்தியமான அரசியல் நகர்வே இதுவாகும் என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். இத்தகைய அறிக்கையை சமர்ப்பிக்க தெரிவுக்குழுவில் உள்ள தமிழ்க் கட்சிகள் சம்மதம் தெரிவித்தமை தவறாகும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தெரிவுக்குழுவில் குறிப்பிட்ட அறிக்கை சமர்பிக்க உடன்பாடு காணப்படாமல் இருந்திருந்தால், பாராளுமன்றத்திற்கு கொண்டுவர முடியாமல் இருந்திருக்கும். இவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமை தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமல் மேலும் கால நீடிப்புச் செய்ய அரசாங்கத்திற்கு உதவியுள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர். ■

# குறிதவறிய தாக்குதல்

**சா**வகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக தபால் அலுவலகத்திற்கு அருகில் உள்ள வீடொன்றின் யன்னல் ஊடாக23.10.97 இரவு 8.30 மணியளவில் கைக்குண்டொன்று வீசப்பட்டது. இதில் 3 பேர் காயமடைந்தனர். இந்த வீட்டிற்கு பக்கத்தில் இருந்த புளொட் அமைப்பினர் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த போதிலும் எவருக்கும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் ஏற்படவில்லை. கைக்குண்டு வீச்சில் செல்வராசா தவலிங்கராணி (24), நாகேந்திரம் நிஷாந்தன் (10), நாகேந்திரம் அற்புதராணி (39) ஆகியோரே காயமடைந்து யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அற்புதராணி என்பவர் தனது கணவனைப்பிரிந்து தனியாக வாழ்ந்து வருபவர். இவர் இராணுவத்தினருடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்தார் என புலிகள் இவரை பல தடவைகள் குறிவைத்திருந்தனர். இவரும் பல தடவைகள் மயிரிழையில் தப்பி வந்தார். இப்படியான சந்தர்ப்பத்தில் புளொட் அமைப்பின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. அவர்களது முகாமுக்கு பக்கத்தில் அவரை தங்க வைத்து வீடு கொடுத்து உதவினர். எப்படியோ புலிகள் அதனை அறிந்து குறிவைத்தனர். இருந்தும் அற்புதராணி இந்த தடவையும் தப்பித்துக்கொண்டார். ■

# மீண்டும் வீதித்தடை

**வா**ழைச்சேனை நகருக்குச் செல்லும் வீதி, அங்குள்ள பொலிஸ் நிலையமொன்று புலிகளால் தாக்கப்பட்டதனால், கடந்த ஆறுமாதங்களாக பொதுப்போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது நினைவிருக்கலாம். அதற்குப் பதிலாகப் பாவிக்கப்பட்டு வந்த உப வீதியும் இப்பொழுது தடை செய்யப்பட்டுவிட்டது.

வீதித் தடை காரணமாக பொதுமக்களின் போக்குவரத்திற்கு ஏற்பட்ட கஷ்டங்களை நீக்கும் வண்ணம் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுத்து, குன்றும் குழியுமாக இருந்த மற்றொரு உப பாதையொன்றைச் செப்பனிட்டுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தினர். அவ்வீதி திறந்து வைக்கப்பட்டு மூன்று நாட்களின் பின் அங்கு இடம்பெற்ற அசம்பாவிதமொன்றையடுத்து அவ்வீதியும் இப்பொழுது தடை செய்யப்பட்டுவிட்டது.

அந்த வீதிப் பக்கமாக எங்கிருந்தோ ஒரு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாலேயே இவ்வீதி கடந்த 24.10.97 தொடக்கம் போக்குவரத்திற்குத் தடைப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள்வழி தெரியாது தவிக்கிறார்கள்.

தடை செய்யப்பட்டுள்ள பழைய வீதியைப் பொதுப்போக்குவரத்திற்குத் திறந்து விடுமாறு பாராளுமன்ற உறுப்பினர்களும், மற்றும் பலரும் விடுத்த வேண்டுகோள்களைப் படையினர் புறந்தள்ளி வைத்துள்ளனர். ■

# கொழும்பு குண்டுத் தாக்குதல்

## தவறான ஊகங்கள்! தொடர் கைதுகள்!

**கொ**ழும்பு குண்டுவெடிப்பு தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடந்துவருவதாகக் கூறப்படுகிறது. பரவலான தேடுதல்கள் மூலம் கைதுகளும் நடந்துள்ளன.

ஆனாலும் குண்டுவெடிப்புத் தொடர்பான விசாரணைகள் முன்னேற்றம் கண்டிருப்பதாகத் தெரியவில்லை.

குண்டுவெடிப்பை அடுத்து பாதுகாப்பு தரப்பினர் வெளியிட்டு வரும் கருத்துக்கள், அவர்கள் போதிய தகவல்ளைப் பெறமுடியாமல், புனை கதைகளை நம்பி இருப்பதையே காட்டுகின்றன.

ஈரோஸ் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்று புலிகளுடன் இணைந்தவர்களே லொறியில் குண்டு பொருத்தியதாகவும் செய்தி சொல்லப்பட்டது.

### பழைய கதை

கொழும்பில் ஈரோஸ் இயக்கத்தினர் குண்டுத்தாக்குதல் நடத்தியதால், கொழும்பில் எங்கு குண்டு வெடித்தாலும் ஈரோஸ்தான் காரணம் என்று கூறப்பட்டு வந்தது.

ஈரோஸ் இயக்கம் புலிகளுடன் இணைய முன்னரே கொழும்பில் பாரிய குண்டுத் தாக்குதல்களை புலிகள் நடத்தி இருந்தனர். 1987ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி கொழும்பில் புலிகளின் முதலாவது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. புறக்கோட்டை பஸ் நிலையத்தில் கார்க்குண்டு வெடித்தது. 100க்கு மேற்பட்டோர் பலியாகினர்.

அதனையடுத்து மருதானை பொலிஸ் நிலையம் முன்பாகவும் புலிகளின் கார்க் குண்டு வெடித்தது.

இந்த நடவடிக்கைகளும் புலிகளுடன் ஈரோஸ் இயக்கத்தினர் இணைந்து மேற்கொண்டதாக ஊகங்கள் கிளம்பின. ஆயினும் அவற்றில் உண்மை இருக்கவில்லை.

தற்போதும் அதுபோல தவறான ஊகங்களே சொல்லப்படுகின்றன. கொழும்பில் ஈரோஸ் இயக்கத்தினர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல்களை விட மேலும் தொழில்நுட்பத்தில் முன்னேற்றமான பல தாக்குதல்களை புலிகள் நடத்தியுள்ளனர்.

அவ்வாறு இருந்தும் ஈரோஸ் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றவர்கள்தான் சமீபத்திய குண்டுத் தாக்குதலுக்கு புலிகளுக்கு உதவியதாகக் கூறுவது, விசாரணைகளில் எதனையும் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளதையே புலப்படுத்தி உள்ளது.

"ஈரோஸ் இயக்கம் சார்பாக கொழும்பில் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எந்த இயக்கங்களிலும் தற்போது இல்லை; வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர் என்ற தகவல்கள்கூட பாதுகாப்புத் தரப்பினருக்கு தெரியாமல் இருக்கிறதே!" என்றார் ஒரு முன்னாள் ஈரோஸ் உறுப்பினர்.

### பயன் இல்லை

விசாரணைகளில் தடயங்கள் எதுவும் கிட்டாத வகையில் கொழும்பில் புலிகளின் தாக்குதல் நடந்திருக்கிறது. அதனால்தான் விசாரணையில் முன்னேற்றம் போலக்காட்ட புனை கதைகள் கூறப்படுகிறோ என்றும் சந்தேகம் எற்பட்டுள்ளது.

"சரியான தகவல்கள், உளவுச் செய்திகள் மூலமே விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படும். ஆனால் தவறான ஊகங்கள், ஆயிரக்கணக்கானோரை கைது செய்து விசாரணை செய்தல் போன்றவற்றால் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படத்தலாம் என அரசாங்கம் நினைக்கிறது. இதன்மூலம் புலிகளின் தாக்குதலுக்கு பதிலடியாக தலைநகரில் உள்ள தமிழர்களுக்கு மறைமுகமான தண்டனை கொடுப்பதாகவே கருதப்படும்," என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். ■

# மன்னார் மீது புலிகள் கவனம்

## சிறுத்தை அணி தாக்குதல்

**ம**ன்னார் பகுதியில் படையினர் நிலைகொள்ள முன்னர் வவுனியாதான் பிரதான நகராக இருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களை உள்வாங்கும் அரச கட்டுப்பாட்டு பகுதியாக வவுனியா நகர் விளங்கியது.

தற்போது மன்னார் நகர் அவ்வாறு மாறியுள்ளது. இதனையடுத்து புலிகளின் கவனம் அங்கு திரும்பி இருக்கிறது. தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களுக்கு தூண்டில் போடும் அரச கட்டுப்பாட்டு பகுதியாக மன்னார் நகரை படையினர் பயன்படுத்தாமல் தடுக்க புலிகள் முற்படுகின்றனர்.

இதனால் மன்னாரில் தாக்குதல் தொடரும் அறிகுறிகள் தெரிகின்றன. 25.10.97 அன்று மன்னார் வீதியில் உள்ள கன்னாட்டியில் இருந்த காவலரண்கள் மீது புலிகளின் சிறுத்தைப் படையணி தாக்குதல் நடத்தியது.

நள்ளிரவு 12.35 மணிக்கு ஆரம்பமான தாக்குதல் ஒருமணிநேரம் நடைபெற்றது. 10 காவலரண்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஆறு படையினர் பலியாகினர். 7 பேர் காயமடைந்தனர். ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் ஒருவர் பலியானார். கப்டன் அன்ரனி என்பவரே பலியானவராவர்.

புலிகள் எட்டுப்பேர் பலியானதாக படையினர் அறிவித்தனர். மூன்று சடலங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்பட்டது. அனால் பின்னர் அதுபற்றிய தகவல்கள் எதுவும் கூறப்படவில்லை. ■

# வடக்கில் முஸ்லிம்கள் குடியேற ஆர்வம்!

## வருட இறுதிக்குள் ஆயிரம் குடும்பங்கள்!

(மன்னார் நிருபர்)

**வட** புலத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேறி ஏழு ஆண்டுகள் நிறைவு பெறும் இவ்வேளையில் பெரும்பாலான முஸ்லிம்கள் தம் சொந்த இடங்களில் சென்று மீள் குடியமர ஆர்வம் கொண்டுள்ளனர்.

மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதி தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் இங்கு சென்று குடியேறுவதில் தமக்கு எதுவித பிரச்சினையும் இல்லை என வடபகுதி மக்கள் கருதுகின்றனர்.

தற்போது புத்தளம், குருணாகல், அநுராதபுரம் போன்ற இடங்களில் வடபகுதியைச் சேர்ந்த எழுபத்தையாயிரம் வரையான முஸ்லிம்கள் வாழ்கின்றனர் இதில் பலர் சொந்தமாக காணிகள் வாங்கி உள்ளனர்.

தற்போது முஸ்லிம்கள் மீளக் குடியமர்வதில் புலிகளும் பச்சைக் கொடி காட்டியுள்ளதாகவே தெரிகின்றது. ஏனெனில் கடந்த 1991ம் ஆண்டு முதல் மன்னார்த்தீவில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம்களுக்கு புலிகளால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை புத்தளம் மாவட்டத்தில் பெரும்பாலான அகதிகளுக்கு உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகிறது. முதற்கட்டமாக வீட்டுத் திட்டத்திற்கு பணம் பெற்றவர்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

புத்தளம் பகுதியில் வெள்ளம் வரட்சி போன்ற பல இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தவர்கள் தற்போது சொந்த இடம் சென்று மீள்குடியமர ஆயத்தமாகின்றனர். இதன் முதல் கட்டமாக எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் ஆயிரம் குடும்பங்கள் வரை செல்லத் திட்டமிட்டுள்ளன.

மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளில் மீளக்குடியமர்பவர்களுக்கு அரசு பல சலுகைகளை வழங்க ஆயத்தமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மன்னார்த்தீவு, முசலி ஆகிய பகுதி மக்களே பெருமளவில் குடியேற ஆயத்தமாகி வருகின்றனர். ■

# கூட்டணிக்குள் இழுபறி!

## மும்மூர்த்திகள் ஆதிக்கம்!

**அ**ரசின் புதிய தீர்வு யோசனைகளை ஆதரிக்குமாறு ஏனைய தமிழ்க் கட்சிகளை கூட்டணி கோரி வருகிறது. அம்பாறையை விட்டுக்கொடுக்கவும், முஸ்லிம் தனி மாகாண சபை அமைக்கவும் கூட்டணியும், முஸ்லிம் காங்கிரசும் இணக்கம் கண்டுள்ளன.

இந்த விடயங்களில் கூட்டணியின் கிழக்கு எம்.பி.கள் உட்பட அங்குள்ள முக்கியஸ்தர்களின் கருத்துக்கள் கூட்டணித் தலைமையால் கேட்கப்படுவதில்லை என்று முரசு முன்பே தெரிவித்து வந்தது.

அது விஷமப் பிரசாரம் என்றும், கூட்டணிக்குள் ஒத்த கருத்து நிலவுவதாகவும் கூட்டணித் தலைவர் அறிக்கை விட்டிருந்தார். ஆனால் சமீபத்தில் கூட்டணியின் மட்டக்களப்பு கிளையினர் தலைமையின் முடிவுக்கு முற்றிலும் மாறான தீர்மானம் எடுத்துள்ளனர். அதனைப் பத்திரிகைகளுக்கும் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் எந்தவொரு நிலப் பகுதியும் பிரித்துக் கொடுக்கப்பட முடியாது என்று மட்டக்களப்புக் கிளை தீர்மானம் இயற்றியுள்ளது.

கூட்டணி திருமலைக் கிளையும் அவ்வாறு தீர்மானம் இயற்ற முயன்றதாகவும், திருமலை கூட்டணி முக்கியஸ்தரான ஒரு பிரதிநிதி தடுத்துவிட்டதாகவும் தெரிய வருகிறது. ■

# இறுக்கமாகிறது புலிகளின் பிடி

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே இராணுவம் மொத்தம் 44 படை முகாம்களை மூடியது. இதனால் கிழக்கில் புலிகள் வசம் 2300 சதுர கிலோ மீட்டர் சென்றது. மூதூரில் 8 முகாம்களை கடந்த வாரம் மூடியதனால் மேலும் 1000 சதுர கிலோ மீட்டர்வரை புலிகளிடம் வந்தடைந்துள்ளன.

தற்போது வாழைச்சேனையிலிருந்து வெருகல் வரையிலான கடற்கரையோரப் பிரதேசத்தையும் திருமலை-மட்டக்களப்பு பாதையின் மேற்கிலுள்ள காடுகளையும் புலிகள் தம்வசம் வைத்துள்ளனர். மூதூர் பிரதேசத்திலுள்ள 8 முகாம்களும் மூடப்படுவதால் வெருகல் ஆற்றிலிருந்து வடக்கே மூதூர் வரையும் தொடர்ச்சியான பெரும் பரப்பு புலிகளுக்குச் சென்றுவிடுகிறது. இப்பிரதேசத்தில் உள்ள சில பொலிஸ் நிலையங்கள் இராணுவப் பாதுகாப்பின்றிச் செயற்படுவது கடினமாகும். ■

# செய்தியில் ஒரு தவறு!

**க**டந்த வாரம் முரசில் புலிகளின் ஷெல் வீச்சு பற்றிய செய்தியில் ஒரு தவறு நேர்ந்துள்ளது. 17.10.97 மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் புலிகளின் ஷெல் தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும் 14 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றும் 14 பொதுமக்கள் காயமடைந்தனர் என்பதே சரியானது. மட்டக்களப்பு பதிப்பில் மட்டும் அத்தவறு திருத்தப்பட்டிருந்தது. தவறாக குறிப்பிடப்பட்டதற்காக வாசகர்களிடம் முரசு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறது–

–ஆர்–



படிப்பகம்

# அரசியல், இராணுவ, பொருளாதார நெருக்கடி

## கொழும்பு ஆங்கில இதழ் விபரிப்பு

"இரத்மலானை விமான நிலையத் தாக்குதல் பற்றிய தகவல்களைத் தொடர்ந்து எல்.ரி.ரி.ஈ.யினரின் பல்வேறு தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தமையினால் படையினரும் ஏனையோரும் எச்சரிக்கையாகவே இருந்து வந்தனர். பல பயிற்சிகளும் வகுப்புகளும் இடம் பெற்றுவந்தன. இதனால் கடந்த 15ம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பை அடுத்து அதிக பதற்ற நிலை ஏற்படவில்லை.

யாலவிலுள்ள தேசிய வனத்தில் கொட்டகைகள் எரிக்கப்பட்டமை, கதிர்காமம் பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டமை ஆகியவை-வடக்கே இடம்பெறும் இராணுவ நடவடிக்கையைத் திசைதிருப்ப மேற்கொள்ளப் பட்டவை என்றாலும், தெற்கில் அரசியல் ஸ்திரத்தன்மையைச் சிதறடிக்கவும் நடத்தப்பட்டன என்பதும் தெளிவாகின்றது.

அரசாங்கத்தை, பொருளாதார மற்றும் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் முறியடிக்கவே புலிகள் இவ்வாறு தாக்குதல்களை மேற்கொள்ளுகின்றனர். இராணுவ ரீதியில் அரசாங்கத்துக்கு பலத்த நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் பொருளாதாரத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியும். இதில் ஒரு நடவடிக்கையே கலதாரி குண்டுவெடிப்பு." இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' விபரித்துள்ளது.

"அண்மைக் காலங்களில் நாட்டின் பொருளாதாரம் மேம்பாடடையும் அறிகுறிகள் தென்பட்டன. சுற்றுலாத்துறையும் முன்னேற்றமடையத் தொடங்கியது. மத்திய வங்கித் தாக்குதலை அடுத்து மந்தமாகிய பிற நாட்டு முதலீட்டு அம்சங்கள் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்தன. ஹொங்கொங் கைமாறியதை அடுத்து மலேசியாவின் பொருளாதாரத்தில் அமுக்க நிலை ஏற்பட்டது. இக்கட்டத்தில் தென்கிழக்கு ஆசியாவின் சுற்றுச் சூழல் நிலைகளை கருத்தில் கொண்டு-இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளினால் இங்கு பொருளாதார முன்னேற்றம் காண வாய்ப்புகள் விரிவடைந்தன.

இக்காலகட்டத்தைக் கருத்தில் கொண்டு எல்.ரி.ரி.ஈ. தக்க சமயத்தில் செயற்பட்டுள்ளது. ஏற்கனவே அவ்வியக்கத்தின் மீது மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குவிந்திருந்தன. இதனால் தான் மக்கள் நடமாட்டமற்ற போயா நாளை தனது தாக்குதலுக்குரிய நாளாகத் தேர்ந்தெடுத்திருந்தது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை இக்குண்டுத் தாக்குதல் வெகுவாகப் பாதிக்கப் போவதில்லை என்று அரசாங்கம் கூறிய போதிலும், அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நிச்சயமான பாதிப்பை இச்சம்பவம் ஏற்படுத்தவே செய்யும்.

அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புப் பிரச்சனையில் நாடு மிகச் சிக்கலான நிலையில் உள்ளது. இதிலிருந்து மீள்வதானால் ஒற்றுமையாக- தேசிய நலனை முதன்மைப் படுத்தி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வர வேண்டியது அவசியமாகும். ஆனால் துரதிஷ்டவசமாக நாட்டின் வரலாறே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சத்தில் கூட ஒற்றுமைக்கு இடம் கொடுப்பதாகத் தெரியவில்லை," என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.




## "ஒரே தேசம், ஒரே மக்கள்"

இன்றைய அரசாங்கத்தைப் போல சமாதானம் பற்றியும், அரசியல் தீர்வு பற்றியும் அதிகம் பேசிய, அரசாங்கங்கள் இதற்கு முன்னர் இருந்ததில்லை. ஆனால் சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலான தூரம் அதிகமாகி வருகிறது.

திடீரென்று ஒருநாள் தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பாக ஜனாதிபதி கடும் உத்தரவும், காலக்கெடுவும் விதித்ததாக சில பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. பாராட்டுக்களும் வெளியாகின. காலக்கெடுவும் முடிந்துவிட்டது. மாற்றத்தை கண்ணிலும் காணவில்லை.

சமாதானத்துக்காக உதவ என்று வெண்தாமரை இயக்கத்தால் வெளியிடப்பட்டு பாடசாலை மாணவர்களிடம் விற்பனை செய்யப்பட்ட சீட்டின் முகப்பைப் பாருங்கள். எவ்வாறான சமாதானத்தை விரும்புகிறார்கள்?

தகவல். எஸ். சத்யா, நுவரெலியா.

## ஏற்கப்பட்ட கோரிக்கைகள்

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணசபை நிருவாகத்துக்கும் அகில இலங்கைச் சாரதிகள் சங்கத்தைச் சேர்ந்தோருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில், சாரதிகள், மேலதிக நேரக்கொடுப்பனவை 160 மணித்தியாலங்கள் வரை அனுமதித்தல், நிரந்தரமாக்கலும் பதவி உயர்வு விடயங்களிலும் கரிசனை செலுத்துதல், கடமை நிமித்தம் வெளி இடங்களில் இருந்து வரும் சாரதிகளுக்கு திருக்கோணமலையில் தங்குமிட வசதி ஏற்படுத்தல், சாரதிக் கடமை சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ஆகிய நான்கு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக முரசுக்குத் தொழிற்சங்கவாதிகள் தெரிவித்தனர்.

14.10.97 அன்று இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில் அதிகாரிகள் சார்பில் பதில் பிரதம செயலர் திரு.க. பரமலிங்கம், உதவிச் செயலர் செல்வி விஜயலட்சுமி, நிருவாக உத்தியோகத்தர் திரு. ஜீவானந்தம், செல்வி சத்தியா ஆகியோரும் தொழிற்சங்க சார்பில் சாரதிகள் சங்கத் தலைவர் திரு. ஜயதிலக பத்திரன, திருக்கோணமலைக் கிளைத் தலைவர் திரு. சிசரகுமார, செயலர் ஆ. பாலசுப்பிரமணியம், பொருளாளர் மு. சிவபாதம், உறுப்பினர் எம். தேவராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தங்கள் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்த திரு. பரமலிங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வார் எனத் தாம் நம்புவதாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முரசு நிருபரிடம் தெரிவித்தனர்.

## ரெலோ முகாம் தாக்குதல்-மூவர் பலி!

கடந்த 15.10.97 அன்றிரவு மட்டக்களப்பு-ஆரையம்பதியில் நிலை கொண்டுள்ள ரெலோ இயக்கத்தினரின் முகாமைத் தாக்குவதில் ஈடுபட்ட புலிகள் இயக்கத்தினர் மூவரைக் கொன்று ஒருவரைப் பிடித்துச் சென்றுள்ளனர். புலிகள் அங்கிருந்த சில ஆயுதங்களையும் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

## செயல் இழந்த தொலைபேசிகள்

(திருமலை நிருபர்)

தோப்பூர் பகுதியிலுள்ள நாற்பத்திரண்டு தொலைபேசிகளும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஸ்தாபனத்தாரால் செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புத் துறையினரின் ஆலோசனையின் பேரிலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. அப்பகுதியிலுள்ள இராணுவ முகாம் இடமாற்றப்பட்டதையடுத்து தொலைத்தொடர்பு நிலைய உபகரணங்களுக்குப் பாதுகாப்பு வழங்கமுடியாத நிலையிலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரியில் பொருத்தப்பட்ட உபகரணங்கள் மூலம் தோப்பூர் தபால் நிலையம் உட்பட அலுவலகங்கள் தனியார்களுக்கு நீண்ட காலத்தின் பின் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. இது அங்கு வாழும் மக்களுக்குப் பெரும் பயனுடையதாகவுமிருந்தது.

கடந்த வாரம் இவ்வுபகரணங்கள் கழற்றப்பட்டதால் தொலைபேசிகள் செயலிழந்ததையடுத்து மீண்டும் மக்கள் அசௌகரியத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்து வசதிகள் இப்பகுதிகளுக்குப் போதிய அளவு இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

தொலைபேசிகளை மீளவும் இயங்க வைப்பதற்கான பாதுகாப்புத் துறையின் அனுமதி விரைவில் கிடைக்கக்கூடும் என நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பப்படத்துக்கும் சோதனை!

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு நகரிலுள்ள தனது கணவருக்கு பகலுணவை எடுத்து வந்து கொண்டிருந்தாள் மனைவி. வீட்டிலிருந்து அவள் புறப்பட்டு கணவனிருக்கும் இடத்திற்கு வர நான்கு முறை சாப்பாட்டுப் பார்சலை சோதனை நிலையங்களில் கொடுக்கவேண்டி வரும். படையினர் அதை நசித்து, உருட்டிப் பிரட்டிப் பார்ப்பர்.

படையினர் அவ்வாறு உருட்டுவதற்குப் பயந்து, பப்படங்களை வேறு 'சொப்பிங் பேக்'கில் போட்டு, வெளியே தெரியக் கூடியவாறு கொண்டு வந்து கொண்டிருந்தாள் மனைவி. அது நகருக்குள் நுழையும் கடைசி சோதனை நிலையம்.

அங்கு பரிசோதனையிலீடுபட்டிருந்த ஒரு சிப்பாய், அந்த சொப்பிங் பேக்கினுள்ளிருப்பதை "மொணவத" (என்ன?) என்றார்; அவளோ "பப்படம்" என்றாள். பப்படம் ஊதியிருந்ததை அவதானித்த சிப்பாய், இருகைகளாலும் பிடித்து நசித்தார். உடனே பப்படம் சுக்குநூறாகியது.


## 250 புலமைப் பரிசில்கள்

முதன்முதலாக குழந்தைகளுக்கான கம்பியூட்டர் பாடத்தை புலமைப்பரிசில் மூலம் அறிமுகப்படுத்திய எமது நிறுவனம், உங்கள் குழந்தைகளும் ரூபா **5000** பெறுமதியான கீழ் கண்ட பாடநெறியை **டிசம்பர் விடுமுறைக் காலத்தில்** இலவசமாக புலமைப்பரிசில் மூலம் கற்று கம்பியூட்டர் உலகிற்கு காலடி எடுத்துவைக்க இன்னுமொரு சந்தர்ப்பத்தை பெருமையுடன் வழங்குகின்றோம்.

- Computer Technology.
- Setting up Hardware and Software.
- Use of Soft ware Packages.
- Application of Microprocessor based Technology in the field of music.
- Internet & Email Application.

உங்கள் குழந்தைகளும் புலமைப்பரிசைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுவே: கீழே உள்ள கூப்பனை நிரப்பி அத்துடன் ரூபா **100** காசுக்கட்டளையாக கீழ்கண்ட முகவரிக்கு **22-11-1997** அன்றோ, அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி உங்கள் குழந்தையை புலமைப் பரீட்சையில் தோற்ற வாய்ப்பளியுங்கள்.

(காசுக்கட்டளை வெள்ளவத்தை தபாற்கந்தோருக்கு எடுக்கப்படல் வேண்டும்.)

பரீட்சைக்கான நேரம், திகதி, இடம் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அறிவிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

**Metro Computer World**
**17, Charlemont Road, Wellawtta, Colombo-06.**

*Specimen Form*

Full Name:.....
Address:.....
School:..... Class:.....
Sex:..... Age:..... Phone:.....

முதற்தொகுதி மாணவர்கள் இப்பாடநெறியை முடித்து நவம்பர் மாதத்தில் வெளியேறுகிறார்கள். அவர்களிற்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஜனவரி 1998 இல் நடைபெறும்.

இப்பாட நெறி ஆரம்பமாகும் திகதி–டிசம்பர் **10,1997**



## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு

**SHAKTHY SARAVANA,**
**8/2, SRI SIDDARTHA ROAD, KIRILAPONE, COLOMBO-5.**
**TELE PHONE: 823465.**
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

**SHAKTHY SARAVANA,**
**82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE.**
**TELE PHONE: 026-20347**

வியாழன் விடுமுறை



## மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் சந்திக்கலாம்
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
கீழ்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.

1. ஒட்டமாவடியில் நவம்பர்–5,6 ஆம் திகதிகளில் Dr.முகைதீன் டிஸ்பென்செரி, ஒட்டமாவடி.
2. கல்முனையில் நவம்பர்– 8,9,10,11 ஆம் திகதிகளில் T.M.M.பாமசியிலும். T.P. 065-29329
3. வவுனியாவில் நவம்பர்– 15,16,17 ஆம் திகதிகளில் T.P. 024-22074ல் முன் கூட்டியே பதிவு செய்யவும். வன்னியில் ஞான வைரவர் கோவில் வீதி, வன்னி INN இல் சந்திக்கலாம். கவனத்திற்கு! புதிய செல்டெல்–No. 072-609388
4. கொழும்பில் ஒக்டோபர் 22 முதல் 30 வரை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**DR. P. ARUMUGAM,**
AHAMED TOURIST INN.
Bang Bang Building No. 10,
Reclamation Road,
(Entrance: Bankshall Street, Opposite Ranjanas)
COLOMBO-11. T.P. 436383, 436390

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல்-NO. 072-609388



## கொழும்பிலும் கண்டியிலும் இரு இலவசக் கருத்தரங்குகள்

**சுவிற்ஸர்லாந்தில் ஹொட்டல் நிர்வாகத்துறையில் டிப்ளோமா பயிற்சி நெறியில் சேருங்கள்!**

சுவிற்ஸர்லாந்திலுள்ள சுவிஸ் ஹொட்டல் நிர்வாகப் பள்ளியின் இலங்கைப் பிரதிநிதிகளால் மேற்படி பயிற்சி நெறியுடன் தொடர்புடைய இரு கருத்தரங்குகள் கீழ் கண்டுள்ளபடி நடைபெறவுள்ளன:

10.11.1997– காலை 9.30 முதல் பகல் 1.00 மணி வரை.
இடம்: ஹொட்டல் சஃபையர், வெள்ளவத்தை, கொழும்பு.

13.11.1997– காலை 9.30 முதல் பகல் 1.00 மணி வரை.
இடம்: குவீன்ஸ் ஹொட்டல், கண்டி.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இக்கருத்தரங்குகளில் பங்குபற்ற அழைக்கப்படுகிறார்கள்.

**இக்கருத்தரங்குகளில் சேர்வதற்கான தகைமை:**

ஜி.சீ.ஈ. (சா/த)- ஆங்கிலம் சித்தியடைந்திருக்க வேண்டும்.
18 வயதுக்கு மேல்.

இக்கருத்தரங்குகளில் பெற்றாரும் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

அனுமதிக்கான நேர்முகப்பரீட்சைகள் வேலை நாட்களில் தினசரி காலை 8.30 முதல் மாலை 5.00 மணிவரை எமது அலுவலகத்தில் நடைபெறுகின்றன.

**தலுவத்த & ஜாஃபே அசோசியேற்ஸ்,**
**L.G. 15, பீப்பிள்ஸ் பார்க், புறக்கோட்டை, கொழும்பு-11.**
**தொலைபேசி:320139**





## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில், கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

*தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**பி.கே. சாமி J.D.G.A.N&JP**
**ஸ்ரீ துர்கா தேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்**
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, மே பில்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பதுங்கி இருக்கும் படையணிகள்

# காத்திருக்கும் புலியணிகள்



முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இராணுவரீதியான அணுகுமுறைகள் தற்போது மேலோங்கி உள்ளன.

கொழும்பு குண்டுவெடிப்பை அடுத்து ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன.

**புலிகள் குண்டுவெடிப்பு நடத்தினால் தமிழர்கள் தாக்கப்படுவார்கள் என்பதுபோலவும், ஆனால் அரசாங்கம்தான் கடும் முயற்சி எடுத்து பாதுகாப்பு வழங்கியது போலவும் ஜனாதிபதியும், பிரதி பாதுகாப்பு அமைச்சரும் கூறியுள்ள கருத்துக்கள் அர்த்தம் கொள்ள வைக்கின்றன.**

கொழும்பு குண்டுவெடிப்பு நடைபெற்ற பின்னர் தமிழர்களைத் தாக்க வேண்டும் என்ற பரபரப்போ, பதற்ற நிலையோ தலைநகரில் எங்கும் காணப்படவில்லை.

கொழும்புக்குள் கரும்புலிகள் பலர் நிற்கிறார்கள். லேக் ஹவுசுக்குள் பலர் புகுந்துவிட்டனர் என்ற செய்திகளும், புரளிகளும் இனபேதம் இல்லாமல் சகலரிடமும் ஒருவிதமான செய்தி அறியும் சுவாரசியத்தையே தோற்றுவித்திருந்தன.

**'போயா தினத்தை தெரிவு செய்து புலிகள் தாக்குதல் நடத்தியது உயிரிழப்புக்களை குறைக்கத்தான்' என்று சிங்கள மக்கள்கூட பேசிக்கொண்டதையும் கேட்க முடிந்தது.**

கொலன்னாவை எண்ணெய்க் குதம் தாக்கப்பட்டபோதும், மத்திய வங்கி குண்டு வெடிப்பின் பின்னரும் கொழும்பில் ஆங்காங்கே இனப்பதற்ற உணர்வுகள் சற்று தலை காட்டியது உண்மைதான். ஆனால் கலதாரி ஹொட்டல் குண்டு வெடிப்பின் பின்னர் அவ்வாறான இனப்பதற்ற நிலை எழவில்லை.

**பொருளாதார நெருக்கடியையும், வெளிநாட்டவர்களின் வருகையைத் தடுக்கவும் நடத்தப்பட்ட தாக்குதல் என்று சாதாரண மக்களும் உடனடியாக புரிந்துகொள்ளக் கூடியதாகவே கலதாரி ஹொட்டல் குண்டு வெடிப்பு அமைந்திருந்தது.**

அதனால்தான் இன குரோத உணர்வுகள் தலைதூக்கவில்லை.

அப்படியிருக்கும்போது "கொழும்பில் தமிழருக்கு எதிரான வன்செயல் இடம்பெற விடமாட்டோம்" என்றும் "தமிழர்களின் பாதுகாப்பை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது" எனவும் திரும்பத் திரும்பக் கூற வேண்டிய அவசியம் என்ன வந்தது?

**இவ்வாறான பேச்சுக்கள் இனி ஒரு குண்டு வெடித்தால் தமிழர்களை தாக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்திவிடக்கூடும்.**

சகல பாதைகளும் ரோமாபுரிக்கே என்பதுபோல, இனப்பிரச்சனை, மற்றும் யுத்தம் தொடர்பாக அரச தரப்பினர் கூறும் ஒவ்வொரு கருத்தும் உலக அனுதாபத்தையும், ஆதரவையும் தம் பக்கம் திரட்டிக் கொள்ளும் நோக்கத்துடன்தான் அமைகின்றன.

**கொழும்பின் பாதுகாப்பை அரசால் உத்தரவாதப்படுத்த முடியவில்லை என்று உலகம் அறிந்துவிட்ட ஒன்றை மறைக்க, கொழும்பில் உள்ள தமிழர்களை பாதுகாத்துவிட்டோம் என்று கூறத்தொடங்கினார்கள்.**

நடக்கக்கூடிய வாய்ப்பே இல்லாமல் இருந்த இனவிரோத வன்செயல்களை, நடக்க இருந்த சம்பவமாக சித்தரித்து, அதைத் தடுத்துவிட்டதாகக் கூறி, கொழும்பு பாதுகாப்பு தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் காட்ட அரசாங்கம் செய்த முயற்சிதான் அத்தகைய பேச்சுக்கள்.

இலங்கை அரச வானொலியில் விஷமத்தனமான பிரசாரம் நடத்தப்பட்டது. புலிகள் பௌத்த மதகுருவுக்கு கைக்குண்டு வீசியதாகவும், அதனால் அவர் கொல்லப்பட்டும் கூட கலவரம் ஏற்படவில்லை எனவும் கூறப்பட்டது.

இந்தப் பிரசாரத்தை செவிமடுக்கும் ஒருவருக்கு என்ன தோன்றும்? 'நாலு தமிழனுக்கு சாத்தியிருக்கலாம்' என்றுதான் தோன்றும்.

**இனக் கலவரத்தை நியாயமான விஷயம் போலவும், அரசின் கருணையால் அது தடுக்கப்பட்டதுபோலவும் அரசாங்கமும், அதன் பிரசார சாதனங்களும் கூறத் தொடங்கியிருப்பது, மறைமுகமாக தமிழ் மக்களை மிரட்டுவது போலவும் அமைந்திருக்கிறது.**

அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம் என்றும், சமாதானத்தின் அவசியம் பற்றியும் மிக உரத்த குரலில் கூறிக்கொண்டு, தமிழ்பேசும் மக்களை பணிந்து போகச் செய்யக்கூடிய அணுகுமுறைகள்தான் மேலோங்கியுள்ளன.

தமிழர்களுக்கு பிரச்சனையே இல்லை என்று கூறினார் முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா. அவரை உடனடியாக அடையாளம் தெரிந்தது. ஆனால் இப்போது வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகிறார்கள்.

அரசியல்தீர்வு பற்றிய பேச்சுக்கள் இனிப்பாக உள்ளன. காணி அதிகாரம் பிராந்தியங்களுக்கு கொடுக்கலாம் என்கிறார் பேராசிரியர் பீரிஸ்.

**இதுவரை முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுகளில் மிக முன்னேற்றமானவை அரசின் தீர்வு யோசனைகள் என்று கண்ணை மூடிக் கொண்டு சிலர் புகழ்கிறார்கள். முன்னாள் சாணக்கியர்களான கூட்டணியினரும் அதில் அடக்கம்.**

ஆனால் ஒரு கையால் தருவதைத்தான் முன்னேற்றம் என்கிறார்கள். தந்ததை மறுகையால் எடுக்கவும் வழிகள் உள்ளதை பார்க்கிறார்கள் இல்லை.

**ஒரு உதாரணம்; பிராந்திய சபைகளுக்கு காணி அதிகாரம் இருக்கும். ஆனால் பிராந்தியங்களில் உள்ள ஆறுகள் சார்ந்த நிலப்பகுதிகள் மத்திய அரசிடம் இருக்கும். மத்திய அரசு பிராந்தியத்தில் ஒரு நிலப்பகுதியை தேவை கருதி எடுத்துக்கொள்ளலாம். இதுதான் ஒரு கையால் கொடுத்து மறுகையால் எடுப்பது என்பது.**

இதனைத்தான் முன்னேற்றமான அம்சங்கள் என்று சில விமர்சகர்களும் புழுகிக் கொண்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் முதுகெலும்பில்லாத தமிழ் அரசியல் கட்சிகளும், தீர ஆராயாமல் காற்றடிக்கும் பக்கம் சாயும் விமர்சகர்களும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்ற அரசாங்கத்துக்கு உதவுகிறார்கள்.

**உலக அரங்கில் அரசின் சமாதான இமேஜை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கும் மேற்கண்டவர்களே பங்காளிகளாகவும் மாறி உள்ளனர்.**

ஒரு விடயம் உறுதி. அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தை உடனடியாக முன்வைத்து அமுல் நடத்த பொதுஜன முன்னணியும் விரும்பாது.

ஏனெனில், அரசியலமைப்பு சீர்த்திருத்தத்தில் ஜனாதிபதி ஆட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அப்படியாகிவிட்டால் ஜனாதிபதி சந்திரிக்கா பிரதமர் சந்திரிக்காவாக பாராளுமன்றம் செல்ல வேண்டும்.

பெரும்பான்மை பலம் இல்லாத பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் முன்னால் திணற வேண்டி இருக்கும். சர்வ அதிகாரம் உடையவர் என்பதால் அடங்கி இருக்கும் சொந்த கட்சிக்காரர்கள் கூட தோளில் ஏறத் துணிவர்.

எனவே அடுத்த தேர்தல் நெருங்கும் போதோ, அல்லது ஒரு தேர்தல் நடத்தினால் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்ற சூழலிலோதான் அரசியல் சீர்த்திருத்தத்துக்கு அரசு முன்வரும்.

ஆனால், அந்த உண்மையை மறைத்து பொதுஜன முன்னணியினர் பழிபோட ஐ.தே. கட்சி இருக்கவே இருக்கிறது. அவர்கள் தான் தடை என்று சொல்லிக் கொண்டிருக்கலாம்.

-●●-

'ஜயசிக்குறுய்' படையினரால் புளியங்குளத்தை சுற்றிவளைக்கவோ, மாங்குளத்தை கைப்பற்றி புலிகளை பின்னுக்குத் தள்ளவோ முடியவில்லை.

ஒரே நேரத்தில் பல சண்டைக் களங்களை திறந்து புலிகளின் அணிகளை பல திசைகளில் இழுத்துத் தாக்கும் தந்திரமும் உரிய பலனைப் பெறவில்லை.

**ஆனாலும் வன்னியில் புதிய படைக்குவிப்புக்கள் நடந்துவருகின்றன. கிளிநொச்சி இராணுவ நிலைகளுக்கும் யாழ் குடாநாட்டில் இருந்து கணிசமான படையினர் சென்றுள்ளனர்.**

இதனால் யாழ் குடாநாட்டில் நகருக்கு வெளியே பல காவலரண்கள், சிறு முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

அங்குள்ள படைகளை நகர்த்தி வன்னிப் போர்முனைக்கு அனுப்பிவிட்டு, யாழ் குடாநாட்டு மக்களின் சௌகரியத்துக்காக காவலரண்கள் குறைக்கப்பட்டுள்ளதாக கூறுவது தான் வேடிக்கை.

**'ஜயசிக்குறுய்' படையினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு கிட்டத்தட்ட 25 ஆயிரம் படையினர்வரை களத்தில் உள்ளதாகத் தகவல். 30 ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.**

பருவ மழைக் காலம் ஆரம்பமாகி உள்ளதால் புலிகள் பாரிய ஊடறுப்புக்களை மேற்கொள்ளலாம் என்று படையினர் எதிர்பார்க்கிறார்கள்.

புலிகளின் ஊடறுப்பில் இருந்து தப்புவதற்கு படையினர் தற்போது நம்பியிருக்கும் உத்திகள் பின்வருமாறு:

**1. புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடையே கிழக்குப் புறமாக உள்ள காட்டுப் பகுதிகள் ஊடாக புலிகள் முன்னேறி வராமல் தடுப்பது.**

**2. புலிகளை தற்காப்பு நிலைக்குள் முடக்கி வைத்திருக்கக்கூடிய நகர்வுகளை அடிக்கடி மேற்கொள்வதன் ஊடாக, புலிகள் பாரிய தாக்குதலுக்கு தயாராகாமல் தடுப்பது.**

**3. படைகளை பெருந்தொகையாக குவிப்பது மூலம் புளியங்குளத்தை சுற்றிவளைத்து வியூகம் வகுப்பது.**

இந்த மூன்று நோக்கங்களையும் நிறைவேற்ற படையினர் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

வவுனியா- யாழ் பிரதான சாலை வழியாக முன்னேறும் முயற்சியை படையினர் கைவிட்டுள்ளனர்.

படையினரின் முன்னேற்றத்தை பிரதான சாலை வழியாக எதிர்பார்த்த புலிகள் பலமான பங்கர்களை அமைத்துள்ளனர். எதிர்த் தாக்குதலுக்கான தயாரிப்புக்களை செய்துள்ளனர்.

எனவே பிரதான சாலையைத் தவிர்த்து விட்டு காட்டு வழியாக முன்னேறலாம் என்று படையினர் நினைக்கிறார்கள்.

காட்டுப்பகுதி ஊடாக நகர்ந்து கரப்புக்குத்தி, கற்கிடங்கு, விஞ்ஞான குளம் பகுதிகளை கைப்பற்றியபோது தமது திட்டம் பலிக்கத் தொடங்கிவிட்டதாகவே படையினர் நினைத்தனர்.

காட்டுப்பகுதியூடாக நகர்ந்து பிரதான சாலையை பக்கவாட்டால் நெருங்கும் உத்தி பயன் அளிக்கப்போகிறது என்று படைத்தரப்பு நினைத்தது.

ஆனால் கரப்புக்குத்தியில் படையினரின் விநியோகத்தளம் புலிகளால் தகர்த்தெறியப்பட்டபோது, படையினரால் பிரதான சாலையை பக்கவாட்டால்கூட நெருங்க இயலவில்லை.

**தற்போது ஜயசிக்குறுய் படையினரின் நிலைகள் 'வளைவான கைத்தடி கொண்ட குடைத்தடி போல' உள்ளதாக புலிகள் விபரிக்கின்றனர்.**

புளியங்குளம் சந்தியை கைப்பற்ற முடியாத படையினர், புளியங்குளத்தில் இருந்து கிழக்கே உள்ள காடுகளுக்கு ஊடாக நெடுங்கேணி, நயினாமடு, பெரிய மடு பகுதிகளை அண்டிய பகுதிகளில் தமது நிலைகளை அமைத்துள்ளனர்.

இங்கு நிலை கொண்டுள்ள படையினருக்கு நெடுங்கேணியில் இருந்தும், ஓமந்தையில் இருந்தும் விநியோகம் நடைபெற்று வருகிறது.

வவுனியா- யாழ் சாலை, மற்றும் நெடுங்கேணி, நயினாமடு ஊடாக படையினர் முன்னேறிய காட்டுப்பகுதிகள் என இருமுனைகளையும் சேர்த்துப் பார்த்தால் ஜயசிக்குறுய் படையினர் 30 கிலோமீட்டர் நீளமான களத்தில் நிலை கொண்டுள்ளனர்.

எனினும் பிரதான இலக்கான புளியங்குளம் சந்தியில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில்தான் பலத்த மோதல்கள் நிகழ்ந்தன.

அதுபோல பக்கவாட்டுப் பக்கத்தால் சென்று கனகராயன் குளப்பகுதியை படையினர் நெருங்க முற்பட்டபோதும் அங்கிருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் வைத்து புலிகள் தாக்கினார்கள். அதனால் படையினரால் கனகராயன் குளத்தை கைப்பற்ற முடியவில்லை.

மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் கரிப்பட்ட முறிப்புவரை சென்ற படையினரால் மாங்குளம் நோக்கி நகர முடியவில்லை.

படையினர் ஒரு குறிப்பிட்டளவான தூரம் வரை புல்டோசர்போல புலிகளை பின்னே தள்ளிக் கொண்டு போனார்கள்.

ஆனால் படையினர் தங்கள் பிரதான இலக்கை நோக்கி செல்வதற்கு மட்டும் புலிகளின் அணிகள் அனுமதிக்கவில்லை.

படையினர் குறிவைக்கும் பகுதிக்கு கிட்டே செல்லும்போது, புலிகளின் தாக்குதல்கள் உக்கிரம் பெறுகின்றன. அதனால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலைதான் 'ஜயசிக்குறுய்' படைகளின் அனுபவமாக உள்ளன.

**புளியங்குளத்துக்கு செல்லும்வரை கைக்கெட்டியது வாய்க்கும் எட்டிக் கொண்டுதான் இருந்தது. அங்கிருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் உள்ள புளியங்குளச் சந்தியைப் பிடிக்க படாதபாடு பட்டபின்னர்தான் படையினருக்கு துரதிஷ்டம் தொடங்கியது.**

**அதன்பின்னர் எடுத்த முயற்சிகள் யாவும் சாண் ஏற முழம் சறுக்கிய கதையாகவும், கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலையிலுமே தொடர்கின்றன.**

இதற்கிடையே மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் கரிப்பட்ட முறிப்பில் புலிகளின் முற்றுகைக்கு உள்ளான அணியினர் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து மீண்டுள்ளனர்.

பெரிய மடுவில் உள்ள தமது பின்னரங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளனர்.

ஆனால் மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் இருந்து பின்வாங்கி சென்றுள்ளனர். அதனால் ஒட்டிசுட்டானில் இருந்து மாங்குளம் வரையான புலிகளின் போக்குவரத்தும், விநியோகங்களும் பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

**கரிப்பட்ட முறிப்பில் நிலைகொண்ட படையினரை மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் இருந்து பின்னடையச் செய்துள்ள புலிகள், தொடர்ந்து தாக்குதல் தொடுத்து வருகின்றனர்.**

எனினும் தமது முற்றுகையை புலிகளால் தொடரமுடியாமல் போயுள்ளது. படையினரின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததும், படைக்கலப் பலம் அதிகமாக இருந்ததும் பிரதான காரணமாகும்.

நீண்ட முற்றுகையில் படையினரை களைப்படைய செய்தபின்னரே புலிகள் நெருங்கிச் சென்றிருக்க முடியும். அதற்கு முன்பாக நெருங்கிச் சென்றால் புலிகள் தரப்பில் பாரிய இழப்பும் ஏற்படும்.

அடர்ந்த சேனைக் காடுகளுக்குள்ளேயே படையினர் கரிப்பட்ட முறிப்பு பகுதியில் பதுங்கிக் கிடந்தனர். அவசரப்பட்டு நெருங்கி உட்புகுந்தால் பொறிக்குள் சிக்கியதாகிவிடும் என்பதால்தான் புலிகள் நிதானம் காட்டினர்.

புலிகளின் முற்றுகையில் இருந்து தப்பிய படையினர் கரிப்பட்ட முறிப்பில் இருந்து பின்னடைந்துள்ளனர்.

பெரிய அளவில் முன்னேறினால் புலிகளின் கவனத்தை கவர்ந்து பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டும் என்பதால், தற்போது புதிய உத்தி ஒன்றை படையினர் கையாளுகின்றனர்.

**தமது முன்னரங்க நிலைகளில் இருந்து சிறு சிறு குழுக்களாகச் சென்று காடுகளுக்குள் பதுங்கி இருப்பது, புலிகளின் நடமாட்டத்தை கண்டால் தாக்குவது என்பது தான் புதிய உத்தி.**

அதாவது மரபுப் படையினர் கெரில்லா உத்திகளை கையாளத் தொடங்கியுள்ளனர்.

கரிப்பட்ட முறிப்பு பகுதியில் கடந்த 21.10.97 அன்று அவ்வாறு பதுங்கி இருந்து படையினர் நடத்திய தாக்குதல் ஒன்றில் மூன்று புலிகள் பலியாகினர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி கருணா தலைமையிலான படையணியைச் சேர்ந்தவர்களே அவ்வாறு பலியானதாகத் தகவல்.

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் புலிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த கரிப்பட்ட முறிப்பு காடுகளுக்குள் பதுங்கி இருந்து தாக்க படையினர் முயன்று வருகின்றனர்.

பரந்த காட்டின் ஒவ்வோர் அங்குலப் பகுதியிலும் புலிகள் நிற்க முடியாது. இரவோடு இரவாக காட்டுப் பகுதிகள் சிலவற்றின் ஊடாக சிறு சிறு குழுக்களாக படையினர் நடமாட முடிவது அதனால்தான்.

**வியட்நாட் காடுகளுக்குள் அமெரிக்க இராணுவம் சிறு சிறு குழுக்களாக அலைந்து திரிந்தது. அமெரிக்கப் பயிற்சியால் இலங்கைப் படையினரும் அதே பாணியில் நடமாட நினைக்கக்கூடும்.**

ஆனால் வியட்நாம் காடுகளுக்குள் அமெரிக்க படைகளுக்கு ஏற்பட்ட இழப்பு மிகப் பாரியது.

வன்னிக் காடுகள் புலிகளுக்கு பரிச்சயமானவை. அவற்றின் சூட்சுமங்களும் புலிகளுக்கே தெரியும். இந்திய கூர்க்கா படையிரும் வன்னிக்காடுகளுக்குள் ஊடுருவிச் சென்றனர்.

அவ்வாறு சென்றவர்களில் பலர் திரும்பி வரவே இல்லை. ஆனால் இலங்கைப் படையினர் தமது முன்னரங்க நிலைகளில் இருந்து அதிக தூரம் உள்ளே செல்வதாக தெரியவில்லை.

பின்வாங்கி வர வசதியாக உள்ள தூரம்வரைதான் சிறு குழுக்களாகச் சென்று காத்திருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு சிறு குழுக்களாக பதுங்கி இருப்பதால் ஒரு சாதகம் உள்ளது.

படையினரது முன்னரங்க நிலைகளை தாக்க வரும் புலிகளின் அணிகள், பதுங்கிக் கிடக்கும் படையணிகளை காணத்தவறினால் மாட்டிக்கொள்ள வாய்ப்பிருக்கும்.

அல்லது பதுங்கிக் கிடக்கும் அணிகள் தமது முன்னரங்கத்துக்கு தகவல் கொடுத்தும் எச்சரிக்கலாம்.

**அதே சமயம் புலிகளும் புளியங்குளத்துக்கு கிழக்கே காடுகள் ஊடாக பதுங்கிப் பதுங்கி இரை தேடித் திரிகிறார்கள். பதுங்கிச் சுடும் அணிகள் காட்டுக்குள் இருந்து படைநிலைகளை அவதானித்தபடி இருக்கின்றன.**

ஒரு காவலரணில் இருந்து இன்னொரு காவலரணுக்கு சிப்பாய்கள் நடந்து செல்லும் போதோ, அல்லது அவர்களது வேறு நடமாட்டம்வரையோ பொறுமையாக காத்திருந்து குறிபார்த்துச் சுடுவதுதான் இந்த அணிகளின் பணி.

பிணம்போல அசையாது கிடக்க வேண்டும். போர்க்களத்தின் வேட்டைக்காரர்கள் என்று பதுங்கிச் சுடும் அணிகளை அழைக்கலாம்.

காட்டு மரங்களில் கிளையோடு கிளையாக உருமறைப்புச் செய்யப்பட்ட தோற்றத்தோடு காத்திருப்பர். படைமுகாம் நடமாட்டங்களை தொலைநோக்கி ஊடாக அவதானித்தபடி இருப்பர். இதனால் படையினர் நடமாடவே அஞ்சும் நிலையை ஏற்படுத்துதல். எப்போதும் அச்சுறுத்தலான நிலையில் வைத்திருந்து நிம்மதியைக் குலைத்தல். களைக்கச் செய்தல் என்பவைகளையே பதுங்கிச் சுடுதல், சண்டை இல்லாதபோதும் ஷெல் ஏவுதல் போன்றவற்றின் நோக்கங்கள்.

**மரபுப்போர், கெரில்லாப் போர் போன்றவற்றின் சகல வித்தைகளையும் பரிசீலித்துப் பார்க்கும் களமாக வன்னிக் களம் மாறி இருக்கிறது.**

எப்படியாவது 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை ஒப்பேற்றிவிட்டு தம் முஸ்டிகளை உயர்த்திக்காட்டவேண்டும், அதன்பின்னர் தான் தமக்கு பாதகம் இல்லாத தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது, தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலை நடத்துவது என்று பல திட்டங்களை கையில் வைத்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

எனவே பருவமழை ஓய்ந்தாலும் வன்னிப் போர் மழை ஓயாது. ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**பொதி வருகுது,** பொதி வருகுது எண்டு சொல்லிப்போட்டு கடைசியாக வெகுஜன சபையில் வைக்கப்பட்டது பொறி. இதுவரை நடந்தது என்ன எண்ட விளக்கம்தான் பெரிய அறிக்கையாக முன்வைக்கப்பட்டது. அது புரியாமல் பச்சை அணியை கிழிச்ச தங்கள் மேதாவித்தனத்தை காட்டியவை எல்லாம் பொறிக்குள் சிக்கிய எலிகள்தான். உலகத்துக்கு கிலுகிலுப்பை காட்டும் அதிகாரத்தரப்பாரின் முயற்சியை கண்டிக்க துணிச்சல் இல்லை, பச்சை அணியை கண்டிச்ச தங்கள் வீர விமர்சனத்தை காட்டிப்போட்டினம். எதிர்காலத்தில் ஆட்சி மாறினால் நீல அணியை ஒரு பிடி பிடிச்சுப்போட்டு பச்சை அணியின் பம்மாத்துக்களை கண்டு கொள்ளாமல் இருப்பினமாக்கும்! இதுதானே தொடர் கூத்து! சரி, அறிக்கையை ஏன் பொறி என்கிறேன் தெரியுமோ? இங்கே என்னடான்னா இன்னமும் வெண்ணெயையும் காணவில்லை; தாழியையும் காணவில்லை. ஆனால் வெண்ணெய் திரண்டு வருகிறது எண்டு உலகத்தை நம்பவைக்க வைத்த பொறிதான் அந்த அறிக்கை.

**"தெரிவுக்குழுவில் உங்கள்** கருத்தைக் கூறுங்கள். உடன்படாவிட்டாலும் பரவாயில்லை. உங்கள் கருத்தையும் அறிக்கையில் சேர்த்துப் போடுகிறோம். ஆனால் சபைக்கு அறிக்கை வரும்போது மட்டும் அங்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டாம்" எண்டு சபையில் உள்ள மூன்று தமிழ்க் கட்சிகளிடமும் நீதிக்கு பொறுப்பானவர் முன்கூட்டியே வேண்டுகோள் விடுத்துப்போட்டார். பச்சை அணியிடமும் அப்படித்தான் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாம். மிஸ்டர் பொக்ஸ் வந்து நடத்திய நாடகத்தை பெரிதாக காட்டினவையல்லோ? உடன்பாடு வந்திருச்சு, திருப்பம் கண்டிருச்சு எண்டு சொல்லப்பட்டதல்லோ? அதுபோல சகல தரப்பாரும் தீர்வுகாண பல சமாச்சாரங்களில் இணக்கம் எண்டு உலகத்துக்கு காட்டிப்போட்டு, உண்டியல் குலுக்குவதுதான் திட்டமாம். உண்டியல் நிரம்பினா தங்கள் தலையில் போட்டுத்தான் உடைப்பினம் எண்ட பயத்தில்தான் பச்சை அணி சத்தம் போட்டதாம்.

**சர்வ அதிகாரம்** படைத்தவரே கூறுகிறார் 'அடுத்த ஆண்டுதான் சபைக்கு தீர்வுத் திட்டம் வரும்' எண்டு. ஆனால் அரச வானொலியும், பிரசார சாதனங்களும் "சபைக்கு வந்த தீர்வுத் திட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" எண்டு கட்சித் தலைவர்களிடம் கருத்துக் கேட்டு வெளியிடு செய்து போட்டினம். வெறும் கையால் முழம் போட்டுக் காட்ட சொல்லியோ கொடுக்க வேணும்! இந்த இலட்சணத்தில அரச வானொலி 'முரசை' மறைமுகமாகச் சாடுகிறது. தீர்வுக்கு எதிராக பிரசாரம் நடக்குதாம். முதலில் தீர்வுதிட்டம் எண்டால் என்ன? தீர்வு யோசனை எண்டால் என்ன? எண்ட வேறுபாட்டை விளக்கிப்போட்டு மோதிக்க வரலாமல்லோ.

**தலைநகர குண்டு** விவகாரத்தில் ரெண்டு எழுத்தார் போய் பதுங்கி இருந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்களிடம் அவைக்கு நல்ல பெயராம். "அவை நினைச்சா எங்களை சுட்டிருக்கலாம். அச்சு இயந்திரங்களை நொறுக்கி இருக்கலாம். விலகிப்போய் நிண்டல்லோ வெடிச்சவை. எங்களை பிடிச்சு வைச்சு நடுவில் நிண்டு வெடிச்சிருந்தா என்ன கதி? அதுகள் நல்ல பிள்ளைகள், நாங்கள் கொடுத்த சாப்பாட்டையும் சாப்பிட்டுப்போட்டு எங்களுக்கு தீங்கு இழைக்காமல் போய்ச் சேர்ந்திட்டினம்!" எண்டு நேரில் அனுபவம் கண்டவை உருக்கமாகக் கூறுகினமாம்.

**இலங்கை ஒரு பொப் நாடு** எண்டு சொன்னார் ஒரு நண்பர். ஏன்? எண்டு கேட்டேன். "இந்த நவம்பர் மாதத்தில் பாகிஸ்தானுடன் கிரிக்கெட் தொடங்கப்போகுது. குண்டுவெடிப்பும் மறந்து போகும். கிரிக்கெட் அமளி தூள்கிளப்பும்!" எண்டார் நண்பர். ஒரு உபதகவல் சொல்கிறேன் கேளுங்கோ: சனல் அடி மன்னன் சனத் ஜெயசூரியா தலைநகரில் அடிக்கடி சென்று அர்ச்சனை செய்யும் ஆலயம் எது தெரியுமோ? மயூராபதி அம்மன் கோவில்!

**அரோகரா அரோகரா** எண்ட சத்தத்தில் 'ஐயோ களவு போச்சு' எண்ட கத்தல் கேட்காதாம். அதனால் கள்ளரும் அரோகரா கோஷம் போடுவினம். கூட்டான கட்சிக்காரரும் அப்படித்தான். "இணைப்புக்கு கருத்துக் கணிப்பு வேண்டாம் வேண்டாம்" எண்டு உரத்துச் சொல்லிக் கொண்டிருந்தால், அம்பாறையை பிரித்து எடுக்க உடன்பட்டதும், திருமலையிலும், வன்னியிலும் பிய்க்கப்படப்போகும் பகுதிகள் பற்றி திரைமறைவில் உடன்பட்டதும் சனத்துக்கு தெரியாமல் போகும் எண்டு நினைக்கினமாம். கூட்டான கட்சியும் இணைப்பைத்தானே விரும்புது எண்டு சனம் நினைக்கும். விட்டுக்கொடுப்பு வெளியே தெரியாது எண்டு கணக்குப் போடுகினம். இந்தக் காலத்திலேயே சனத்துக்கு இப்படி பூச்சுற்றுகிறவை, அந்தக் காலத்திலை தனிக்காட்டு ராஜாக்களாக இருக்கும்போது என்னமாதிரி கொத்துக் கொத்தாய் பொய் சொல்லியிருப்பினம்?

**இந்தக்** காலத்துக்கு ஏற்ற பொன்மொழி சொன்னவர் வீரத்துறவி விவேகானந்தர்.

**"குறிக்கோள் உடையவன்**
**ஆயிரம் தவறுகள் செய்தால்,**
**அது இல்லாதவன்**
**ஐயாயிரம் தவறுகள் செய்வான்!**
**ஆதலால் குறிக்கோள்**
**மிகவும் தேவை!"** ■



படிப்பகம்

www.padippakam.com




# வவுனியாவில் உடைக்கப்பட்ட இந்தியச் சிறை!

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

வவுனியாவில் இந்தியப் படையினரின் சிறை முகாம் ஒன்று 1.05.1989 அன்று உடைக்கப்பட்டது.

உலகத் தொழிலாளர் தினமான மே 1ல் நடைபெற்ற சிறை உடைப்பு என்பதால் மேதின சிறை உடைப்பு என்றும் அழைக்கலாம்.

வவுனியா நகரின் மையத்தில் விசாலமான நிலப்பரப்பில் வன்னிப் பகுதியின் பிரதான இராணுவ முகாமை இந்தியப் படையினர் அமைத்திருந்தனர்.

அந்த பிரதான முகாமின் ஒரு பக்கத்தில் புகையிரத நிலையப் பக்கமாக முக்கோண வடிவத்தில் மூன்று கட்டடங்களில் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இங்கிருந்த கைதிகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

(1) புலிகள் இயக்க உறுப்பினர்கள்.

(2) புலிகளின் ஆதரவாளர்கள்.

(3) சந்தேகத்தின் பெயரில் கைதான சாதாரண மக்கள்.

(4) புளொட் இயக்கத்தினர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களில் ஆண்களும், பெண்களும் இருந்தனர். இவர்களில் பலர் தமிழ்நாட்டு சிறையில் இருந்து கொண்டுவரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் மொத்தம் 37 பேர் இருந்தனர். அதில் நான்குபேர் பெண்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரின் புகார்கள் காரணமாக கைது செய்யப்பட்ட புளொட் இயக்க உறுப்பினர்கள் 22பேர் இருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப்பினர்களை தாக்கியதாகவும், படுகொலை செய்ததாகவும் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் புலிகள் இயக்கத்தினரை விட புளொட் உறுப்பினர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

இதனால் சிறைக்குள் இருந்த புளொட் உறுப்பினர்களை 'விருந்தினர்கள்' என்றே சிறைக்குள் இருந்த புலிகள் அழைத்தனர்.

புலிகள், புளொட் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 89பேர் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர்.

தினமும் காலை, மாலை, மதியம் என மூன்று தடவைகள் கைதிகள் வரிசையாக நிற்கவைக்கப்பட்டு எண்ணிக்கை சரிபார்க்கப்படும்.

9

மாலை ஆறு மணியுடன் விடுதிகள் அனைத்தும் மூடப்படும். இரவில் வெளிச்சம் இருக்காது.

தினமும் காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரையும் கைதிகளுக்கு வேலை கொடுக்கப்படும்.

குப்பை கூழங்களை அகற்றுதல், செடி கொடிகளை வெட்டுதல், இராணுவத்துக்கு பதுங்கு குழிகளை வெட்டிக் கொடுத்தல், விறகு கொத்துதல், சமையல் பாத்திரங்களைக் கழுவிக்கொடுத்தல் என்பவை இந்த வேலைகளுள் அடங்கும்.

வாரத்தில் ஒருநாள் சனிக்கிழமைகளில் கைதிகளைப் பார்வையிட உறவினர்கள் அனுமதிக்கப்படுவர்.

உறவினர்கள் கொண்டுசெல்லும் பொருட்கள் கடும் சோதனைக்கு உட்படும். பின்னர் உரையாட 5 நிமிடம் கொடுக்கப்படும். இந்திய இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் கூடவே இருந்து, என்ன கதைக்கிறார்கள் என்று காதைத் தீட்டிக்கொண்டு இருப்பார்.

### தப்பிச் செல்லத் திட்டம்

தமிழ்நாட்டு சிறையில் இருந்து கொண்டுவந்து வவுனியாச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த புலிகளுக்கு அந்தச் சிறை அமைந்திருந்த வெளிச் சூழல் முதலில் புரியவில்லை.

சிறை எங்கே இருக்கிறது, அங்கிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி எங்கிருக்கிறது? புறக்காவல் நிலைகள் எவ்வாறு உள்ளன? என்பவை தெரியாமல் சிறை உடைப்புக்கு திட்டமிட முடியாது.

இந்தியப் படையினர் தம்மை அறியாமலேயே சிறையில் இருந்து புலிகளுக்கு உதவினார்கள்.

வவுனியாவில் கைது செய்யப்பட்ட புலிகளையும் அதே சிறையில் ஏனைய புலிகளுடன் ஒன்றாக பூட்டி வைத்தனர்.

புறச்சூழல்களை அறிந்து சிறை உடைப்புக்குத் திட்டமிட அது வசதியாகி விட்டது.

தப்பிச் செல்வதற்கான பாதையை தெரிவு செய்ய வவுனியாவில் கைதான புலிகள்தான் வழிகாட்டினார்கள்.

சிறைக்குள் 37 புலிகள் இருந்தனர். முதலில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே சிறை உடைப்புத் திட்டத்தை வகுத்தனர். இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவருக்கும் இரகசியங்கள் எல்லாம் தெரிவிக்கப்படுவதில்லை.

சிறை உடைப்பு திட்டமும் அவ்வாறு தான் தீட்டப்பட்டது. முதலில் நோட்டம் பார்ப்பது. பின்னர் திட்டத்தை வரைவது. அதன்பின்னர்தான் ஏனைய சக உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது என்று முடிவானது.

அந்தச் சிறை எப்படி காவல் காக்கப்படுகிறது? காவலர்களின் துப்பாக்கிகள் எத்தகையவை? அவர்களின் உடற்பலம் எப்படியானது? அங்கு பாதுகாப்பில் உள்ள ஓட்டைகள் என்ன? போன்ற தகவல்களை ஆராயத் தொடங்கினர்.

சிறைக்குள் இன்னொரு பகுதியில் புளொட் உறுப்பினர்கள் இருந்தனர். அவர்களுக்கு தமது திட்டம் கசிந்துவிடக்கூடாது என்பதில் புலிகள் கவனமாக இருந்தனர்.

ஆரம்பத்தில் புலிகளுக்கும், புளொட் உறுப்பினர்களுக்கும் இடையே சிறைக்குள் சிறு தகராறுகள் எழும்.

'காட்டிக் கொடுப்பாளர்கள்', 'துரோகிகள்' என்று புலிகள் சொல்வர். உடனே புளொட் உறுப்பினர்களுக்கு கோபம் வந்துவிடும். வாய்த்தர்க்கம் நடக்கும்.

சிறை உடைப்புக்கான திட்டம் தீட்டத் தொடங்கியதும் புளொட் உறுப்பினர்களுடன் வாய்த்தர்க்கப்படுவதை குறைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள் புலிகள்.

தொடர்ந்து பிரச்சினைப்பட்டால், தாங்கள் என்ன செய்கிறோம் என்றும் கூர்ந்து பார்த்துக்கொண்டு திரிவார்கள் என்பதால் தான் புலிகள் அப்படிச் செய்தனர்.

### மாற்றங்கள்

ஒரு தாக்குதலுக்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது சில எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படுவது வழக்கம்.

அப்படியான மாற்றங்களில் தாக்குதல் திட்டத்துக்கு உதவிகரமாக அமைபவையும் உள்ளன. அத்தகைய மாறறங்கள் பழத்தை நழுவி பாலில் விழச் செய்பவை.

அப்படியொரு மாற்றம்தான் வவுனியா சிறையிலும் ஏற்பட்டது.

முதலில் மெற்றாஸ் றெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள்தான் சிறைககு பாதுகாப்பாக இருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தென்னிந்தியர்கள். பலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

அவர்களுக்கு தமிழ் தெரியும் என்பதால் சிறைக்குள் உள்ள கைதிகளுடன் சகஜமாகப் பேசி இரகசியங்களை அறிந்துவிடுவர்.

யாராவது ஒரு கைதிக்கு புலிகளின் நடவடிக்கையில் சிறிது சந்தேகம் வந்தால்கூட படையினருடன் சகஜமாகப் பேசும்போது சொல்லிவிடக்கூடும்.

ஆனால் மெற்றாஸ் றெஜிமெண்டை அங்கிருந்து மாற்றிவிட்டு, 'பஞ்சாப் சீக்கிய றெஜிமெண்ட், மகாராஷ்டிர றெஜிமெண்ட், கூர்க்கா றெஜிமெண்ட் என்று மாற்றி காவல் கடமையில் ஈடுபடுத்தினார்கள்.

வடக்கு-கிழக்கில் இந்தியப் படையினருக்கு எதிராக புலிகள் ஏதாவது தாக்குதல் நடத்தினால், அது சிறிய தாக்குதலா? பெரும்தாக்குதலா என்பதை சிறையில் உள்ள புலிகள் அறிந்து கொள்வர்.

அது எப்படித் தெரியுமா? கைதிகளுக்கு கொடுக்கப்படும் தேநீர் நிறுத்தப்பட்டு, சிறை ஜன்னல்கள் மூடப்பட்டு, கைதிகளை வெளியே செல்லவிடாமல் அடைத்து வைத்திருந்தால் இந்தியப் படைக்கு கணிசமான இழப்பு என்று தெரிந்துவிடும்.

மலசலம் கழிக்கச் செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டு, உணவுக்குள் மண்போட்டு கொடுக்கப்பட்டால் படையினருக்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம்.


இவ்வாறான நாட்களில் சிறைச்சாலை அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும்.

மற்றுமொரு மாற்றம் சிறைக்காவலில் செய்யப்பட்டது. அதுவும் சிறை உடைப்புக்கு வாய்ப்பாக அமைந்தது.

இந்திய மத்திய ரிசேவ் பொலிஸ் படை சி.ஆர்.பி. என்று சுருக்கமாக அழைக்கப்படும்.

சிறை நிர்வாகத்தை சி.ஆர்.பி. பொறுப்பேற்றது. சிறைக்கு வெளியே காவல் செய்யும் பொறுப்பு மட்டும் இந்தியப் படையினருக்கு வழங்கப்பட்டது.

சி.ஆர்.பி. போருக்குச் செல்வதில்லை. அதனால் வெளியே இந்தியப் படையினர் புலிகளால் தாக்கப்பட்டால்கூட, சிறைக்குள் உள்ளவர்களைத் துன்புறுத்தமாட்டார்கள்.




இராணுவத்தில் உள்ளவர்கள் படிக்காதவர்கள், ஜாதியில் குறைந்தவர்கள் என்றெல்லாம் சி.ஆர்.பி.யினர் கைதிகளிடம் குறை கூறுவார்கள்.

இராணுவத்தினருக்கும், சி.ஆர்.பி.க்கும் இடையேயான முரண்பாடுகளும் புலிகளுக்கு உதவிகரமாக அமைந்தன.

### ஆயதத்ங்கள்

சிறைக்குள் சி.ஆர்.பி.யைச் சேர்ந்த பதினொருபேர் காவல் காத்தனர். ஒருவர் மட்டும் இயந்திரத்துப்பாக்கி வைத்திருப்பார். மீதிப்பேர் எஸ்.எல்.ஆர் ரகத் துப்பாக்கி வைத்திருப்பார்கள்.

சிறை உடைப்புக்கு துப்பாக்கிகள் தேவை. வெளியே இருந்து துப்பாக்கிகளைக் கொண்டுவர முடியாது. அதனால் சிறைக் காவலர்களை தாக்கிவிட்டு பறித்தெடுப்பது என்று முடிவானது.

சிறை உடைப்பு நடந்துவிட்டதை அறிந்து வெளியே காவலில் நிற்கும் படையினர் சுடத்தொடங்கினால் தப்பிச் செல்வது கடினம்.

சிறையில் இருந்து 15 மைல் தூரத்தைக் கடந்தால்தான் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முடியும்.

அதனால் வெளியில் உள்ள புலிகளிடம் இருந்து உதவி கோரினார்கள். தங்களைக் காணவந்த உறவினர்கள் மூலமாக தகவல் அனுப்பினார்கள்.

உறவினர்கள்போல வந்த புலிகளின் உளவுப்பிரிவினர் மூலம் சயனைட் குப்பிகள் உள்ளே வந்தன.

பாதியாக வெட்டாமல் சமைக்கப்பட்டு உறவினர்கள் கொண்டுவரும் முருங்கைக்காய்களைக்கூட உடைத்துப்பார்த்துத்தான் உள்ளே விடுவார்கள். அப்படி இருக்கையில் சயனைட் குப்பிகளும், சிறு கத்திகளும் உள்ளே சென்றன என்பது கச்சிதமான காரியம்தான்.

சிறைக்குள் சமையலுக்காக கொண்டு வந்து குவிக்கப்பட்ட விறகுக் கட்டைகளையும் காவலர்களைத் தாக்க பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டனர்.

மலசல கூடத்தில் இருந்த இரும்புக் கம்பிகளையும் கழற்றிவைத்திருந்து காவலர்கள்மீது ஒரே போடாகப் போடலாம் என்று திட்டமிட்டனர்.

இரும்புக் கம்பிகள் கழற்றப்பட்ட விடயம் தெரியவந்தால், அந்த இரும்புக்கம்பிகளாலேயே கைதிகளின் எலும்புகளை நொறுக்கி விடுவார்கள். அதனால் முதலில் ஒரே ஒரு இரும்புக் கம்பியை மட்டும் நைசாகக் கழற்றி வைத்திருந்தனர்.

இரும்புக்கம்பி கழற்றப்பட்டு இருந்ததை புளொட் உறுப்பினர் கண்டுவிட்டார். உடனே ஏனைய சக உறுப்பினர்களுக்கு தெரிவித்து பெரும் பதட்டத்தை ஏற்படுத்திவிட்டார்.

அவர்களது பதற்றத்துக்குக் காரணம் புலிகள் தப்பிச் செல்லும் திட்டம் தெரிந்ததால் அல்ல.

தங்களைத் தாக்கத்தான் புலிகள் இரும்புக் கம்பி கழற்றிவைத்திருக்கிறார்கள் என்று நினைத்துவிட்டனர்.

அதனை காவலர்களிடம் சென்று சொல்வது தங்களுக்கு கௌரவக் குறைச்சல் என்று நினைத்தனர். அதனால் பதிலுக்கு தாங்களும் இரண்டு இரும்புக் கம்பிகளை கழற்றிவைத்துக் கொண்டனர்.

எங்கே விஷயம் வெளியே தெரியப்போகிறதோ என்று நினைத்துக் கொண்டிருந்த புலிகளுக்கு, அப்படி எதுவும் நடக்காதது ஆறுதலாக இருந்தது.

### மே 1

இறுதியாக திட்டம் பூர்த்தியானது. மே 1ம் திகதி சிறையை உடைத்துத் தப்பிச் செல்வது என்று தீர்மானித்தனர்.

மே 1. மாலை 5.30 மணி.

இரவு உணவுக்காக கைதிகளின் அறைக் கதவுகள் ஒன்றன் பின் ஒன்றாகத் திறக்கப்பட்டன.

அவை மீண்டும் 6 மணிக்குள் மூடப்பட்டுவிடும். அரை மணிநேர அவகாசம் மட்டும்தான்.

ஆறு மணிக்குள் தாக்குதல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். சகல புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் கடைசிக் கட்டம் நெருங்கியதும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

எந்தக் காவலரணை யார் தாக்குவது என்று பொறுப்புக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

ஆண் கைதிகள் வைக்கப்பட்டிருந்த சிறையில் இருந்து தனியாகப் பிரிக்கப்பட்ட மற்றொரு இடத்தில்தான் பெண் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். இடையே கம்பிவேலி போடப்பட்டிருந்தது.

பெண்கள் பகுதிக்கு எப்படியோ கடிதம் ஒன்றை புலிகள் அனுப்பிவைத்தனர்.

"இன்று 5-6 மணிக்கு இடையில் சிறையை உடைத்து வெளியேறப்போகிறோம். வெளியே இருந்து உதவி கிடைக்கும். உங்கள் காவலாளியை நாங்கள் தாக்கும்போது, உங்கள் கதவை உடைத்து வெளியேறுங்கள்" என்று கடிதத்தில் தெரிவித்தனர்.

5.30 மணிக்கு சிறைக் கதவுகள் திறக்கப்பட்டதும் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் சமையல் அறைக்குச் சென்று ஒரு கோடாலியை எடுத்துக் கொண்டார்.

சிறைக்குள் மட்டும் நான்கு காவலரண்கள் இருந்தன. அதில் ஒன்று பெண்கள் பகுதியில் இருந்தது.

இரும்புக்கம்பி, விறகுக் கட்டைகள், கோடாலி சகிதம் தமக்கு ஒதுக்கப்பட்ட காவலரண்களை நோக்கி புலிகள் செல்லும் போதுதான் அந்த எதிர்பாராத நிகழ்வு நடந்தது.

சிறை வாசலில் ஒரு இராணுவட்ரக் வந்து நின்றது. அதில் இருந்து பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் குதித்தனர்.

புலிகளுக்கு பேரதிர்ச்சி. தங்கள் திட்டம் தெரிந்துதான் வந்து விட்டார்களோ என்று திகைத்துப் போயினர்.

### மோதல்

கோடாலியைக் கொண்டுபோய் சமையல் அறையில் வைக்கவும் முடியவில்லை. இரும்புக் கம்பி விறகுக்கட்டைகளை வீசுவதா என்றும் புரியவில்லை. ஒரு முடிவுக்குவர முடியாமல் விழித்துக்கொண்டிருக்க, அந்த ட்ரக் வண்டி அடுத்த நிமிடமே புறப்பட்டுச் சென்றுவிட்டது.

இறங்கிய இராணுவத்தினரும் மறுபடி ஏறிச் சென்றுவிட்டனர். ட்ரக் சென்றுவிட்டது, தம்மை கவனிக்கவும் இல்லை என்றதும் எல்லோரும் நிம்மதியாய் மூச்சுவிட்டனர்.

அதேசமயம் இன்னொரு ஜீப் வண்டி சீறிக்கொண்டுவந்து சிறைவாசலில் நின்றது.

"அந்தக் கணத்தில் எமக்கு உலகமே வெறுத்தது" என்று நினைவு கூர்ந்திருந்தார் ஒரு புலி.

வந்த ஜீப் தனது அலுவலை முடித்துக் கொண்டு வந்த வேகத்திலேயே திரும்பிச் சென்றது.

சரியாக 5.45 மணி.

தாக்குங்கள் என்று சைகை காட்டிக் கொண்டு காவலரண்களை நோக்கி முன்னேறினார்கள்.

காவலரண் 3ல் நின்ற காவலாளிக்கு கோடாலியால் ஒரே கொத்து. அவன் கையில் இருந்த எஸ்.எல்.ஆர் கைப்பற்றப்பட்டது.

காவலரண் 6ல் நின்ற காவலாளியும் அதேநேரம் தாக்கப்பட்டு அவனிடமிருந்த எஸ்.எல்.ஆர் துப்பாக்கி பறிக்கப்பட்டது.

காவலரண் 4ல் தான் இயந்திரத் துப்பாக்கி இருந்தது. தப்பிச் செல்பவர்களுக்கு ஆபத்தானது அதுதான்.

அந்த இயந்திரத் துப்பாக்கி சடசடக்கத் தொடங்கிவிட்டால் பலரது உயிரைக் குடித்துவிடும்.

விறகுக் கட்டையுடனும், இரும்புக் கம்பியுடனும் தன்னை நோக்கி புலிகள் ஓடிவருவதை இயந்திரத் துப்பாக்கியுடன் நின்ற காவலன் கண்டுவிட்டான்.

தன்னை நோக்கி ஓடிவருபவர்களைத் தாக்குவதற்கு பதிலாக, இயந்திரத் துப்பாக்கியுடன் காவலரணில் நின்ற சிப்பாய் தன் தலையில் அடித்துக் கொண்டு கத்தத் தொடங்கினான்.

ஏன் சுடாமல் கத்துகிறான் என்று புலிகளுக்கு புரியவில்லை.

ஓடிச்சென்ற ஒரு புலி அவன்மீது பாய்ந்து அவனை தரையோடு தரையாக அமுக்கிப்பிடிக்க, இன்னொரு புலி அவனது விலா எலும்பு முறியும்வரை இரும்புக் கம்பியால் அடித்தார்.

பின்னர் இயந்திரத் துப்பாக்கியை பிடித்து இழுத்தபோதுதான் சிப்பாய் கத்திய காரணம் விளங்கியது.

இயந்திரத் துப்பாக்கியின் அடிப்பாகம் மண் மூட்டையில் கிடக்க, குழல் பகுதி ஒரு சணல் கயிற்றினால் கட்டி காவலரணின் மேல் இருந்த ஒரு கட்டையுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது சிறையின் வெளிப்புறத்தைப் பார்த்தபடி தொங்கிக் கொண்டிருந்தது.

உடனடியாக அதைத் திருப்பி உள்புறமிருந்து ஓடி வருபவர்களை நோக்கிச் சுட முடியவில்லை. அதனால்தான் சிப்பாய் கத்தினான்.

இதே சமயம் சிறைக்குள் உள்ள சி.ஆர்.பி.யினரும் தாக்கப்பட்டு மடக்கப்பட்டனர்.

### கடைசிக்கட்டம்

பெண்களை விடுவிக்க காவலரண் 1ஐத் தாக்க சில புலிகள் ஓடிச் சென்றனர். பெண்கள் சிறைக்கு அண்மையில்தான் இந்தியப் படை பிரிகேடியரின் வீடு இருந்தது.

அங்கு காவல் நின்ற இராணுவத்தினர் காவலரண் 1ஐ நோக்கி சென்ற புலிகளைக் கண்டுவிட்டு சுடத் தொடங்கினார்கள். காவலரண் 1ல் இருந்த சிப்பாயின் துப்பாக்கியும் வாயைத் திறந்தது.

கணேசலிங்கம் என்பவர் சூடுபட்டு விழுந்தார். காவலரண் 1ஐ நோக்கி முன்னேற முடியாத புலிகள் பின்னடைந்தனர்.

காவலரண் 1ஐ தாக்கும் முயற்சியில் ஈடுபட்டால் யாரும் தப்பவும் முடியாது. உயிருடன் மீளவும் இயலாது என்பதால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட பாதையில் தப்பிச் செல்லத் தொடங்கினார்கள்.

அப்போது இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பெனா, சிறி, செல்வந்தன் ஆகியோர் பலியாகினர்.

எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகளால்சுட்டபடியே ஏனைய புலிகள் தப்பிச் சென்றனர்.

சிறையில் இருந்து மொத்தம் 42 பேர் தப்பிச் சென்றனர். பெண் புலிகள் தப்பிச் செல்ல முடியவில்லை.

சிறைக்கு அரை மைல் தூரத்தில் உள்ள பண்டாரிக்குளம் என்ற இடத்தில் புலிகளின் வாகனம் ஒன்று வந்து காத்திருந்தது.

தப்பிச் சென்ற புலிகள் அதில் ஏறிக்கொண்டனர்.

இந்தியப் படையினரின் காலத்தில் நடைபெற்ற பாரிய சிறை உடைப்பு இது வாகும்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com



# நாடாளுமன்றத்தில் நடந்த நாடகம்!

## ஐ.தே.க. எதிர்ப்பால் சாதகம் யாருக்கு?

## மயக்கமான செய்திகள்–தவறான கண்டனங்கள்

**24.10.97** அன்று நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன? என்பதை மக்கள் அறிய முடியாதளவுக்கு அரச பிரசார சாதனங்கள் முந்திக்கொண்டு தவறான தோற்றப்பாட்டை உருவாக்கியுள்ளன.

போதாக்குறைக்கு சில தமிழ்க் கட்சிகளும் அரச பிரசார சாதனங்களின் ஒருபக்கச் சார்பான பிரசாரத்திற்கு ஒத்துழைத்துள்ளன.

**இதன்மூலம் இனப்பிரச்சனைத் தீர்வில் அரசாங்கத்தின் மிகப் பாரிய மற்றொரு இழுத்தடிப்பு உள்நாட்டிலும், உலக அரங்கின் பார்வையில் இருந்தும் மூடி மறைக்கப்பட்டுள்ளது.**

வரவு, செலவுத் திட்டத்தின் முன்பாக அரசியல் தீர்வு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்தே கூறப்பட்டு வந்தது.

அவ்வாறு கூறப்பட்டதற்கும், ஆட்சியாளர்களால் தற்போது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கைக்கும் இடையே யாதொரு சம்பந்தமும் கிடையாது.

சீனியைத் தருவதாகக் கூறிவிட்டு, வெறும் காகிதத்தில் சீனி என்று எழுதித்தந்தால் எப்படியாக இருக்குமோ, அப்படியானதுதான் தற்போதைய அறிக்கை.

அரசாங்கம் முதலில் சொன்னது என்ன?

"எதிர்க்கட்சி எதிர்த்தால்கூட வரவு, செலவுத் திட்டத்தின் முன்பாக அரசியல்தீர்வு முன்வைக்கப்படும்" என்றனர்.

அந்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமானால் என்ன செய்திருக்க வேண்டும்?

**கடந்த 24.10.97 அன்று செய்தது போல அல்லாமல், அதாவது அறிக்கை சமர்ப்பிக்காமல், தீர்வுத்திட்ட சட்ட மூலத்தை முன்வைத்திருக்க வேண்டும்.**

அந்த சட்ட மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்படவேண்டும். அதற்கு முன்பாக சட்டமூலம்மீதான விவாதம் நடக்கும்.

சட்டமூலத்துக்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவித்தால் வாக்கெடுப்புக்கு விடப்படும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற முடியாவிட்டால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லலாம்.

ஆனால் அரசாங்கம் சட்டமூலத்தை முன்வைக்கத் துணியவில்லை. தனது வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டுள்ளது.

அதற்குப் பதிலாக அரசியல் தீர்வு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக தம்மால் முன்வைக்கப்பட்ட யோசனைகளையும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் 77 அமர்வுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் விளக்கும் ஒரு அறிக்கையைத்தான் 24.10.97 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

**ஐ.தே.கட்சி பா.உவும், முன்னாள் நிதியமைச்சருமான ரொனிடி மெல் கூறியிருப்பதுபோல, பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னேற்ற அறிக்கைதான் சமர்பிக்கப்பட்டதே தவிர, தீர்வுத்திட்டமோ, தீர்வு யோசனைகளோ அல்ல.**

**தீர்வுத் திட்டம்.**

**தீர்வு யோசனை.**

**அறிக்கை.**

இந்த மூன்றுக்கும் இடையேயான வித்தியாசத்தை அறியாமல் பத்திரிகைகள் பலகூட பாராளுமன்றத்தில் 'தீர்வு யோசனைகள் சமர்ப்பிப்பு', 'அரசியலமைப்பு ஆலோசனைகள் சமர்ப்பிப்பு' என்று தலைப்புச் செய்திகள் வெளியிட்டன.

இதுதான் இறுதியானது என்ற முடிவுடன் இனப்பிரச்சனைக்கான தீர்வை அரசு வெளியிட்டால் அதனை தீர்வுத்திட்டம் என்று குறிப்பிடலாம்.

எல்லோரும் கலந்து பேசி ஒரு தீர்வைக் காணும் விவாதத்துக்கான ஆரம்பமாக அரசாங்கம் சில யோசனைகளை முன்வைத்தால் அதனை தீர்வு யோசனைகள் என அழைக்கலாம்.

தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைத்தால் அதற்காக தாமும் வாதாட வேண்டும். அதன் வெற்றிக்காக போராட வேண்டும்.

தீர்வு யோசனைகள் என்றால் அரசு தான் முன்வைத்த யோசனைகளில் பிடியாக நிற்கத் தேவையில்லை. சிலவற்றை மாற்றலாம். புதிதாகச் சேர்க்கலாம். சிலவற்றை கைவிடலாம்.

தீர்வு யோசனை பற்றிய அறிக்கை என்பது இதுவரை நடந்தது பற்றிய விளக்கமாகவும் இருக்கலாம். அல்லது தீர்வு தொடர்பான தமது முயற்சிகள் பற்றிய ஆட்சியாளரின் விளக்கமாகவும் அமையலாம்.

**எனவே சமீபத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது பாராளுமன்ற தெரிவுக்குழு ஆய்வுகளோடு தொடர்புபட்ட முன்னேற்ற அறிக்கை மட்டும்தான்.**

ஏன் அதனை ஆலோசனைகள் சமர்ப்பிப்பு என்று சொல்ல முடியாது?

யோசனைகள் என்பவை அடுத்தவரது அபிப்பிராயம் கோரும் விவாதங்களுக்காக, கலந்தாலோசனைக்காக முன்வைக்கப்படுபவை.

**ஆனால் அரசாங்கமோ பாராளுமன்றத்தில் பகிரங்க விவாதத்துக்கும் தயாராக இருக்கவில்லை. எனவேதான் அறிக்கையாக சமர்ப்பித்தது. அறிக்கைமீது விவாதம் நடத்த வேண்டிய அவசியமில்லை. அறிக்கையை சமர்ப்பிக்கவும், அந்த அறிக்கையை பாராளுமன்றம் வாங்கி வைத்திருக்கவும் வாக்கெடுப்பு எதுவும் தேவையும் இல்லை.**

ஆக, யோசனை என்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தால்கூட ஓரளவு அர்த்தம் இருந்திருக்கும். பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்தை விவாதங்களில் கூறவேண்டி இருந்திருக்கும். எதிர்க்கட்சியும் பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவே தன் நிலைப்பாட்டை கூறவேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியிருக்கும்.

ஆளும் தரப்பினரும் தங்கள் கருத்தை வெளியிட வேண்டி இருந்திருக்கும்.

அவ்வாறு செய்தால் பிள்ளையார் பிடிக்கப் போக குரங்காகிவிடுமோ என்று ஆட்சியாளர் பயந்துவிட்டனர். பாராளுமன்றத் தெரிவுக்குழு விவாதங்கள் பத்திரிகைகளில் விலாவாரியாக வெளிவருவதில்லை.

பாராளுமனறத்தில் யோசனைகளை சமர்பித்து பா. உக்களின் அபிப்பிராயம் கோரினால், ஆற்றப்படும் உரைகள், கூறப்படும் கருத்துக்கள் பத்திரிகைகளில் உடனுக்குடன் வெளிவரும். அதனை பயன்படுத்தி பிரதான எதிர்க்கட்சி அரசியல் இலாபம் பெற்று விடுமோ.

சிங்கள மக்களின் அபிப்பிராயத்தை தமக்கு எதிராக திருப்பி விடுவார்களோ என்று அரசு தயங்குகிறது.

**எனவே தயக்கங்கள் காரணமாக மயக்கமான சொற் பிரயோகங்களுடன் அறிக்கை ஒன்றை சமர்பிக்க மட்டுமே அரசால் முடிந்துள்ளது.**

அரசியல் தீர்வு முயற்சியில் ஏற்பட்டுள்ள பின்னடைவையே இது புலப்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சிகள், சிங்களக் கமிஷன் போன்றவற்றை காட்டிக்கொண்டு, மேலும் காலத்தை இழுத்தடிப்பதில்தான் ஆட்சியாளர்கள் கரிசனம் கொண்டுள்ளனர்.

**தாம் வாக்குறுதி அளித்ததுபோல பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் முன்பாக தீர்வை முன்வைக்க தவறியுள்ள ஆட்சியாளர்கள், ஒரு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு அதனை தங்கள் வாக்குறுதியோடு முடிச்சுப்போடப் பார்க்கின்றனர். அவ்வாறு செய்வது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் இடையே முடிச்சுப்போடுவது போன்றதே.**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நிதியமைச்சர் பீரிஸ் அவர்கள் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அரசியல் தீர்வில் இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் என்ற தலைப்பில் சில பத்திரிகைகளில் அவை பிரசுரமாகி இருந்தன.

ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழுவில் ஆராயப்பட்ட பல விடயங்களைத்தான் நிதியமைச்சர் அவ்வாறு பட்டியலிட்டாரே தவிர, அவற்றில் பல விடயங்கள் இன்றுவரை கூட பொது இணக்கம் காணப்படவில்லை.

ஆராயப்பட்டதா, அல்லது இணக்கம் காணப்பட்ட விடயங்களா என்பதை தெளிவாகக் கூறாமல் ஒரு மயக்கமான தோற்றப்பாட்டை உருவாக்கக் கூடியதாகவே அந்த அறிக்கையும் வெளியாகி இருந்தது.

**அக் கட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற இருந்தது. தீர்வு முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று காண்பித்து கடனுதவிகளை பெருமளவில் பெறுவதற்கான ஒரு தந்திரம்தான் அந்த அறிக்கையாகும்.**

குறிப்பிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பலவற்றில் தமக்கு உடன்பாடில்லை என்றும், அவை தொடர்ந்து ஆராயப்பட வேண்டியவை என்றும் அப்போது ஐ.தே.கட்சி உடனடியாக மறுப்பறிக்கை விட்டிருந்தது.

தமிழ்க் கட்சிகள், குறிப்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழ்க் கட்சிகளும் தமது மறுப்பையும் வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் அவை மௌனம் சாதித்தன. இத்தனைக்கும் இணக்கம் காணப்பட்டதாக பட்டியலிட்ட விடயங்களில் பௌத்த மதம் அரச மதமாக இருக்கும் என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்று பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியான அறிக்கையின் விரிவாக்கம் செய்யப்பட்ட மற்றொரு அறிக்கைதான் சமீபத்தில் பாராளுமனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை அரசாங்கம் முன்வைத்த தீர்வு யோசனைகளையும் உள்ளடக்கியதாக உள்ளது.

### இப்படி ஒரு பட்டியல்

**24.10.97** அன்று நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி ஒழுங்குப்பிரச்சனை கிளப்பியது. சபையில் கூச்சல், குழப்பம், தெருச் சண்டைபோன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தூள் கிளப்பின.

சபை ஒத்திவைக்கப்பட்டது ஆளும் கட்சி எம்.பி.கள் சிலர் தமிழ்க்கட்சி எம்.பி.களை கையில் பிடித்து இழுக்காத குறையாக பிடித்துக் கொண்டனர்.

"ரூபவாகினி தொலைக்காட்சி கமராக்கள் தயாராக காத்திருந்தன. வாருங்கள் பேட்டி கொடுங்கள். ஐ.தே.கட்சி செய்தது சரியோ சொல்லுங்கள்." என்று பிடித்திழுத்துக் கொண்டு போனார்களாம்.

ஏனையோர் கழுவியநீரில் நழுவும் மீனாகித் தப்ப, இரா.சம்பந்தனும், சித்தார்த்தனும்தான் மாட்டுப்பட்டனர். ஐ.தே.கட்சியை மெல்லக் குத்திப் பேட்டியும் கொடுத்தனர். பாராளுமன்றக் கட்டடத்துக்குள்ளேயே பேட்டிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டனவாம்.

ஆளும் தரப்பின் பிரசார ஆயுதங்கள் என்று ஒரு பட்டியல் இட்டால் இப்படி இருக்கும்:

1. அரச தொலைக்காட்சி 2. அரச வானொலி 3. அரச பத்திரிகை 4 தமிழ்க் கட்சிகள், குறிப்பாகக் கூட்டணி.

இதன்மூலம் அரசாங்கம் சாதிக்க விரும்பியது என்ன? அறிக்கையை முன்வைக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?

**1. சர்வதேச அரங்கில் தமது சமாதான 'இமேஜ்' இழந்துவிடாதிருப்பதற்காக.**

**2. வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழப் போகும் தொகையை ஈடுசெய்ய உலக உதவிகள் பெறுவதற்காக.**

மேற்கண்ட இரு காரணங்கள் தவிர இன்னொரு காரணமும் இருக்கிறது.

24.10.97 முதல் 27.10.97 வரை பிரிட்டனில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றது. ஜனாதிபதியும் அதில் கலந்து கொண்டார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களிடம் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், இராணுவத்தீர்வு முனைப்புக்கள் பற்றியெல்லாம் எடுத்துக்கூற வெளிநாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் பல பாரிய ஒழுங்குகளைச் செய்திருந்தன.

மாபெரும் ஊர்வலம் நடத்தவும், எதிர்ப்புக் காட்டவும்கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏனைய பொதுநலவாய நாடுகளின் தலைவர்களிடம் பழைய பல்லவியையே ஜனாதிபதி பாடமுடியாது. தீர்வு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்கிறது என்று நீண்ட காலமாக கூறியாகிவிட்டது.

**எனவேதான் ஜனாதிபதிக்கு ஒரு புதிய பல்லவி கொடுப்பதற்காக, பாராளுமன்றத்தில் தீர்வு யோசனைகள் சமர்ப்பித்துவிட்டோம் என்று கூறத்தக்கதாக அறிக்கை அவசரமாக முன்வைக்கப்பட்டது.**

உண்மையில் ஐ.தே.கட்சி எதிர்ப்புக் காட்டாமல் பாராளுமன்றத்தில் இருந்திருந்தால் அதனால் தமிழ்பேசும் தரப்புக்கே நஷ்டம் ஏற்பட்டிருக்கும்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு கிட்டத்தட்ட காணப்பட்டு விட்டது என்றுகூட காட்டப்பட்டிருக்கும்.

பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சர் பொக்ஸ் மூலம் நடத்தப்பட்ட ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உடன்பாடு என்ற நாடகம்போல, இந்த அறிக்கையும், எதிர்க்கட்சியின் சம்மதத்துடன் தீர்வைக் காணும் முன்னேற்றம் என்று காட்டப்பட்டிருக்கும்.

எனவே குறிப்பிட்ட அறிக்கைக்கு ஐ.தே.கட்சி எதிர்ப்பு தெரிவிக்க முற்பட்டமையும், அதனால் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமளி துமளியும் அரசியல் தீர்வுக்குள்ள நெருக்கடிகளை உலகம் அறியச் செய்துள்ளது.

**குறிப்பிட்ட அறிக்கையானது அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு பதில் மேலும் மேலும் காலத்தை இழுத்தடிக்கும் முயற்சி என்பதை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கூட்டணி, ஈ.பி.டி.பி. புளொட், ஆகிய கட்சிகள் முன்னின்று கூறத் தவறிவிட்டன.**

இனப்பிரச்சனை தீர்வு இழுத்தடிக்கப்படுவதை மூடிமறைக்கும் முயற்சியாக முன்வைக்கப்பட்ட அறிக்கைக்கு முன்னின்று எதிர்ப்புக் காட்டவேண்டிய கடமையை மூன்று கட்சிகளுமே தவறவிட்டுள்ளன.

அதன் மூலம், இனப்பிரச்சனைத் தீர்வுக்கு முன் முயற்சிகள் எடுக்கப்படுவதாக உலக அரங்கில் காண்பித்து, இராணுவ முனைப்பை தீவிரப்படுத்த சர்வதேச ஆதரவைப் பெறும் அரசின் முயற்சிக்கு ஒத்துழைத்துள்ளன.

**அதுமட்டுமல்லாமல், நியாயமான அரசியல் தீர்வொன்றை இந்த நாட்டுக்குள் மட்டும் பேசித் தீர்க்க முடியாது என்ற உண்மையை உலகம் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்களையும் தமிழ்க் கட்சிகளே கெடுத்து வருகின்றன.**

தமிழ்க்கட்சிகள் செய்யத் தவறிய அந்தக் கடமையை ஐ.தே.கட்சி செய்திருக்கிறது. தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி ஐ.தே.கட்சி அக் காரியத்தை செய்யவில்லை என்பது நூறுவீதமான உண்மையாகும். ஆனால் தனது கட்சி நலன் கருதி ஐ.தே.கட்சி செய்த காரியம் விவேகமான அரசியல் தலைமை இன்றி அநாதரவாக நிற்கும் தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமாக அமைந்துள்ளது.



குறிப்பிட்ட அறிக்கையை சமர்பிக்கும்போது பாராளுமன்றத்தின் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டாம் என்று தமிழ்க் கட்சிகளிடம் நீதியமைச்சர் முன்கூட்டியே வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஐ.தே.கட்சியையும் மௌனமாக இருக்கச் செய்யவே நீதியமைச்சர் பலத்த முயற்சி செய்திருந்தார். ஆனால் குறிப்பிட்ட அறிக்கையை வைத்துவிட்டு, உலக உதவிகள் பெறப்படும். அரசாங்கம் ஸ்திரமாகிவிடும். நெருக்கடிக்குள் சிக்காமல் அடுத்த தேர்தலை எதிர்கொள்ள தயாராகும் என்பதை உணர்ந்த ஐ.தே.கட்சி வாயை மூடிக்கொண்டிருக்க மறுத்துவிட்டது.

**பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் காலத்தை இழுத்தடிக்க ஒத்துழைப்பது தமிழ்பேசும் தரப்புக்கு பாதகமானது.**

பெரும்பான்மை இனக் கட்சிகள் இரண்டும் தமக்குள் உள்ள முரண்பாட்டால், தமது பொட்டுக்கேடுகளை வெளிக்காட்டுவதுதான் உலகின் கண்களுக்கு தமிழ்பேசும் தரப்பின் பக்கமுள்ள நியாயத்தை உணரச் செய்ய ஏதுவாக இருக்கும்.

**ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் ஒருபோதும் இனப்பிரச்சனைத் தீர்வில் ஒத்துழைத்து செயற்படப்போவதில்லை என்பது தெளிவான விடயம். எனவே அந்த உண்மையை வெளிப்படுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றை கோருவதுதான் தமிழ்க்கட்சிகளின் இன்றைய அரசியல் உத்தியாக இருக்க வேண்டும்.**

ஆனால், பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சி நடந்துகொண்ட முறை சரியில்லை என்று கூட்டணயின் எம்.பி. சம்பந்தரும், புளொட் எம்.பி. சித்தார்த்தனும் வருத்தம் தெரிவித்துள்ளனர். ஈ.பி.டி.பி. மட்டும் இந்த விடயத்தில் தெளிவான கருத்தை கூறியிருந்தது. "இரு தரப்புமே தமது அரசியல் தேவை கருதியே நடந்து கொண்டுள்ளன" என்று டக்ளஸ் தேவானந்தா எம்.பி. கூறியிருந்தார்.

அரசியல் தீர்வை நாடிநிற்கும் தமிழ்பேசும் மக்களுக்கு முன்பாக கிலுகிலுப்பை காட்டுவது போன்றதே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அறிக்கையாகும்.

அதனால் அரசியல் தீர்வு முயற்சியில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. இனப்பிரச்சனை தீர்வுக்கு தேவையான நடவடிக்கையும் அல்ல அது.

முழுக்க முழுக்க ஆட்சியாளரின் அரசியல், இராணுவ, பொருளாதார நலன்களுக்காக: அந்த நலன்களை உறுதிப்படுத்த உள்நாட்டு, வெளிநாட்டு ஆதரவைப் பெற முன்வைக்கப்பட்ட அறிக்கையாகவே விளங்குகின்றது.

இந்த அறிக்கையால் இனப்பிரச்சனைத் தீர்வில் சாதகங்கள் ஏற்படாவிட்டாலும், தமிழ்பேசும் தரப்புக்கு பாதகங்கள் உண்டு. அவை பின்வருமாறு:

1. அரசியல் தீர்வு முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப் படுவதுபோன்ற மாயையை வெளியுலகில் உருவாக்கும். அதனால் கால இழுத்தடிப்பு பற்றிய தமிழர் தரப்பு அதிருப்தி எடுபடாது.

2. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தக் கோரிக்கை தொடர்ந்து பின்தள்ளப்படும்.

3. காலத்தை இழுத்தடித்து இராணுவத்தீர்வின் பின்னர் குறைந்தபட்ச அரசியல் தீர்வை முன்வைக்கும் முஸ்தீபுகளுக்கு உலக ஆதரவு கிடைக்கச் செய்யும்.

எதிர்கட்சியும் மௌனமாக இருந்திருந்தால் மேற்கண்ட பாதங்களின் தாக்கம் தமிழ் பேசும் தரப்புக்கு அதிகமாக இருந்திருக்கும்.

ஆனால் தனக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண்ணும் போகட்டும் என்பதுபோல, சொந்த அரசியல் லாப நோக்கத்துடன் ஐ.தே. கட்சி எதிர்ப்புக் காட்டியது.

பாராளுமன்றத்தில் நடந்த ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு மோதலை அரசியல் தீர்வு இழுத்தடிப்பை மூடிமறைக்கும் முயற்சிகளுக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் பயன்படுத்தி இருக்கலாம். அதற்கு மாறாக அரசின் தீர்வு முயற்சிக்கு தடை என்பது போல சில தமிழ்க் கட்சிகள் சித்தரிக்க முனைந்தன.

தன் தலையில் தானே மண் அள்ளிப் போடும் யானை என்று கூறுவர்.. ஆனால் தமிழ்க் கட்சிகள் தம் கையால் மண்ணை அள்ளி தமிழ்பேசும் தரப்பின் தலையில் போட்டுக் கொண்டிருக்கின்றன.



படிப்பகம்

# கொள்ளை ராணி

# பூலான்தேவி

**67**

தருவது **ரசிகன்**


பூலான்

**கடந்த வாரம்**

ஸ்ரீ ராமின் சகோதரியையும்
போலிசாருக்கு தகவல் கொடுக்கும்
அவள் கணவனையும்
சுட்டுக் கொல்கிறாள் பூலான்.
பண்ணையார்களின் வீடுகளையும்
கொள்ளையடிக்கிறார்கள்.
பூலானின் தீவிரம் கண்டு
மான் சிங் பிரமிக்கிறான்.

இனி......

அன்றிரவு பூலான் இருந்த அறைக்குள் சென்றான் மான் சிங். அதற்கு முன்னரும் பல தடவை அவள் அறைக்குச் சென்றிருக்கிறான்.

ஆனால் இப்போது செல்வதற்கும், முன்னர் சென்றதுக்கும் இடையே வித்தியாசம் இருந்தது.

பாபாவின் கட்டளைப்படி பூலானுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதற்காகவும், அடுத்துச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பேசவேண்டி இருந்தால் பேசவும்தான் போய் வந்திருக்கிறான்.

ஆனால் இப்போது, பூலான்மேல் தனக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவித ஈர்ப்பால் இழுத்துச் செல்லப்படுகிறான்.

மான் சிங்கை பெண்கள் விடயத்தில் சைவக் கொக்கு என்றும் சொல்லவிடமுடியாது. ஆனால் எந்தப் பெண்ணையும் அவள் விருப்பம் இல்லாமல் நெருங்கக் கூடாது என்பது பாபாவின் கட்டளை. மான் சிங்குக்கும் அக் கொள்கையில் உடன்பாடு இருந்தது.

சில கிராமங்களில் தங்கி இருக்கும்போது மான் சிங்கின் விருப்பத்துக்கு இணங்கிய பெண்களும் இருக்கிறார்கள். தாமாக மான் சிங்கை நாடி வந்த பெண்களும் உண்டு.

கொள்ளைகளின்போது எந்தப் பெண்ணுடனும் பாபாவின் ஆட்கள் அத்துமீறி நடந்ததே கிடையாது.

பெண்கள் என்றால் சகல விடயங்களிலும் அடங்கிப்போகிறவர்கள்; ஆண்மகனால் அடக்கப்பட ஆவலாகக் காத்திருப்பவர்கள்; சமைத்துப்போடவும், சரசம் போடவும்தான் இலாயக்கானவர்கள் என்றுதான் மான் சிங் இதுவரை நினைத்திருந்தான்.

அவ்வப்போது, பசிக்கு நொறுக்குத்தீனி மாதிரியாகவும், தாகத்துக்கு குளிர்ச்சியான தண்ணீர் போலவும்தான் பெண்களுடனான தொடர்புகளை வைத்துக் கொண்டிருந்தான். அதற்கு மேல் பெண்கள்மீது வேறு ஆர்வம் எதுவும் இருந்ததில்லை.

ஆனால் பூலானை கண்டதில் இருந்து, பூலானின் துணிச்சலையும், துரிதமான தாக்குதல்களையும் பக்கத்தில் இருந்தே கவனித்த பின்னர் மான் சிங் பிரமிப்பின் உச்சிக்கே போய்விட்டான்.

முதன் முதலாக, தனக்கு ஒரு துணைவி தேவை என்பதையும், அது ஏன் பூலானாக இருக்கக்கூடாது என்பதையும் அவன் மனது உணரவும், கேட்கவும் தொடங்கி இருந்தது.

பூலானிடம் மனம்விட்டுப் பேசிவிடலாம் என்று நினைத்துத்தான் இப்போது அவள் அறைக்குச் சென்றான்.

பூலானின் அறைக்கு தான் செல்வதை பாபா கண்டுவிடுவாரோ என்று பயந்தான். பாபாவின் அறை வாயில் கதவு சாத்தப்பட்டிருந்தது.

திருட்டுப் பூனை மாதிரி தான் நடந்துகொள்வதை நினைக்க மான் சிங்குக்கு தன்மீதே நகைப்பாக இருந்தது.

பூலான் அப்போதுதான் இரவு உணவை முடித்துவிட்டு, தன் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

பண்ணையார் சாதிக்காரர்களின் இரண்டு கிராமங்களைச் சூறையாடியதும், தன் எதிரிகளில் சிலரை பழிவாங்கியதும் பூலானை உற்சாகப்படுத்தி இருந்தன.

முன்பைவிட அவள் மனம் இப்போது கடினப்பட்டுவிட்டது. தன் கண் எதிரே துடி துடித்துச் செத்துப் போகிறவர்களை விஷப் பூச்சிகளாக நினைக்கப் பழகி இருந்தாள்.

அந்த மரணங்கள் அவள் மனதில் துளியும்கூட பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை.

துர்க்காதேவியின் சார்பாக வழங்கப்படும் தண்டனைகளாகவே அவற்றை நினைத்தாள். முன்னர் போல பூலானின் கனவில் அந்த வெள்ளையுடைத் தேவதை இப்போதெல்லாம் தோன்றுவதில்லை.

தனக்குள் அந்த துர்க்கை அவதாரம் இரண்டறக் கலந்துவிட்டது. அதுதான் தனியாகக் கனவில் தோன்றுவதில்லை என்று முடிவு கட்டியிருந்தாள் பூலான்.

பெண்களை தன் குழுவில் வைத்திருக்கக்கூடாது என்ற பாபாவின் முடிவைத் தவிர, பாபாவின் ஏனைய குணங்கள் பூலானைக் கவர்ந்திருந்தன.

பாபாவின் கோஷ்டியில் இருப்பதைத தான் பூலான் விரும்பினாள். தனியாக ஒரு கூட்டத்தை வைத்து நடத்துவதை நினைக்க தயக்கமாக இருந்தது. ஆனாலும் பாபாவின் முடிவை மாற்றுவது சுலபமல்ல என்பதையும் அறிந்தே இருந்தாள்.

அப்போதுதான் மான் சிங்கின் நினைவு வந்தது. மான் சிங் ஊடாக பாபாவுடன் பேசிப்பார்க்கலாமே என்று நினைத்தாள்.

அவள் நினைக்கவும், அறைக்கதவை லேசாகத் தட்டிவிட்டு மான் சிங் உள்ளே வரவும் சரியாக இருந்தது. பூலானுக்கு ஆச்சரியமாகிவிட்டது.

"இப்போதுதான் நினைத்தேன்!" என்றாள். மான் சிங் அவள் சொன்னதற்கு வேறு அர்த்தம் கற்பித்துக் கொண்டு குளிர்ந்து போனான்.

அதனால் சற்றுத் துணிச்சலாக "நானும் நினைத்துக் கொண்டுதான் வந்தேன்!" என்றான்.

பூலானுக்கு அவன் சொன்னதின் அர்த்தம் சரியாக விளங்கவில்லை. ஆனால் மான் சிங்கின் கண்களில் தேங்கியிருந்த ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் புரிந்து கொண்டுவிட்டாள். அனுபவம் கற்றுக் கொடுத்த பாடங்களில் ஒன்றுதான் அதுவும்.

மல்லாவை தன்னால் மறக்க முடியாது என்றாலும்கூட, தனக்கும் ஒரு துணை நிச்சயம் தேவை என்ற உண்மையை பூலானால் உதாசீனப்படுத்த முடியவில்லை.

ஆனால் அந்தத் துணை மான் சிங்தானா என்பதை அவள் இன்னமும் தீர்மானிக்கவில்லை.

மான் சிங்கின் துணிச்சலும், விவேகமும், இக்கட்டான நேரங்களில் விரைந்து முடிவெடுக்கும் அவன் திறனும் பூலானைக் கவர்ந்திருந்தன.

பாபாவிடம் இருந்து விலகியே தீரவேண்டும் என்பது முடிவானால், தனது கோஷ்டிக்கு மான் சிங்தான் தளபதி என்பதை மட்டும் பூலான் தீர்க்கமாகவே தீர்மானித்திருந்தாள்.

மான் சிங்மீது மதிப்பு இருந்தாலும், அவனை மல்லாவின் இடத்தில் வைத்துப் பார்க்க இதுவரை நினைத்தாள் இல்லை. அதனால் மான் சிங்கின் பார்வையில் பொதிந்து கிடந்த அர்த்தங்கள் பூலானுக்கு சங்கடத்தைத் தந்தன.

பூலானின் தவிப்பை தன்னை நாடும் ஏக்கமாகக் கருதிய மான் சிங், மெல்ல அவளை நெருங்கினான். அவன் மூச்சுக்காற்று பூலான்மீது சூடாகப்பட்டுத் தெறித்தது.

மான் சிங்குக்கு பூலானை நெருங்கிய பின்னர்தான் மனசுக்குள் தயக்கம் எழுந்தது. உடம்பெல்லாம் தணலாகக் கொதித்தது.

எப்படியோ துணிச்சலை வரவழைத்துக் கொண்டு பூலானின் கைகளில் ஒன்றைப் பற்றி, அவள் விரல்களோடு தன்விரல்களைக் கோர்த்துக் கொண்டான். விரல்களால் விரல்களை சிறிது இறுக்கினான்.

பூலானுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே அவனை நிராகரித்தால் மனம் உடைந்து போவான். உறவும் பாதிக்கப்பட்டுவிடும்.

எப்படித் தவிர்ப்பது என்று தவித்தாள். அதேநேரம் மான் சிங்கின் நெருக்கமும், அவன் மூச்சுக்காற்றின் வெப்பமும் பூலானின் மனதின் ஓரத்தில் தூங்கிக்கிடந்த சபலம் என்ற சிங்கத்தை உசுப்பவும் தொடங்கியது.

மான் சிங்கின் மற்றொரு கரம் பூலானின் முதுகை வளைத்தது. அப்படியே பூலானை தன் மார்போடு அணைத்த மான் சிங், குனிந்திருந்த அவள் தலையில் ஆவேசமாக முத்தமிட்டான். மான் சிங்கின் கரம் அவசரப்பட்டு அலைந்து முதுகில் இருந்து படிப்படியாக இறங்கிக் கொண்டிருக்க, மான் சிங் தன் கன்னத்தை பூலானின் கன்னத்தோடு ஒட்டிக்கொண்டான்.

மான் சிங்கின் கரம் முதுகை வருடி வருடி இறங்க, மான் சிங்கின் உடலுக்குள் தன் உடல் அடங்கி நிற்க, பூலானுக்கு அது இதமாக, பாதுகாப்பாக, தேவையாக இருக்க, பூலான் எதிர்ப்பின்றி பணியத் தொடங்கிய பலவீன நொடியில், சட்டென்று பூலானின் மனக் கண்ணில் மல்லா தோன்றினான்.

திடீர் முடிவாக மான் சிங்கிடம் இருந்து தன்னைத் திமிறி விடுவித்துச் கொண்டாள் பூலான். மான் சிங் அதை எதிர்பார்க்கவில்லை. ஏமாற்றம் அவன் முகத்தில் தெரிந்தது.

பூலான் தனக்குள் சொல்லிக்கொள்வதைப் போலவும், அவனிடம் மன்னிப்புக் கேட்பது போலவும் முணு முணுத்தாள்: "என்னால் மல்லாவை மறக்க முடியவில்லை, என்னை மன்னித்துவிடு மான் சிங்."

அப்போதுதான் மான் சிங்குக்கு பூலானின் செயலுக்கான அர்த்தம் புரிந்தது. அவள்மீது பரிவும் ஏற்பட்டது.

பூலானின் அருகில் வந்து அவள் காதருகில் சொன்னான்: "எனக்குப் புரிகிறது. நான் உனக்காகக் காத்திருப்பேன்!"

அவனது இதமான வார்த்தையால் பூலான் நெகிழ்ந்து போனாள். கண்கள் பனிக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்களும் பனித்திருந்தன. கல்லுக்குள் ஈரம் என்பது அதுதானோ என்று நினைத்தாள் பூலான்.

பூலானையே சிறிது நேரம் கண்கொட்டாமல் பார்த்துவிட்டு புறப்பட்டுப் போய்விட்டான் மான் சிங்.

அன்றிரவு பூலானுக்கு தூக்கம் வராமல் அடம்பிடித்தது. மான் சிங்கின் அணைப்பும், அவன் கைகள் அவசர ஆராய்ச்சி நடத்திய நினைப்பும் உடலைப் புரட்டி எடுத்தது. தகிக்கச் செய்தது.

மறுபுறம் மல்லாவுக்கு துரோகம் செய்வதாகப் போய்விடுமா? மல்லாவின் ஆவி கவலைப்படுமோ? என்றும் நினைத்தாள்.

'எல்லாமே துர்க்கை அம்மன் விட்ட வழி' என்று மனதைத் தேற்றினாள். கண்களை மூடிக்கொண்டாள்.

காலையில் எழுந்ததும் பாபா அவளை அழைத்து தன் திட்டங்களை மளமளவென்று கூறிமுடித்தார்.

மறுநாள் அங்கு மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற இருந்தது. சம்பல் பள்ளத்தாக்கில் உள்ள முக்கியமான கொள்ளைக் கோஷ்டிகளின் தலைவர்கள் எல்லாம் பாபா தலைமையில் கூட இருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் வைத்து பூலானை அறிமுகப்படுத்தப் போவதாக கூறினார் பாபா. "நாளைய கூட்டத்தின் முன்னர் என் ஆட்களில் இருந்து உனக்கு நம்பிக்கையான ஆட்களை பொறுக்கிக்கொள்! நாளை முதல் நீ புதிய கோஷ்டியின் தலைவியாகிறாய்!" என்றார் பாபா.

இத்தனை விரைவாக பாபா தன்னை தனியாகச் செல்லச் சொல்லுவார் என்று பூலான் நினைத்திருக்கவில்லை.

பாபாவின் சொல்லை மறுத்துப் பேசுவது மரியாதையாக இருக்காது என்பதால் அவர் சொன்னதற்கு எல்லாம் தலையாட்டினாள்.

திடீரென்று பாபாதான் அந்தக் கேள்வியை வீசினார்: "மான் சிங்கைப் பற்றி என்ன நினைக்கிறாய் பூலான் தேவி?"

நேற்றிரவு நடந்தது பாபாவுக்கு தெரிந்து விட்டதோ? என்று துணுக்குற்றாள் பூலான்.

"நீ விரும்பினால் அவனை உன் குழுவின் தளபதியாக வைத்துக்கொள்ளலாம். அதற்காகத்தான் கேட்டேன்," என்றார் பாபா.

உடனே தன் விருப்பதைச் சொன்னால் பாபா சந்தேகிப்பாரோ என்று நினைத்த பூலான், "மான் சிங் உங்கள் நம்பிக்கையான தளபதியல்லவா, அதனால்..."

"எப்படி உன்னுடன் வைத்துக்கொள்வது என்று யோசிக்கிறாயா?" என்று முடித்தார் பாபா.

"ஆம்" என்று தலையசைத்தாள்.

"உனக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன். அந்த வாக்கை நிறைவேற்ற என் தளபதியை இழக்கிறேன். ஒன்றை இழந்தால்தான் இன்னொன்றைப் பெற முடியும். இழக்க விரும்பாதவன் வீரனாக முடியாது. நல்ல மனிதனாகவும் முடியாது. மான் சிங் இனி உன் தளபதி!" என்றார்.

மான் சிங்குக்கு முடிவு தெரிவிக்கப்பட்டது. பாபாவை விட்டுப்பிரிவது மனக்கஷ்டமாக இருந்தாலும், பூலானுக்கு துணையாக இருப்பதை நினைத்து சந்தோசப்படவும் செய்தான் மான் சிங்.

பூலானும், மான் சிங்கும் கலந்து பேசி நம்பிக்கையான ஆட்களை தெரிந்தெடுத்துக் கொண்டார்கள்.

பூலான் தலைவியாகவும், மான் சிங் அவள் தளபதியாகவும் நியமிக்கப்பட்டதும் மான் சிங்கின் போக்கு தலைகீழாக மாறிவிட்டதுபோலத் தோன்றியது.

பூலானிடம் முன்புபோல அல்லாமல் பணிவு காட்டத் தொடங்கினான். ஒரு நாளுக்குள் அவனிடம் ஏற்பட்ட மாற்றத்தால் அவன் தன்னைவிட்டு தூரவிலகி நிற்பது போன்ற உணர்வு பூலானுக்கு ஏற்பட்டது.

நெருங்கியபோது வேண்டாம் போலிருந்தது. விலகிப்போகும்போது வேண்டும்போல இருக்கிறது. மனமே விசித்திரம்தான் என்று நினைத்துக் கொண்டாள்.

மறுநாள் பலத்த பாதுகாப்பு மத்தியில் கொள்ளைக் கோஷ்டியினரின் கூட்டம் நடைபெற்றது.

கொள்ளைக் கோஷ்டிக்காரர்களாக இருந்தாலும் கட்டுப்பாடாக நடந்து கொண்டார்கள்.

பொலிசாரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவது, கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த சிலர் பொலிசாரின் கையாட்களாக மாறித் தகவல்கள் கொடுப்பது பற்றி நீண்டநேரம் விவாதித்தார்கள்.

பாபா பூலானை எல்லோருக்கும் அறிமுகம் செய்துவைத்தார்.

மல்லாவின் காதலியாகவும், துணிச்சலான கொள்ளைக்காரியாகவும் பூலானைப் பற்றி முன்னரே அறிந்திருந்தவர்களுக்கு, அவளை நேரில் கண்டதும் பிடிபடாத சந்தோசம்.

"பூலான் தேவிஜிக்கு ஜே...ஜே" என்று கிட்டத்தட்ட துள்ளினார்கள்.

ஒவ்வொருவராக வந்து பூலானின் நெற்றியில் திலகமிட்டார்கள்.

"துர்க்காதேவியே நேரில் வந்து நிற்பது போல இருக்கிறது" என்றான் ஒரு கோஷ்டித் தலைவன்.

பாபா சொன்னார்:

"துர்க்காவின் பழிவாங்கும் படலம் இனிப் பயங்கரமாக இருக்கும்!"

**(தொடர்ந்து வரும்)**

# புலம்பும் அழகி



குலுங்கிக் குலுங்கி இரசிகர்களையும் குலுங்கவைக்கும் நடிகை எலிஸபெத் ஹர்லி. விளம்பர படங்களுக்கும் திவ்வியமான போசுகள் கொடுப்பவர். அப்பேர்ப்பட்ட அம்மணிக்கும் ஒரு பெரிய கவலை. "எனக்கு என்னையே பிடிக்கவில்லை. என் உடலமைப்பு சரியாக இல்லை. என்னுடைய பின்புறம் ஆண்களைப்போல இருக்கிறது." என்று புலம்பலோ புலம்பல்.

அதுமட்டுமல்ல, இரசிகர்களை மகா ஜொள்ளர்களாக்க, பின்புற ஜீன்சுக்குள் பஞ்சை அடைத்து வைத்த கதைகள் எல்லாம் வெளி வந்து கொண்டிருக்கின்றன. உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது பார்த்தீர்களா?

# வால் குழந்தை



சற்றுக் குறும்புக்காரக் குழந்தைகளை சரியான 'வால்' என்று செல்லமாய் சொல்வதுண்டு. இனிமேல் அப்படிச் சொல்லாதீர்கள்!

உங்கள் குழந்தைகள் உண்மையாகவே வாலோடு பிறந்துவிடலாம்.

போர்ட்டோரிகோவில் ஒரு குழந்தை வாலோடு பிறந்திருக்கிறது. பிறக்கும்போது ஒரு இன்ச் அளவில் இருந்தது. உடனடியாக சத்திர சிகிச்சை மூலம் வாலை அகற்ற வைத்தியர்கள் முன்வந்தார்கள். குழந்தையின் பெற்றோர் விரும்பவில்லை. 'இருந்துவிட்டுப் போகட்டும்' என்றனர்.

இப்போது அந்தக் குழந்தை சல்வடோருக்கு இரண்டு வயதாகிறது. குழந்தை வளர வளர வாலும் வளர்வதால் பெற்றோர்கள் கவலையடைந்தனர்.

குழந்தையைப் பார்ப்பவர்களும் 'பேய்க் குழந்தை' என்று கூறியதால் பெற்றோரின் கவலை அதிகமாகியது.வாலை அகற்ற சத்திர சிகிச்சை செய்யுமாறு மருத்துவமனைக்குச் சென்றனர்.

வாலை அகற்றினாலும்கூட மீண்டும் வளருமா இல்லையா, என்று உறுதியாக எதனையும் கூறமுடியாதாம்.

சீனா, பிரிட்டன், மலேசியா போன்ற நாடுகளில் எப்போதாவது இப்படியான வால் குழந்தைகள் பிறக்கின்றனவாம்.இவை பரம்பரை காரணமாக இருக்கலாம் என்று டாக்டர்கள் கூறினாலும், திட்டவட்டமான காரணம் தெரியவில்லை.

# எய்ட்ஸ்சுக்கு மருந்து

அவரது பெயர் மஜீத். இந்தியாவில் கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் என்ற இடத்தில் மருத்துவமனை வைத்திருக்கிறார். ஆனால் இவர் டாக்டருக்குப் படிக்கவே இல்லை. ஆனால் டாக்டராக இருக்கிறார். என்ன குழப்பமாக இருக்கிறதா?

இந்தியாவில் இலட்சக்கணக்கான போலி டாக்டர்கள் இருக்கிறார்கள். நம்நாட்டில் போலி டாக்டர்களைவிட அரைகுறை டாக்டர்கள் தொகை அதிகரித்து வருகிறது. அதனால்- 'இந்தியாவில்தானே, இங்கில்லையே?' என்று நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டாம்.


மஜீத்

இந்தியாவில் உள்ள போலி டாக்டர்களில் மஜீத் வித்தியாசமானவர். மஜீத் மருந்து கண்டுபிடித்திருப்பது எந்த நோய்க்குத் தெரியுமா? பயங்கர மரண வில்லனான 'எய்ட்ஸ்' நோய்க்கு.

நாம் நம்பினால் என்ன நம்பாவிட்டால் என்ன; கடந்த ஆண்டு மட்டும் 'எய்ட்ஸ்' நோய்க்கான மருந்து வியாபாரத்தில் மூன்று கோடி கறந்துள்ளார் மஜீத். இவரது மருந்தின் பெயர் 'இம்யூனோ க்யூ.ஆர்.' 23 மூலிகைகள் அடங்கி உள்ளனவாம் இம்மருந்தில். அதில் நாலு மூலிகைகள் பற்றிய தகவல் படுஇரகசியம் என்கிறார் மஜீத்.

சமீபத்தில் இவரது மருந்தின் வியாபார உரிமத்தை கேரள அரசு இரத்துச் செய்துள்ளது. 'எய்ட்ஸ்'சை குணப்படுத்தும் மருந்து என்பது ஏமாற்று என்கிறது கேரள அரசு.

ஆனால் மஜீத் சவால் விடுகிறார். "'எய்ட்ஸ்' கிருமிகளை என் உடலில் ஊசி மூலம் ஏற்றுங்கள். நான் குணப்படுத்திக் காட்டுகிறேன்!" என்று மார் தட்டுகிறார்.

அவரிடம் சிகிச்சை பெற்றவர்கள் "மஜீத்தான் எங்களுக்கு புது வாழ்க்கை தந்தார். எய்ட்ஸில் இருந்து எங்களை மீட்டுவிட்டார்," என்று அடித்துச் சொல்கிறார்கள்.

"அதெல்லாம் சும்மா, மஜீத்திடம் சிகிச்சை பெற்றவர்கள் சரியான பரிசோதனை நிலையங்களில் சோதனைக்கு உட்பட்டால்தான் எய்ட்ஸ் பூரணமாக குணப்பட்டதா இல்லையா, என்ற உண்மை தெரியும்" என்கிறார்கள் கேரள டாக்டர்கள்.

மஜீத்தின் 'எய்ட்ஸ்' மருந்து போலியா? உண்மையா? என்பது தெரியாவிட்டாலும், 'எய்ட்ஸ்' நோயாளிகள் பலர் மஜீத்தை மலையாக நம்பியிருக்கிறார்கள். தினமும் அவரது மருத்துவமனைக்கு படை எடுக்கிறார்கள்.

# அமெரிக்க விஷம்



இந்தியாவுக்கு அடுத்ததாக ஆசியாவில் அமெரிக்கா அஞ்சுவது சீனாவிடம்தான். சீனா பெரும் வல்லரசாக மாறிவிடும் என்ற பயத்தில், சீனாவையும் சின்னாபின்னமாக்க சதித் திட்டங்களை தீட்டிவருகிறது அமெரிக்கா.

சீனாவில் ஜனநாயகம் தோன்றவேண்டும் என்று அமெரிக்கா நீலிக் கண்ணீர் வடிப்பதும் வழக்கம்.

சமீபத்தில் சீனாவுக்கு எதிரான விஷமத்தனமான குற்றச்சாட்டை அமெரிக்க செய்தி நிறுவனங்கள் கிளப்பியிருந்தன. மிகத் திட்டமிட்ட ரீதியில் குற்றச்சாட்டு ஜோடிக்கப்பட்டது.

அமெரிக்கப் பத்திரிகைகளில் சீனநாட்டு மருத்துவமனை ஒன்று விளம்பரம் கொடுத்தது போல அந்த விளம்பரம் வெளியிடப் பட்டிருந்தது.

"மரண தண்டனைக் கைதிகளிடம் எடுக்கப் பட்ட சிறுநீரகம் எங்களிடம் உள்ளது. தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்." என்று அந்த விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த விளம்பரத்தைக் காண்போருக்கு சீனா ஒரு கொடுமையான நாடு என்ற எண்ணமும் ஏற்படும். 'சிறுநீரகம் விற்குமளவுக்கு வங்குரோத்தாகிவிட்டதாக்கும்' என்றும் நினைப்பர். அதுதான் அமெரிக்காவின் ஆசை. அந்த விளம்பரம் பற்றி அறிந்த சீன அரசு, அது கடைந்தெடுத்த பொய் என்று அம்பலப்படுத்தி இருக்கிறது. அமெரிக்கா விஷம் கக்கியும் சீனாவுக்குப் பாதிப்பு இல்லை.

# இரத்தத்தில் கலந்த பணிவு

இந்தியாவுக்கு எலிசபெத் ராணி சென்றிருந்தார் அல்லவா? அவரை வரவேற்ற பலர், இங்கிலாந்து ராணி என்று அழைக்காமல் எங்கள் ராணி என்றே அழைத்து மகிழ்ந்தனராம்.



"வெள்ளைக்காரர்களிடம் அடிமையாக இருப்பதில் சுகம் கண்ட பழக்கதோஷம் இன்னமும் போகவில்லை. அதுதான் தாங்களாகவே அவரை ராணியாகக் கருதிக் கொண்டனர், என்று தமிழக பத்திரிகை ஒன்று கிண்டலடித்திருக்கிறது.

இந்தியாவில் மட்டும்தானா? நம் நாட்டில் ஆயுதம் ஏந்திய அடங்காத் தமிழர்கள் கூட இப்போது அரசியல்வாதிகள் ஆனபின்னர் "வெள்ளைக்காரன் சொன்னா சொன்னதுதான்" என்று புளகாங்கிதம் அடைகிறார்கள். வெள்ளைக்கார தூதர்கள் விருந்துக்கு கூப்பிட்டால், கண் மண் தெரியாமல் அவர்கள் சொல்வதற்கெல்லாம் தோதாக பேசிவிட்டும் வருகிறார்கள்.

எல்லாம் இரத்தத்தில் கலந்த அடிமைப் புத்திதான்!

www.padippakam.com

# எங்கும் ஒரே விதம்

→ இது சமீபத்தில் கொழும்பில் நடந்த குண்டுவெடிப்பின் பின்னர் எடுக்கப்பட்ட படம்தானே தாமதமாக ஏன் பிரசுரிக்கிறீர்கள் என்று கேட்க நினைக்கிறீர்களா? அப்படி நினைத்தால் மகா தப்பு!


ஒரே சோசலிச நாடாக இருந்த யூகோஸ்லாவியாவை பல துண்டுகளாக உடைந்தது. அப்படி உடைவதற்கு அமெரிக்காவும் பின்னணியில் நின்றது. தனது நலனுக்காக நாடுகளை பிரிக்கும், தனது நலனுக்காக ஒற்றுமை பற்றியும் பசப்பும், அதுதான் அமெரிக்கா.

பிரிவுபட்ட யூகோஸ்லாவியாவில் பொஸ்னியாவும், ஹெர்ஸகொவினாவும் இணைந்து ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டன. எனினும் இப் பிரதேசத்துக்குள் வாழும் குரோசிய இன மக்களும், முஸ்லிம்களும், மற்றும் சேர்பியர்களும் மோதிக் கொண்டனர்.

இந்த உள்நாட்டு யுத்தம் இலட்சக்கணக்கான மனித உயிர்களை உறிஞ்சிக் குடித்தது.

குண்டுத்தாக்குதல்கள், ஷெல் அடிகள், துப்பாக்கிச் சூடுகள் என்பவை சகஜமாக இருந்தன. ஹெர்ஸகொவினாவில் உள்ள மொஸ்டார் என்ற நகரில் இருந்த முஸ்லிம்களின் கலாசார மையம் ஒன்று குண்டுத் தாக்குதலால் சிதைவடைந்தது. அக் காட்சிதான் இது. 1991ல் இத் தாக்குதல் நடைபெற்றது.

இரத்தம் ஒரே நிறம்! நாசம் ஒரே விதம்! யுத்தம் என்பதே மோசம்தான்!



# பெரிது பெரிது

↓ பெரிய பூசணிக்காய்களை முரசில் தினுசு தினுசாக பார்த்திருக்கிறீர்கள்தானே. இந்தப் பையனின் தலையில் இருப்பதும் பூசணிக்காய் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை.

வேறென்ன?

ஆப்பிள்!

உலகிலேயே மிகப் பெரிய ஆப்பிள் இதுதான். இதன் எடை 1 கிலோ 380 கிராம். இதன் சுற்றளவு 54 சென்டி மீட்டர். இங்கிலாந்தில் உள்ள டெட்லிங் நகரில் நடைபெற்ற பழக் கண்காட்சியில் இந்த இராட்சத ஆப்பிள் வைக்கப் பட்டிருந்தது.



ஆப்பிளை சுகமான சுமையாக தாங்கி நிற்கும் சிறுவனுக்கு ஆறு வயது. கனி பெரிசு. காணக் கண் இரண்டு போதாது.



# விறு விறு வேகம்

← நேராக நடப்பவர்கள்கூட தப்புச் செய்தால் தலைகீழாக நடக்காதே என்று கண்டிப்பது உண்டு. ஆனால் இந்தச் சிறுவனோ தலைகீழாகவே நடக்கிறான். இவன் தப்புச் செய்தால் எப்படிக் கண்டுபிடிப்பது?

இந்த சுட்டிப் பையனின் பெயர் இசக்கிராஜா. 200 அடி தூரம்வரை தலைகீழாக விறு விறுவென்று நடந்து விடுவான். ஐந்து வயதில் இப்படி நடக்கத் தொடங்கிவிட்ட இசக்கிராஜா தமிழ்நாட்டில் தூத்துக்குடியைச் சேர்ந்தவன்.

மகன் தலைகீழாக நடப்பதைக் கண்டதும் வியப்புடன் பயமும் ஏற்பட்டதாம். அதனால் டாக்டரிடம் மகனை கூட்டிச் சென்றனர் பெற்றோர்.

"பயப்படாதீர்கள். ஆனால் இது அபூர்வமான விஷயம்தான். நல்ல பயிற்சியாளரை வைத்து பயிற்சி கொடுத்தால் சாதனை மன்னனாக வருவான்" என்று தட்டிக்கொடுத்தாராம் டாக்டர். அதன்பின்னர் பெற்றோரும் உற்சாகமளிப்பதால் தலைகீழ் நடையால் பலரைக் கவர்கிறான்.

வி.ஐ.பி. கடற்கரையில் பலர் முன்பாக நடந்துகாட்டி அசத்தினான். படிப்பிலும் படு கெட்டி. தலைகீழாக நின்றாவது மூன்று இடங்களுக்குள் வந்துவிடுவான் என்கிறார் தந்தை. இந்த விடயத்தில் அவர் தலைகீழாக என்று சொல்வது, தன் மகனுக்கு படிப்பில் உள்ள தீவிர முயற்சியை!

↓ சிறிய நாடு ஒன்று பெரிய நாட்டை வெல்லலாம், சிறிய படை ஒன்று பெரிய சேனையை எதிர்த்து நிற்கலாம் என்று சீனப் புரட்சித் தலைவர் மா.ஓ.சேதுங் கூறியிருந்தார். அத்தோடு புதிதாக ஒன்றையும் சேர்த்துக் கொள்ளலாம், சிறிய மலை பெரிய மலையை வெல்லலாம்.

கறுப்பு மலையின் பெயர் ஈமானுவல் யார் பிறவ். அமெரிக்காவைச் சேர்ந்தவர். அண்ணாச்சியின் எடை 386 கிலோ. வெள்ளை மலையின் பெயர் ரோர்ஸ்ரென்ஸெமீப்லெர். அண்ணாரின் எடை 163 கிலோ. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர்.

இந்த இரண்டு மலைகளும் ஐரோப்பிய சுமோ மல்யுத்த சாம்பியன் பட்டத்துக்காக சமீபத்தில் மோதிக்கொண்டன. ஜேர்மனியில் இந்த அதிர் மோதல் இடம்பெற்றது.


எடை கூடிய ஈமானுவலை, எடையில் குறைந்த வெள்ளை மலை வீழ்த்திவிட்டது! தந்திரமாக வித்தைகாட்டி பெரு மலையை புரட்டி விட்டார். உலக சுமோ மல்யுத்த சாம்பியனான ஈமானுவலை சிறு மலை ஒன்று தோற்கடித்திருப்பது சுமோ உலகை ஆச்சரியப்படவைத்திருக்கிறது.

தோல்விகண்டுள்ள இந்த கறுப்பு மலைதான் இந்தியாவில் தயாரான இந்திப்படமான 'மிஸ்ரர் அன்ட் மிஸஸ் கிலாடி' படத்திலும் நடித்துள்ளார். அச் செய்தி தகவல் பெட்டியில் முன்னரே வெளிவந்திருந்தது.

# கலப்பு மோதல்




தகவல் பெட்டி



# "பொறுத்தது போதும்"

↑ "பொறுத்தது போதும் எரிமலையென பொங்கி எழு!" 1977க்கு முன்னர் தமிழர் கூட்டணித் தலைவர்களின் உதடுகளில் அடிக்கடி உட்காந்துபோனது எரிமலை.

தம்பிமாரை தட்டி எழுப்ப கூட்டணி அண்ணர்மார் எரிமலையை அடிக்கடி உதட்டில் ஏந்தினார்கள். இறுதியாக எரிமலை வெடித்தபோது அரண்டுபோய் ஓடியது அவர்களும்தான்.

சரி அதுபோகட்டும், உண்மையான எரிமலை எப்படி இருக்கும் தெரியுமா? படத்திலே இருக்கிறது -பாருங்கள், எரிமலை பொங்கி எழும் காட்சிதான் இது. பிரிட்டனில் உள்ள கரீபியன் தீவினை ஒட்டியுள்ள 'மான்ஸ்டெர்டில் சவ்ஃபிரைரோ' என்ற எரிமலைதான் முதல் முறையாக இப்படி கிளர்ந்தெழுந்தது.

டன் கணக்கில் சாம்பலும், நெருப்புக்குழம்பும் புகை மண்டலத்தில் சூழ்ந்தது. ஆனாலும் பாரிய உயிர் சேதங்களோ அழிவுகளோ ஏற்படாததுதான் ஆறுதல். 150 வீடுகள் நாசமாயின. 9 பேர் பலியானார்கள். எரிமலையின் சினத்தால் ஏற்படும் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் இது சிறிய சேதம்தான்!

எரிமலையை சும்மா சீண்டக்கூடாது, சீண்டிவிட்டால் பின்னர் என்னாகும் என்று படத்தைப் பார்த்தாலே தெரிகிறது அல்லவா!



படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 27

# ஜெயலலிதாவுக்காகக் கேட்ட கதை

## அறை வாங்கி முழித்த இயக்குநர்

எம்.ஜி.ஆருக்கும், ஜெயலலிதாவுக்கும் இடையே இருந்த அந்நியோன்னியம் பற்றி பல கதைகள் உள்ளன.

எம்.ஜி.ஆரின் உதவியாளர்களில் ஒருவராக இருந்தவர் ரவீந்தர். எம்.ஜி.ஆர். படங்கள் பலவற்றுக்கு கதை வசனம் எழுதியும் உள்ளார். ரவீந்தர் என்று பெயர் சூட்டி இருந்தாலும் அவர் ஒரு முஸ்லிம்.

எம்.ஜி.ஆர். மீது பற்றுக்கொண்டவர் ரவீந்தர். எம்.ஜி.ஆர். பற்றிய தனது நினைவுக் குறிப்பின் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஒரு மன்னருக்கு இரண்டு மனைவிகள். அவர்களுக்குள் சக்களத்தி சண்டை. அரச சபையில் நடனமாட வருகிறாள் ஒரு பெண். அவள் சிறந்த விவேகி. மன்னரையும் கவர்கிறாள். புத்திசாலித்தனமாக மன்னரின் நிர்வாகத்தையும் நடத்துகிறாள்.

மன்னரின் மனைவிகளும், அவளைப் பிடிக்காதவர்களும் சதி செய்து மன்னரிடம் இருந்து அவளைப் பிரிக்கின்றனர். மன்னர் நோயில் விழுகிறார். அவள் மன்னரை சந்திக்கிறாள், மன்னருக்கு உதவுகிறாள். மன்னர் நோயால் மரணமாகிறார்.

மன்னரின் காதலி மன்னரின் மனைவிகளை ஆட்சி நடத்தச் சொல்லிவிட்டு அவர்களுக்கு உதவுகிறாள்.

இக்கதையைக் கூறிய எம்.ஜி.ஆர்., 'ஆடவந்த தெய்வம்' என்ற பெயரில் இதனைப் படமாக்கக்கூடியதாக கதை வசனம் ரெடி பண்ணும்" என்றார்.

"நீங்கள் மறைவதுபோல கதை இருந்தால் மக்கள் ஏற்கமாட்டார்கள்" என்றேன்.

"கதையே அதுதான். எனக்குப் பின்னர் அ.தி.மு.க.வுக்கு அம்முதான் (ஜெயலலிதா) வாரிசு என்கிறதை காட்டத்தான் இந்தப் படம். நீர் கதையை ரெடி பண்ணும்." என்றுவிட்டார்.

இது நடந்தது எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது. முதல்வராக இருந்தபடியே சில படங்களில் நடிக்க எம்.ஜி.ஆர். விரும்பி இருந்தார். அதற்காக தயார் செய்யப்பட்ட கதைகளில் ஒன்றுதான் 'ஆடவந்த தெய்வம்.'

கதையை ரவீந்தர் தயார் செய்ய முன்னரே எம்.ஜி.ஆர். நோயில் விழுந்தார். அமெரிக்கா சென்று திரும்பி வந்தார்.

ரவீந்தர் கதையைக் கொண்டுபோனார். எம்.ஜி.ஆர். அதை ஒரு ஓரத்தில் வைத்துவிட்டார். "மக்களுக்கு நன்றி சொல்வதுபோல ஒரு படம் பண்ணணும். எனக்காக, நான் குணமடைய வேண்டும் என்பதற்காக பலர் தீக்குளிச்சிருக்காங்க. பிரார்த்தனை பண்ணியிருக்காங்க. இதுக்காக நான் என்ன செஞ்சேன் என்று தெரியல்லை. மக்களுக்கு நன்றி சொல்லுறமாதிரி கதை பண்ணும். புதுமுகங்கள் நடிக்கட்டும். நான் கடைசிக் காட்சியில் நடிப்பேன்." என்றார் செம்மல்.

அந்த ஆசையும் நிறைவேறவில்லை. எம்.ஜி.ஆரின் கடைசிக் காலத்தில் ஜெயலலிதாவுடன் ஏற்பட்டிருந்த கசப்புத்தான் 'ஆடவந்த தெய்வம்' கடைசிவரை திரைப்படமாகாமல் செய்துவிட்டது.

என்றாலும் இப்போது ஜெயலலிதாவின் எதிரிகள் சொல்வதுபோல எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவை முற்றாக தன்னிடம் இருந்து விலக்கவும் இல்லை. இடைக்கிடையே தண்டனையாக சில நடவடிக்கைகள் எடுத்தாலும்கூட, கட்சியைவிட்டு விரட்ட நினைக்கவில்லை.

ஜெயலலிதா விவகாரத்தில் எம்.ஜி.ஆர். கடைசிவரை ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடினார் என்பது வேண்டுமானால் சரியாக இருக்கலாம்.

### இயக்குநருக்கு அதிர்ச்சி

'பா'வில் தொடங்கும் இயக்குநர் வரிசையில் அவரும் ஒருவர். புது நடிகைகளை அறிமுகம் செய்வதில் குருவை மிஞ்ச நினைத்தார்.

நடிப்பின் இமயத்துடன் சேர்ந்து தானும் நடித்து ஒரு படத்தை இயக்கினார் அந்த இயக்குநர். தனது சகோதரிகளாக நடிக்க புது முகங்களை தேடினார். அவ்வாறு தேடலில் கிடைத்த ஒரு புதுமுகம் பார்வைக்கு இலட்சணமாகவும், எடுப்பான தோற்றப் பொலிவுடனும் இருந்தார்.

இயக்குநருக்கு சபலப் புத்தி எட்டிப்பார்த்தது. 'மேக்கப் டெஸ்ட்' என்று தனி அறைக்கு அழைத்துச் சென்று ஆங்காங்கே தொட்டிருக்கிறார்.

முதலில் இயல்பாக தற்செயலாகத்தான் கை படுகிறது என்று நினைத்தார் புதுமுகம். இயக்குநருக்கு தைரியம் அதிகமாக கை மேலும் நீண்டிருக்கிறது. அதற்குமேலும் பொறுக்க இடமில்லாத நிலையில், ஓங்கி ஒரு அறைவிட்டார் புதுமுகம்.

இயக்குநர் அதனை எதிர்பார்க்கவில்லை. அறைந்த அறையில் மூக்குக் கண்ணாடிகூட கழன்று கீழே விழுந்துவிட திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்தார். "போடா உன் படமும் வேண்டாம், நடிப்பும் வேண்டாம்" என்று கும்பிடு போட்டுவிட்டுப் போய்விட்டார் அந்த புதுமுகம்.

புதுமுகம் போன வேகமும், இயக்குநரின் திருட்டு முழியும் அறைக்கு வெளியே நின்ற உதவியாளர்களுக்கு உள்ளே நடந்ததை ஊகிக்கப் போதுமானதாக இருந்தது.


ராம்ஜி-விஜயசாந்தி

## கமல் செய்தது... எம்.ஜி.ஆருக்...

கமலஹாசன் நடிக்கும் 'மருதநாயகம்' படத்... காட்சிகளை ரசித்தார். போய்விட்டார். எலி... நடைபெற்றது. படத் தொடக்கவிழாவுக்கு வந்த சி... சென்றபின்னர் தாமும் சென்று விட்டனர்.

கமலின் முத்தம் வாங்கிப் புகழ்பெற்ற ஆ... சத்யராஜ், பிரபு, கார்த்திக் ஆகியோர்தான்... கலந்துகொண்டனர். கமலும் மனைவியும் நேர... குருநாதர் பாலச்சந்தர் கடைசிவரை தலைகா...

சரத்குமார் தவிர படைப்பாளிகள் சங்கத்தி... அழைப்பிதழ் அனுப்பினார். யாரும் எட்டிப்பா...

விழா மேடையில் தன்முன்னேற்றத்துக்கு ... திருந்தார் கமல், அவர்கள் தனது நன்றிக்குரியவ... மட்டும் இருக்கவில்லை. சிவாஜி, கருணாநிதி, ...

இப்போது அது ஒரு சர்ச்சையாகிவிட்டது. ... சிறுவனாக நடித்தவர். கமலின் முதலாவது ... வைத்தவர் எம்.ஜி.ஆர். அப்போது அவர் தமிழ...

கமலின் நூறாவது படவிழாவுக்கு தலை... பிறை'க்காக கமல் முதலில் தேசிய விருது வா... சிறப்பு விருந்தினரும் எம்.ஜி.ஆர்.தான்.

அந்த விழாக்களுக்கு கருணாநிதியையோ ... கருணாநிதி முதல்வராக இருக்கும்போதுதா... கமல். எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்தபோது சிவா...

இப்படி எழுதியுள்ளது தமிழகத்தின் பிரபல ...

## ரசிகைகள் வட்ட...

தனது முறைப்பெண்ணைத் திரு... அறிவித்தார். ரசிகைகள் வட்டாரத்தி... மனச்சேதம்.

தீவிரவாத ரசிகைகள் பலர் ... இடங்களாக கருதப்படும் இடங்களு... அப்பாஸ் யாரிடமும் மாட்டாமல் த... என்னாகி இருப்பாரோ என்ன...

சிம்ரானும் மூட் அவுட். '... நாள் விழாவுக்கு சிம்ரானை... ளர்கள் கூட்டம் முட்டி மோதி... கடைசிவரை சிம்ரான் தரி... கவே இல்லை. அதனா... நாயகன் விஜய்க்கு கூ... லேசான வருத்த... மாம்.




## சந்திக்கு வந்த சண்டை

கிசுகிசுவாகப் பேசப்பட்ட செய்தி இப்போது சந்திக்கு வந்துவிட்டது. கத்தரிக்காய் முற்றினால் சந்தைக்கு வந்துதானே ஆகவேண்டும்.

'தொட்டாச்சிணுங்கி' படத்தில் கவர்ச்சியாக நடித்தவர் தேவயானி. அப்படத்தில் நடித்தபோது கார்த்திக் தேவயானியுடன் நெருக்கமாகி இருக்கிறார். இதனைப் பார்த்த ரேவதிக்கு எரிச்சலோ எரிச்சல். கார்த்திக் ரேவதி காதல் கதை ரொம்பப் பழசு. பின்னர் அது கைகூடாமல் போனதும் தெரிந்ததே. அப்படியிருந்தும் கார்த்திக்குடன் இப்போதும் நல்ல நண்பியாக பழகுகிறார் ரேவதி.

கார்த்திக் தேவயானியுடன் பழகியது நல்ல நண்பிக்கு ஏன் பிடிக்காமல் போகவேண்டும். சமீபத்தில் கார்த்திக் ஜோடியாக நடிக்க தேவயானியை ஒப்பந்தம் செய்தனராம். கார்த்திக் மூலமாகவே தேவயானி வேண்டாம் என்று தயாரிப்பாளர்களிடம் கூறவைத்தாராம் ரேவதி. பொறுத்துப் பொறுத்து ... தேவயானி, இப்போது வெளிப்படையாகவே ரேவதியை சாடுகிறார்.

## தாத்தாக்கள்

நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் மகனுக்கு மாப்பிள்ளை ரெடி. கிராமத்தில் உள்ள தோட்டத்தை விற்றுள்ளார். சீர்வரிசை கொடுக்கப் போகிறார். கவுண்டமணி தாத்தாவாகிவிட்டார். வடிவேலும் தாத்தாவாகப் போகிறார். நகைச்சுவை நடிகர்கள் எல்லாம் தாத்தாக்களா? இளைஞர்களை ஊக்குவிக்கப்பா!

## குஷ்...

இளம் ஹீரோ... தயார் என்கிறார்... நடிப்பதன்மூலம் அ... பலம் ஏற்படும். தங்க... மெருகூட்டிக் கொள்ள... முன்னர் நடிகை ராதி... படித்தான் சொன்னார்-ஆ... சாந்தி மட்டும்தான் இளம்... களுடன் நடித்து தான் ப... கொண்டி... கிறார்.


ராம்ஜி-கல்ப...
படம்: வீரபாண்டிக் ...

### மினி சினி

* சி. சுந்தர் இயக்கும் 'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்க ரம்பா-மகேஸ்வரி ஒப்பந்தமானார்கள். படப்பிடிப்பின்போது ரம்பா தகராறு செய்ய, தற்போது ரம்பா வேடத்தில் சிம்ரானை நடிக்க வைத்துள்ளனர்.
* சுவலட்சுமி மலையாளத்தில் அறிமுகமாகும் 'அனுராகக் கொட்டாரம்' படத்தின் படப்பிடிப்புக்கள் முடிவடைந்து விட்டன. பிரபல மலையாள இயக்குநர் வினயன் இயக்கியுள்ள இப்படத்தில் தீபன் என்பவர் ஹீரோவாக நடித்துள்ளார்.
* 'சாதிசனம்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமானவர் மகேஷ். இவர், 'இந்தியன்' படத்தில் கமல் செய்யும் வர்மக்கலையை சினிமாவுக்காக முறையாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்.
* சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில், சிரஞ்சீவி நடிக்கும் தெலுங்குப் படமான 'மாஸ்டர்' படத்திற்கு தேவா இசையமைப்பது தெரிந்த செய்தி. இந்தப் படத்தில் தேவா இசையில் சிரஞ்சீவி பாடல் ஒன்றைப் பாடியுள்ளார் என்பது புதிய செய்தி.
* 'பகைவன்' படத்தயாரிப்பாளர் வி.என்.சுந்தர் அடுத்துத் தயாரித்து இயக்கும் படத்தில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கிறார். 'அண்ணாமலை' படத்தில் ரஜினிக்கு மகளாகவும், 'மறவன்' படத்தில் பிரபுவுக்கு தங்கையாகவும் நடித்த நட்சாயினி இதில் கதாநாயகியாக நடிக்கிறார்.
* மம்முட்டி-தேவயாணி நடித்துள்ள 'மறுமலர்ச்சி' படத்தில், அதன் இயக்குநர் பாரதியும், ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சனும் நடித்துள்ளனர்.
* மலையாளம்-தமிழ்-தெலுங்கு-கன்னடம்-இந்தி ஆகிய ஐந்து மொழிகளில் 'இந்தியா கேட்' என்ற படம் தயாராகவுள்ளது. மோகன்லால் கதாநாயகனாக நடிக்கும் இந்த ஐந்து மொழிகளில் தயாராகும் படத்தை இயக்குகிறார் ஜோஷி.
* பிரபு நடிக்கும் 'பொன்மனம்' படத்திற்கு இசையமைப்பவர் எஸ்.ஏ.ராஜ்குமார். இவர் ஏற்கனவே பிரபு நடித்த 'சின்னப்பூவே மெல்லப்பேசு', 'மனசுக்குள் மத்தாப்பு' ஆகிய இரண்டு படங்களுக்கு இசையமைத்தவர்.
* நக்மாவின் தங்கை ரோஷினியைத் தொடர்ந்து, அவரது கடைசித் தங்கை ஜோதிகாவும் நடிக்க வருகிறார். இவர் மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் இயக்கும் இந்திப் படத்தில் அறிமுகமாகிறார்.
* நடிகர் திலகமும் மோகன்லாலும் இணைந்து நடித்த மலையாளப்படமான 'யாத்ராமொழி' வெற்றிகரமாக ஓடியதைத் தொடர்ந்து, தமிழில் மொழி மாற்றப்பட்டு வருகிறது. இந்தப்படத்தை பிரதாப் போத்தன் இயக்கியுள்ளார்.

## தூக்க மாத்திரை விழுங்கிய நடிகை

எம்.ஜி.ஆருடன் பல படங்களில் மோதியவர் ஜஸ்டின். அவரது மகள் பபிதா. சினிமாவில் கவர்ச்சி ஆட்டங்கள் ஆடியவர்.

நாயகன் படத்தில் 'நான் சிரித்தால் தீபாவளி' பாடலுக்கு ஆடியவர் பபிதா. பின்னர் 'ரசிகன்' உட்பட தமிழ், தெலுங்கு, மலையாளம் உட்பட 300ற்கு மேற்பட்ட படங்களில் கவர்ச்சி நடனம் ஆடியிருக்கிறார்.

ரஜினி என்னும் வாலிபரைக் காதலித்தார் பபிதா. இருவரும் திருமணம் செய்து கொண்டனர். பபிதாவின் சம்பாத்தியத்தில் ஜாலியாக வாழ்க்கை நடத்தினார் ரஜினி. பின்னர் பபிதாவை ஏமாற்றிவிட்டு வேறு ஒரு பெண்ணுடன் பழக ஆரம்பித்தார்.

பபிதாவை அடித்து உதைத்து சித்திரவதை செய்யத் தொடங்கினார். பபிதாவை தான் கூறும் ஆட்களுடன் சந்தோசமாக இருக்குமாறும் கட்டாயப்படுத்தினார்.

மனம் உடைந்த பபிதா தூக்கமாத்திரைகளை விழுங்கி தற்கொலை செய்து கொள்ள முயன்றார். உடனடியாக மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டதால் பபிதாவின் உயிர் காப்பற்றப்பட்டது.

தற்கொலை முயற்சியில் ஈடுபட முன்பாக பொலிஸாருக்கும், தனது தாயாருக்கும் கடிதம் எழுதி வைத்திருந்தார்.

"எனக்கு வாழ விருப்பம் இல்லை. அனுபவிக்க முடியாத சித்திரவதைகளை தாங்கி விட்டேன். ரஜினியை நம்பி மோசம் போய்விட்டேன்" என்று எழுதி இருந்தார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## சரிதானா? துரோகமா?

பெத் ராணி தொடக்கிவைத்தார். சில ராணி சென்றபின்னர் ஒரு விழா களும் நடிகைகளும் எலிசபெத் ராணி

நடிகை கவுதமிகூட சென்றுவிட்டார். ர் நடந்த விழாவில் கமலுக்காக ன்று அழைப்பு விடுத்தும்கூட கமலின் ல.

ஏனைய நடிகர், நடிகைகளுக்கு கமல் லை.

னவர்களது புகைப்படங்களை வைத் றார். அப்படங்களில் எம்.ஜி.ஆர். படம் லரது படங்கள் இருந்தன.

நடன் 'ஆனந்த ஜோதி' படத்தில் கமல் த்தை மும்பாய்க்கு சென்று நடத்தி ர்.

கியதும் எம்.ஜி.ஆர்.தான். 'மூன்றாம் 'து நடைபெற்ற பாராட்டு விழாவுக்கு

யயோ கமல் அழைக்கவில்லை.

விழாக்களுக்கு அவரை அழைக்கிறார் கமல் மரியாதை செய்தது கிடையாது. ஒன்று.

## ...த்தில் ஷெல்

செய்யப்போவதாக அப்பாஸ் வெடித்ததுபோல் பலத்த

தங்கியிருக்கக்கூடிய லயே சென்றார்களாம். கிறார். மாட்டினால் இருப்பார்களோ? ' பட நூறாவது மகா ஜொள் ருந்தது. டக்

## ரசிப்பு

பிரபுதேவாவுக்கு 'கிரிக்கெட்', 'உதை பந்தாட்டம்' என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால் ஒரு முறைகூட விளையாடியது இல்லையாம்.

தொலைக்காட்சியில் போட்டிகள் ஒளிபரப்பாகும்போது தவறவிடாமல் குடும்பசகிதம் ரசித்துப் பார்ப்பார்.

## விக்னேஷ் வருத்தம்

'காதலி' படம் தேவயாணிக்காகத்தான் ஓடியது என்று பரவலான கதை. அதனால் விக்னேஷ் கவலை அடைந்திருக்கிறார். 'எத்தனையோ படம் நடித்தாகிவிட்டது. அதில் சில படங்கள்தான் தப்பிப் பிழைக்கின்றன. அதிலும் என்னை ஓரம்கட்டிக் கதைக்கிறார்களே' என்கிறார்.

எல்லாம் சரி, நடிகைகளை ஓரம் கட்டுவதில் கார்த்திக்குக்கு அடுத்த இடத்தில் இருப்பவர்களில் உங்கள் பெயரும் அடிபடுகிறதே! என்ன சொல்கிறீர்கள் விக்னேஷ்?

## காதோடு சொல்லுகிறோம்

தமிழ்ப்பட உலகில் சுந்தரமான இயக்குநரை மயக்கினார். பின்னர் 'மா' என்ற எழுத்தில் பெயர் முடியும் மூன்றெழுத்து நடிகையின் காதலரான ஹீரோவையும் வலைபோட்டு இழுத்தார். தெலுங்குப் படவுலகிலும் பலரை அன்புக்கு அடிமையாக்கி உள்ளாராம். அவர்தான் தேவலோக அழகியின் பெயர்கொண்ட மூன்றெழுத்து நடிகை. தெலுங்குப் பட தயாரிப்பாளரின் உதவியுடன் இரண்டு பங்களாக்களை கட்டி இருக்கிறார் அந்தக் கெட்டிக்கார நடிகை.

சுந்தர இயக்குநர்மீது 'பூ' நடிகைக்கு சமரசம் ஏற்பட்டாலும், சந்தேகம் போகவில்லை. அதனால் முன்ஜாக்கிரதையான நடவடிக்கைகளில் குதித்திருக்கிறார் பூ நடிகை. தற்போது நடித்துவரும் படங்களுக்கான ஊதியத்தில் பாதியைப் பணமாக வாங்குகிறாராம். மீதியை டொலராக வாங்குகிறார். சுந்தரத்தார் வேறு மலர் தாவினால், வெளிநாட்டில் உள்ள தனது சகோதரரிடம் சென்று அங்கு செட்டிலாகிவிடுவார் பூ நடிகை. அதற்குப் பணம் வேண்டும் அல்லவா. அதுதான் டொலராக சேமிக்கிறார்.

கஸ்தூர நடிகை தமிழில் நடித்து கையில் ஒரு காசு மிச்சமில்லை. தெலுங்கில் நடிக்கப் போனார். எள் என்றால் எண்ணையாகி நின்றார். இப்போது சொந்தமாக வீடும், நிலமும் வாங்குமளவுக்கு வசதியுடன் சென்னை திரும்பியிருக்கிறார். அல்வாதான்!

கண்கொள்ளா காட்சிதரும் இரகசியம் ஹோர்மோன் ஊசிதானாம். மந்திர நடிகை பற்றி படவுலகம் உறுதிப்படுத்தும் தகவல் அதுதான். ஆனால் நடிகையோ, இயற்கை தந்தவரம் என்று கூறிக்கொண்டு திரிகிறார்.

## மூன்று நாயகிகள்

பிரபுவும், மதுபாலாவும் இணைந்து நடித்த படம் 'பாஞ்சாலங்குறிச்சி'. மறுபடி இருவரும் ஜோடி சேரும் படம் 'இனியவளே'. இப்படத்தில் மதுபாலா தவிர மேலும் இரண்டு நாயகிகள் நடிக்கின்றனர். ஒருவர் சுவலட்சுமி. இன்னொருவர் 'தேவதை' நாயகி கீர்த்தி ரெட்டி. சுவலட்சுமி மற்றொரு படத்திலும் பிரபுவின் ஜோடியாக நடிக்கிறார்.

'இனியவளே' படத்தை இயக்குபவர் சீமான். இசை: தேவா.

'உயிரே உயிரே
நலம்தானா?
சம்மதம் தானா?' என்று தொடங்கும் பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ரகுவரன், வடிவேலு, லட்சுமி, தேவன், ஜெய்கணேஷ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

முகப்பில் விஜிதா விக்னேஷ் பிரபுதேவா



விக்னேஷ்-தேவயாணி
படம்: காதலி




சிம்ரான்
படம்: இதுதான் காதல்

## ரொம்ப ரொம்ப நீளம்

தமிழ்ப் படங்கள் தயாரித்து கையைச் சுட்டுக் கொண்டோம் என்று பல தயாரிப்பாளர்கள் புலம்புகிறார்கள்.

ஆனால் சுடச்சுட வடைபோல தொடர்ந்து பல வெற்றிப்படங்களை சுட்டுத் தந்து கொண்டிருப்பது சூப்பர் குட் பிலிம்ஸ். 'நாட்டாமை', 'பூவே உனக்காக', 'லவ் டுடே', 'சூர்ய வம்சம்' என்று சூப்பர் குட் தயாரிப்புக்கள் சூப்பர் ஹிட்.

சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் புதிய படத்தை லிவிங்ஸ்டன் இயக்குகிறார். கதாநாயகனும் அவர்தான். ஜோடியாக தேவயாணி நடிக்கிறார்.

சுந்தர புருஷன் படத்தில் கதாநாயகன் அந்தஸ்து பெற்றவர் லிவிங்ஸ்டன். அதற்கு முன்னர் வில்லன்.

புதிய படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்தான் ரொம்ப ரொம்ப நீளம். 'என் புருஷன் குழந்தை மாதிரி' என்று பெயரிட்டுள்ளனர். இப் படம் திரைக்கு வந்தால், படம் பார்க்கச் செல்லும் பெண்களுக்கு சிரமம் ஏற்படும். என்ன படத்துக்கு செல்கிறீர்கள்? என்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் வெட்கப்படப் போகிறார்கள்.

## ...னார் ... ப்ளேட்

...டிக்கத் ...டன் ...னு ...ய

மீனா சீனாவுக்கு போயவந்த தில் இருந்து ஒரே சீனா புராணம் தான். அதைப் பார்த்தேன். இதைப் பார்த்தேன் என்று காண்பவர்களிடம் எல்லாம் 'பிளேட்' போடுகிறார். அதனால் மீனாவைக் கண்டால் நடிக, நடிகைகள் ஓட்டம் பிடிக்கிறார்களாம்.

## ...வ தூக்கிய சுந்தர்

...இதய நாயகர் இயக்குநர் சி. சுந்தரின் மனதை ...ளயடித்தார். இதனால் 'ஜானகிராமன்' படத்தில் ...பாவை மெருகேற்றினார் சுந்தர். நக்மா முகத்தை ...க் கொண்டார். இதெல்லாம் பழைய செய்தி.

இதயத்தை தொலைத்த சுந்தரை குஷ்புவும் விரட்டத் ... பின்னர் இருவருக்கும் வேண்டியவர்கள் சமரசம் ...ர். ஆனாலும் ரம்பாவை சுந்தரால் மறக்க முடியவில்லை ...நமக்கு இருவர்' படத்திலும் நடிக்க வைத்தார்.

...ம் நழுவவிடக்கூடாது குஷ்புவையும் பகைக்கக்கூடாது ...கை காரணமாக படப்பிடிப்பை மேற்பார்வையிட ...மித்தார்.

...பில் குஷ்பு முன்பாக சாதுபோல இருக்கும் சுந்தர், ... முடிந்த பின்னர் ரம்பாவுடன் இரகசியமாக ...டங்கினார்.

...ம் அடிக்கடி ஒதுங்கும் விஷயம் குஷ்புவுக்கு தெரிய ...படி வெடித்தது பூசல்.

...ல் குஷ்புவை சமாளிக்க படத்தில் மகேஸ்வரிக்கு ...ம் கொடுத்து காட்சி அமைத்தாராம். வந்தது ...தவலோக யானை என்றழைக்கப்படும் ரம்பா ... 'காய்' விட்டார்.

...வை தாஜா பண்ண அவர் வீட்டுக்கு தொலைபேசி ... சுந்தர். ரம்பா வீட்டில் றிசீவரைத் தூக்கி 'ஹலோ' ...வர் ஒரு கதாநாயக நடிகர். அதிர்ந்தார் சுந்தர்.

... ரம்பாவை 'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் இருந்து தூக்கிவிட்டதாகத் தகவல். குஷ்புவுக்கு எல்லையில்லாத ஆனந்தமாம்.

...டியிலே

## கோவிந்தா மறுப்பு

கோவிந்தாவும் கரிஷ்மா கபூரும் வஞ்சகமில்லாமல் பழகுவதை, தப்பான கோணத்தில் பார்க்கக்கூடாது. பார்த்தால் உங்கள் மனத்தில் வண்டி வண்டியாக பொறாமை இருப்பதாக அர்த்தமாம்.

கரீஷ்மா கபூர்தான் அப்படிச் சொல்லி இருக்கிறார். கோவிந்தா-கரீஷ்மா நெருக்கம் கமராவுக்கு பின்னாலும் தொடர்வதாக மும்பாய் பத்திரிகைகள் மோப்பம் பிடித்து எழுதுகின்றன. அதுதான் கரிஷ்மா தத்துவத்தை கொட்டி மெழுகியுள்ளார்.

கரிஷ்மா உட்பட பல பெண்கள் எனக்கு நல்ல சிநேகிதிகள். அதற்காக அவர்களை எல்லாம் லவ் பண்ணுகிறேன் என்று அர்த்தமா? சேச்சே... என்கிறார் கோவிந்தா. அப்படியானால் என்ன தான் பண்ணுகிறார்? கோவிந்தா!

## பிரபு-சுவலட்சுமி

நீண்ட தயக்கம், நீளமான யோசனை, அதன்பின்னர்தான் படம் வந்திருக்கிறது. படத்தின் பெயர் 'தேடினேன் வந்தது'. பிரபு-மந்த்ரா ஜோடி. பிரபுவின் மார்க்கெட்டில் ஏற்பட்டுள்ள சரிவுதான் படத்தை வெளியிடாமல் தாமதிக்கச் செய்தது. இப்படமும் தோல்வி கண்டால் பிரபுவின் மார்க்கெட் மேலும் ஒரு படி சரியும்.

கே.எஸ். ரவிக்குமார் உதவியாளராக இருந்த ராஜ்குமார் இயக்கும் ஒரு படத்தில் பிரபு ஒப்பந்தமாகி இருக்கிறார். பிரபுவின் ஜோடியாக சுவலட்சுமி நடிக்கப்போகிறார். 'பொன்மனம்' என்று பெயர்சூட்டியுள்ளனர். முக்கிய வேடத்தில் மணிவண்ணன் நடிக்கிறார். இசை, எஸ்.ஏ. ராஜ்குமார்.



கோவிந்தா-கரிஷ்மா கபூர்

## சந்திப்பு

'தேவதை' படநாயகி கீர்த்தி ரெட்டி சமீபத்தில் இயக்குநர் சுரேஸ் கிருஷ்ணாவைச் சந்தித்தாராம். ரஜினியின் அடுத்த படத்தை சுரேஸ் கிருஷ்ணா இயக்கப் போவதாக செய்தி அடிபடுகிறது. கீர்த்தி ரெட்டிக்கு ரஜினியுடன் நடிக்க ஆசையோ. ஆசை. அதுதான் இயக்குநரை ஸ்பெஷலாக சந்தித்திருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

## லேடீஸ் ஸ்பெஷல்

# சிப்பிக்குள் முத்துக்கள்

## ஜொலிப்பது எப்படி?



இளமைக்கு அழகே சிரிப்புத்தான்.

அந்தச் சிரிப்புக்கு அழகு, பளிச்சிடும் முத்துப்பற்கள். எத்தனை பேருக்கு இந்த அதிஷ்டம் வாய்க்கிறது?

சில பெண்கள் சிரித்தாலே போதும்; இன்னொருமுறை முத்துப்பல் தெரிய சிரிக்க மாட்டார்களா என்று நம் மனம் ஏங்கும்.

ஆகவே அழகான பெண்களுக்கு பளிச்சிடும் வெண்முத்துப் பற்களும் அவசியம். இது சிலருக்கு இயற்கையில் கிடைத்த வரப்பிரசாதம்போல அமைந்து விடுவதும் உண்டு. ஒரு சிலர் செயற்கையில் மெருகூட்டிக் கொள்வதும் உண்டு.

இருந்தாலும், இயற்கைக்கும் செயற்கைக்கும் வித்தியாசம் இல்லையா? செயற்கை விரைவிலேயே பல் இளித்து விடும். ஆனால் இயற்கை அப்படி இல்லை. நெடு நாட்களுக்கு இயற்கைக் குணம் மாறாமல் பளிச்சிடும்.

சினிமாவில் எந்த நட்சத்திர நடிகையைப் பார்த்தாலும் அவர்களுக்கு மட்டும் முத்துப் போல் பற்கள் பளிச்சிடுவதைக் காண முடிகிறது. 'இவர்களுக்கு மட்டும் எப்படி இப்படி' என்று அவர்களைத் திரையில் பார்க்கும்போது மனம் குடையத்தான் வைக்கிறது.

சினிமா என்பது நிஜம் இல்லை. நிழல். அந்த நிழலுக்கு ஆயிரம் வண்ணங்கள் செயற்கையாகத் தீட்டப்படுகின்றன. சினிமாவில் தோன்றிய நடிகையை வீட்டில் நேரில் பார்க்கும்போது 'அவர்தானா இவர்' என்று நம்மையே ஆச்சரியத்தில் மூழ்கவைக்கும். அந்த அளவுக்கு மிகைப்படுத்தப்பட்ட ஒரு செயற்கை அலங்காரத்துடன் நடிகைகள் சினிமாவில் தோன்றுவது இயற்கை.

சினிமா நடிகைகள் முகத்தை மட்டுமா வசீகரமாக வைத்துக் கொள்கிறார்கள்? கூந்தல் முதல் பாதம் வரை செயற்கை அழகில் ஜொலிக்கிறார்கள்.

அதேபோல் இவர்களது பற்களும் முத்துப்போல் பளிச்சிடுகிறது. பிறப்பிலேயே அப்படி உண்டானது என்று வியப்பு மேலிடுகிறதா?

அதுதான் இல்லை. எப்படி அவர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்களோ, அதே போல் பற்களையும் செயற்கையாக அழகுபடுத்திக் கொள்கிறார்கள். இதனால் அவர்கள் சிரிக்கும்போது பற்கள் முத்துப் போல் பளிச்சிடுகின்றன.

பற்களை அழகுபடுத்துவதற்கென்றே, தனியே பல் வைத்தியர்கள் இருக்கிறார்கள். எப்படி பெண்களுக்கான அழகு நிலையங்கள் இருக்கின்றனவோ, அதே போல் பற்களை அழகு படுத்துவதற்கென்று பல் அழகு நிலையங்களும் இருக்கின்றன.

பற்களை அழகுபடுத்துவது மூன்று வகைப்படும். அவை,

1. பொலிஷிங்
2. கோட்டிங்
3. கேப்பிங்

பொலிஷிங் என்பது பற்களைப் பளிச்சிட வைப்பது. கோட்டிங் என்பது பற்களுக்குப் பூச்சுப் பூசுவது. கேப்பிங் என்பது பற்களுக்கு பூண் மாட்டுவது. அதாவது இயற்கையாக உள்ள பல்லுக்கு, கூடுபோன்ற பல்லை மாட்டுவது. இதை மாட்டிக்கொண்டால் போதும், 'ஆயிரம் வோட்ஸ்' பல்ப் வெளிச்சம் பற்களில் தெரியும்.

சினிமா நட்சத்திர நடிகைகள் மத்தியில்– குறிப்பாக இந்தி நட்சத்திர நடிகைகள் மத்தியில்– இத்தகைய செயற்கைப் பல் அலங்காரங்களுக்கு மவுசு கூடியிருக்கிறது. வண்ணத் திரையில், அவர்கள் சிரிப்பைப் பார்க்கும்போது, நாம், கிறங்கி விழுவதற்கும் இதுவே காரணம்.

இது குறித்து கிளன்மாஸ் கெரன்ஹாஸ் என்ற பல் டாக்டர் கூறுகையில்:

"மொடல் அழகிகள் சிலருக்கு பற்களை அழகுபடுத்தி இருக்கிறேன். சமீபத்தில் உலக அழகிப் போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் பற்களை அழகுபடுத்தி உள்ளேன். அவர்களது பெயர்களை வெளிப்படுத்துவது அவ்வளவு நாகரிகமாக இருக்காது.

ஆரம்பத்தில் இது போன்ற செயற்கை அழகிற்கு அவ்வளவாக வரவேற்பு இருந்ததில்லை. ஆனால் இப்போது பெண்கள் மத்தியில்– குறிப்பாக மொடல் அழகிகள் வாய்விட்டுச் சிரிப்பதற்கே இந்த செயற்கைப் பல் அழகுதான் காரணம்," என்று தெரிவித்தார் சிரித்தபடி.

'ஓஹோ, மொடல் அழகிகள், சினிமா நடிகைகள் சிரிப்புக்கு பின்னணியில் இத்தனை இரகசியங்கள் அடங்கி இருக்கின்றனவோ?'

ஆம். சாதாரண பெண்களால் இந்த அளவுக்கு செலவு செய்து பற்களைப் பளிச்சிட வைக்க முடியாதுதான்.

ஒரு காசு செலவில்லாமல் பற்கள் முத்துக்கள் போல் பளிச்சிட இதோ ஒரு இலவச யோசனை:

ஒரு வேப்பங்குச்சியை எடுத்துக்கொள்ளுங்கள். கொஞ்சம் உப்பைத் தொட்டுக் கொண்டு வேப்பங்குச்சியால் பல் துலக்குங்கள். பிறகு வாய் கொப்பளித்து விடுங்கள். சில நாட்கள் தொடர்ந்து செய்யுங்கள்.

பின் முகம் பார்க்கும் கண்ணாடியில் உங்கள் பற்களைப் பாருங்கள். 'ஆயிரம் வோட்ஸ்' வெளிச்சம்போல் பளிச்சிடுமே உங்கள் பற்கள்! ▫


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CP

பெயர்:........................

முகவரி:........................

........................

கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-11-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 7



டயானா

புவனா

டயானா பிறந்தபோது ஸ்பென்சர் குடும்பத்திடம் போதுமான செல்வம் இருக்கவில்லை. டயானாவின் தாயார் மூலமாகக் கிடைத்த சொத்து பார்க் ஹவுஸ்.

சுற்று முற்றும் பசுமையான மரங்களும், பூக்கன்றுகளும் சூழ்ந்த இந்த மாளிகை டயானாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பின்னாளில் இயற்கையை இரசிக்கும் பழக்கம் டயானாவிடம் உருவாகக் காரணமும் பார்க் ஹவுஸ் வீட்டுச் சூழல்தான்.

டயானாவின் தாய்– தந்தைக்கு இடையே அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்படும்.

டயானா பெண்ணாகப் பிறந்தது தொடர்பாகவும் ஒருமுறை டயானாவின் தாயாரை தந்தை திட்டினார். டயானா அதைக் கேட்டாள்.

விபரம் புரியாத வயதாக இருந்தபோதும் தன்னை வெறுக்கிறார்கள் என்ற உணர்வு சிறுமியான டயானாவின் மனதை வலிக்கச் செய்தது.

டயானாவுக்கு மூன்று வயதாக இருந்தபோது சகோதரன் பிறந்தான். சாள்ஸ் ஸ்பென்சர் என்று பெயரிட்டார்கள்.

ஆண் குழந்தை என்பதால் சாள்ஸ் ஸ்பென்சர் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் செல்லம்.

டயானாவின் மூத்த சகோதரிகள் இருவரும் ஓரளவு விபரம் தெரிந்த வயதை எட்டியதால், தங்கள் அலுவல்களை தாங்களே கவனித்துக் கொள்ளப் பழகிவிட்டனர்.

டயானாதான் ஒடிந்து போனாள். அம்மாவுக்கு தன்னோடு ஒட்டுதல் இல்லாமல் போனது அந்த பிஞ்சு உள்ளத்தை என்னமோ செய்தது.

டயானாவைக் கவனிக்க ஜூடித் பார்னல் என்ற தாதியை நியமித்தார்கள். சகோதரிகள் பள்ளிக்குச் சென்றுவிட, டயானா குட்டித்தம்பி சாள்ஸ் ஸ்பென்சருக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருப்பாள்.

தன் தம்பிமீது டயானாவுக்கு கொள்ளை அன்பு. கொஞ்சிக் கொஞ்சி செல்லம் கொட்டிக் கொண்டிருப்பாள்.

### தொட்டம்மா

சாள்ஸ் ஸ்பென்சருக்கு ஞானஸ்நானம் நடந்தது. பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் பிரார்த்தனை செய்யும் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில்தான் ஞானஸ்நானம் நடந்தது.

எலிசபெத் மகாராணிதான் சாள்ஸ் ஸ்பென்சரின் தொட்டம்மாவானார். டயானாவின் இரு சகோதரிகளுக்கும்கூட மகாராணிதான் தொட்டம்மா.

ஞானஸ்நானத்திலும் டயானாவுக்கு ஏமாற்றம்தான். சகோதரிகளின் ஞானஸ்நானம் அரச பரம்பரைக்கு உரிய தேவாலயத்தில் வெகு சிறப்பாக நடந்தது. எலிசபெத் மகாராணி உட்பட பெரும் புள்ளிகள் கலந்து கொள்ள ஏகப்பட்ட அமர்க்களம்.

டயானாவுக்கு மட்டும் உள்ளூர் தேவாலயம் ஒன்றில் ஞானஸ்நானம் செய்து வைத்தார்கள். தொட்டம்மாவாகவும், தொட்டப்பாவாகவும் இருந்தவர்களும் சாமானியர்கள்தான்.

டயானாவுக்கு ஆறு வயதானபோது மற்றொரு இடி இறங்கியது.

டயானாவின் அப்பாவும், அம்மாவும் பிரிந்து வாழ்வது என்று முடிவு செய்தனர்.

அம்மா தன் உடமைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது டயானாவுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.

அம்மாவின் அரவணைப்பு டயானாவுக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் அரிதானவை. எனினும் அம்மா பக்கத்தில் இருக்கிறார் என்ற ஆறுதல்கூட இனிமேல் இல்லாமல் போகப்போகிறதே என்பது பயங்கரமான சோகமாக இருந்தது.

பிள்ளைகளை யார் வளர்ப்பது என்பதில் பெற்றோருக்கிடையே தகராறு எழுந்தது.

பிள்ளைகளை தன்னுடன் அனுப்புமாறு அம்மா அடம்பிடித்தாள். "முடியவே முடியாது, பார்க் ஹவுசில்தான் பிள்ளைகள் வளரவேண்டும். என்னுடன்தான் இருப்பார்கள்!" என்று விட்டார் தந்தை.

### இதமளித்த இயற்கை

டயானா தனிமையில் வெதும்பினாள். துயரத்தை விரட்ட இயற்கைக் காட்சிகளை இரசிப்பதில் பொழுதைக் கரைத்தாள்.

பார்க் ஹவுசின் இரண்டாவது மாடியில்தான் டயானாவின் படுக்கை அறை இருந்தது. படுக்கை அறையின் ஜன்னல்களைத் திறந்தால் நோர்ஃபோக் கடற்கரைக் காற்று வந்து முகம் தடவும்.

கடற் பறவைகளின் குரலோசை காதுகளை முத்தமிடும்.

இரசிப்பாள், இரசிப்பாள், டயானா இரசித்துக் கொண்டே இருப்பாள். பிஞ்சு உள்ளத்தின் காயங்கள் ஆறுவதற்கு இயற்கைச் சூழல்தான் இதமளித்தது.

# சிறகடித்த பட்டாம் பூச்சி



டயானா சகோதரனுடன்

"தம்பி சாள்ஸ் ஸ்பென்சர்மீது டயானாவுக்கு மகா பிரியம்"

டயானாவின் மூத்த சகோதரிகள் விடுதியில் தங்கிப் படித்தனர். டயானாவும், தம்பி சாள்ஸ் ஸ்பென்சரும் வீட்டிலேயே இருந்து ஆரம்பக் கல்வியைக் கற்றனர்.

வகுப்பறை வீட்டின் முதல் மாடியில் இருந்தது. 'அல்லி' என்றழைக்கப்பட்ட பெண்மணிதான் ஆசிரியையாக இருந்தார்.

'பார்க் ஹவுசில்' பணியாட்களாக இருந்தவர்களின் பிள்ளைகளுக்கும் சேர்த்தே படிப்பித்தார்கள்.

தன்னோடு படித்த பிள்ளைகள் அனைவருடனும் டயானா குதூகலமாகப் பழகினாள். பாசத்துக்காக ஏங்கிய டயானா பிறர் மீது பாசத்தைப் பொழியத் தொடங்கினாள்.

தங்கள் பணியாட்களின் பிள்ளைகள் தானே என்று அவர்களை சிறுமைப்படுத்தாமல், சரிசமமானவர்களாக மதித்தே பழகினாள் டயானா.

இந்தக் குணங்கள்தான், மகாராணியின் மருமகளான பின்னரும் சாதாரண மக்களிடம் டயானா சகஜமாகப் பழகக் காரணமாக அமைந்தன.

ஐந்தில் வளைந்தால்தான் ஐம்பதிலும் வளையலாம். ஐந்து வயதிலேயே டயானாவின் பிஞ்சு உள்ளத்தில் 'உன்னைப் போல உன் அயலாரையும் நேசி' என்ற எண்ணம் விதையாக விழுந்தது.

டயானா வளர வளர அந்த எண்ணம் விருட்சமாக வளர்ந்தது.



ஆசிரியையாக டயானா–பள்ளிக் குழந்தைகளுடன்

### தாயிடம் பரிவு

தந்தையுடன் பிள்ளைகள் வளர்ந்தபோதும், அடிக்கடி தாயாரைப் போய்ப் பார்த்து வந்தனர். தாயிடம் இருந்தும், தந்தையிடம் இருந்தும் போதிய அன்பை டயானா பெற்றதில்லை.

ஒரு தடவைகூட வாஞ்சையுடன் அப்பாவோ, அம்மாவோ அவளை முத்தமிட்டதில்லை. அணைத்து தட்டிக் கொடுத்ததுமில்லை.

அப்படியிருந்தும் தாய், தந்தைமீது பேரன்பு வைத்திருந்தாள் டயானா.

தன் தந்தையாரின் சிடுசிடுப்பும், தாயாரின் உணர்வுகளை அலட்சியம் செய்யும் மனப் போக்கும்தான், தாயார் தங்களை விட்டுப் பிரியக் காரணம் என்பதை டயானா உணரத் தொடங்கினாள்.

விபரம் புரியக்கூடிய வயதில் தன் தாயார் மீது முன்பிலும் அதிக பரிவு ஏற்பட்டது.

'என்மீது அன்பு செலுத்தக்கூடிய ஒருவரைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். அம்மாவைப் போலவும், அப்பாவைப் போலவும் எலியும் பூனையுமாக குடும்பம் நடத்தக்கூடாது என்று நினைத்துக் கொள்வேன்,' என்று பின்னர் ஒரு முன்ற நினைவு கூர்ந்தார் டயானா.

டயானாவின் தாயார் ஃபிரான்செஸ், பீட்டர் ஷாண்ட் கிட் என்பவரை மறுமணம் செய்துகொண்டார்.

பீட்டரை தன் பிள்ளைகளுக்கு ஃபிரான்செஸ் அறிமுகம் செய்தார். டயானாவுக்கு மட்டுமல்லாமல் பிள்ளைகள் அனைவருக்கும் பீட்டரை பிடித்திருந்தது. டயானாவின் தந்தையும் மறுமணம் செய்து கொண்டார். ஏனோ சிறிய தாயாருடன் டயானாவால் ஒட்டமுடியவில்லை.

ஆரம்பக் கல்வியை வீட்டில் படித்த டயானாவும், தம்பி சாள்ஸ் ஸ்பென்சரும் பின்னர் கல்லூரி சென்று படித்தார்கள்.

சாள்ஸ் ஸ்பென்சர் படிப்பில் படு சுட்டி. டயானாவுக்கு விளையாட்டுக்களில்தான் ஆர்வம். பள்ளியில் படு குறும்புக்காரியாக இருந்தார். ஆனால் ஆசிரியைகளுக்கும் டயானா செல்லம்தான்.

பள்ளி வாழ்க்கை டயானாவின் குழந்தைக் கால ஏக்கங்களைத் தீர்த்தது. ஒடிந்த சிறகு மறுபடி முளைத்தது போல இருந்தது டயானாவுக்கு.

சந்தோச வானத்தில் சிறகடித்துப் பறந்தது டயானா என்ற அழகான வண்ணத்துப் பூச்சி.

நீச்சல் அடித்தாள் டயானா. கடற்கரையில் துள்ளிக் குதித்தாள் டயானா. இசையைத் திகட்டாமல் கேட்டுக் கேட்டு இரசித்தாள் டயானா.

பூனைகள் தோழர்களாகினர். தொட்டியில் மீன்கள் வளர்த்து மீன்களுடன் பேசினாள். முயல்களுடன் கொஞ்சினாள்.

### ஆனந்தமான வாழ்கை

சிறு வயதில் இழந்ததை எல்லாம் வட்டியும் முதலுமாக வசூலிப்பதுபோல, பள்ளி வாழ்க்கையில் கட்டுக்கள் இல்லாத பட்டாம் பூச்சியாய் பறந்தாள் டயானா.

அப்போதுதான் அந்த இளைஞனை சந்தித்தாள்.

அவன் கண்கள் அவளை ஏதோ செய்தன. அவன் உதடுகள் ஏதோ ஒன்றை உச்சரித்து அவளை வதைத்தன.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? அட்டன் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

கே. திருசாந்தினி, டூலி பீல்ட் குருப் K.G.K. டிவிசன், அட்டன்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்துவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## கனவில்...!

1. கனடாவுக்குப் போகப் போறன் காசக்கொண்டாடி!
கப்பல் அங்க இறங்குமட்டும் காத்திரு–போடி!
பண்ம்புணமா அனுப்பிவைப்பன் பஞ்சம் போக்குடி!
பக்குவமாப் புள்ள குட்டியப் பாத்துக் கொள்ளுடி!
*
2. காசக்கெங்க போக– என்ன, களவெடுக்கவா?
கட்டினநாள் தொட்டெடுத்த கடன் குடுக்கல்ல!
ஓசிச் செலவில் போன புறகு உழைச்சனுப்புங்க!
உண்மை சொன்னாக் கோவம் வந்தா உதைச்சிராதீங்க!
*
3. சீதனமா தந்தனி நீ திருமணத்தில?
தேடி என்னப் புடிச்சிழுத்துச் சேத்திற்றியேடி?
ஆதனத்தில் அப்பனிட்ட வாங்கிற்று வாடி!
அதிகமாகக் கதச்சியெண்டா–நீ பின்னப்போடி!
*
4. உழைச்சநாள்ள வங்கிக்கொண்டும் ஒதுக்கமாட்டிங்க!
உலுத்தரோட தண்ணிபோட்டு உலவி வந்திங்க!
களைச்சகாலம் காசுத்தாளக் காட்டுவாங்களா?
கனவில் போங்க கனடாவுக்கு–கடனத் தீருங்க!

'விண்ணாங்கன்'

## விதியின் புதிருக்கு விடை கூறுகிறேன்

உனைப் பிரியப் போகிறேன்
என்ற உண்மையைத்
தெரிந்ததன் பின்
என் உயிரில் உறைந்துள்ள
எல்லா அன்பையும்
உனக்காகத் தந்துவிட்டுப்
போகப் போகிறேன்!
–0–
எங்கோ ஒரு தேசத்தில்
ஒற்றையாய் நிற்கும் நீ
உன் உயிரில் நிறைந்துள்ள
உயிரின் துடிப்புகளால்
உணர்வுகளுக்கெல்லாம்
சமாதானம் கூறுகிறாய்!
–0–
குளிர் இரவுகளில்
கொண்டாட்ட தினங்களில்
சோடி சோடியாக
நண்பர்கள் கூடிப் போக
கடந்த கால நினைவுகளிடம்
அந்த ஆனந்த வாழ்வை
மறுபடியும் தருமாறு
மண்டியிட்டு அழுகிறாய்!
–0–
எத்தனையோ தேவதைகளின்
ஒளி மிகுந்த புன்னகைகள்
உனை ஆட்கொள்ள
முனைந்த போதும்–உன்
ஆத்மாவில் ஒளி வீசும்
ஒற்றை நட்சத்திரத்தின் முன்
எல்லா ஒளி வெள்ளமும்
மங்கி மறைகின்றன!
–0–
ஒன்றாய்ச் சேர்ந்திருந்து
ஒருயிராய் வாழ்ந்திருந்து
துருவத்திற்கு ஒருவராக
விதி பிரித்துப் போட்டபின்
எந்த ஆறுதலுமில்லாத
துயரத் தீயில் வேகின்றாய்!
–0–
உனதுயிரைப் பருகிப்பருகி
கண்ணீரும் வேதனையும்
விஸ்வரூப மெடுத்துவர
வேறெதுவும் செய்ய முடியாமல்
கரங்களைக் கட்டியவாறு
தலை தாழ்ந்து நிற்கின்றாய்!
–0–
உனைத் தாக்கியது
மலையிலும் பெரிய துயரம்:
அந்த அதிர்வுகளையெல்லாம்
உள் வாங்கிய உன் நெஞ்சு
விக்கித்து நிற்கிறது!
–0–
பிரார்த்தனைகளைப் பறிக்கும்
தெய்வத்தின்
தீட்சண்யமான தீர்ப்புகளைத்
தடுத்து நிறுத்தும் ஆற்றல்
உன்னிடமுமில்லை,
என்னிடமுமில்லை!
–0–
இன்று,
விதி போட்ட புதிரின் முன்
எனது வாழ்வைப் பலியிட்டே
விடை காண வேண்டியுள்ளது!
–0–
முடியுமானால்,
உனது ஆனந்த வாழ்வை
எனது வாழ்வாக எண்ணி
வாழ்ந்துவிட முடியுமானால்
நீ வாழ்ந்து ஒளி வீசு!
–0–
உன்னில் ஒளியேற்றித்
தான் அணைய முடிவெடுத்த
அன்புத் தீபத்துக்கு
உனது கை அசைத்து
இறுதியாக ஒரு விடைகொடு!
–0–

பஹீமா ஜஹான்–
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## தேன் கிண்ணம்



### நீ வாராயோ...?

எத்தனையோ
நாட்கள்
உன்
வரவின்
வசந்தத்திற்காக
தவம் செய்து
கொண்டிருக்க...
உன்
மௌனத்தால்
எத்தனை
இம்சைகள் தினம்....?
**
எம்
வாழ்வின்
ஒவ்வொரு
நாட்களும்
பதித்துச்
செல்லும்
சோகச்
சுவடுகள்!
**
விலங்கோடு
விலங்காய்
உயிர்
காக்க தினம்
ஓடும்
அவலம்!
**
நீ
வர வேண்டிய
நாள் பார்த்து
விழி வேர்த்து
உயிர்
உருகும்
நிலை
மாற...
**
முகாரி
பாடும்
எம்
குயில்கள்
பூபாளம்
பாட...
சமாதானமே–நீ
வாராயோ...?

அகிலா ஜெகதீஸன்–வவுனியா.

### மண் பற்று

எழுதுகையில்
தடைப்பட்டு
தூக்கி வீசப்படும்
பேனைகளில்
எஞ்சி இருக்கும்
காவியங்கள் பற்றி
யாரும்
சிந்தித்ததுண்டா?
***
வீழ்கின்ற
ஒவ்வொரு
மழைத்துளிக்கும்
நிலத்துடன் கைகுலுக்கும்
பாக்கியம் கிடையாமை
பற்றி
யாரும்
யோசித்தது உண்டா?
***
பூக்கின்ற
ஒவ்வொரு பூவும்
கூந்தலுக்கோ
மாலைக்கோ
சேராமல்
வாடி விழும்
சோகம்–யாரும்
கேட்டதுண்டா?
***
பளிச்சிடும்
ஒவ்வொரு மின்னலும்
மனிதரின்
பாவத்தை நிரூபிக்க
ஆண்டவன் எடுக்கும்
புகைப்பட வெளிச்சம்
என்று எவரும்
எண்ணியதுண்டா?
***
வீழ்கின்ற ஒவ்வொரு
உயிரும்
இறுதியாய்
எண்ணும்
கணங்களின்
கனவுகளை
யோசித்தது உண்டா?
***
இல்லையா?
நீங்கள்தான்
இலங்கை பிரஜை!
***

சுபா வரன்– கண்டி.

### ஒன்றுமே இல்லாத போது...!

நம் காதலை
சிதையாக்கி
தீ மூட்டியிருந்தாய்
கடிதத்தில்!
••
தபால்காரன்
விரலிடுக்கில்
திணித்துவிட்டுப்போன
அனலை (சு) வாசித்துவிட்டு
எண்ணெய்க்குதமாய்
எரிந்து போனது இதயம்!
••
நீ வைத்திருந்த
முற்றுப்புள்ளியில்
முடிந்து போனது
உன் முகவரி மட்டுமல்ல
என் நிம்மதிகளும்
சேர்ந்துத்தான்!
••
மறந்து விடச்
சொல்லியிருந்தாய்!
எதைப் பெண்ணே?!
••
மௌனத்தின் அரசாட்சியில்
பிரபஞ்சமே குடியிருக்க
என் இதயத்துள் மட்டும்
ஓயாமல் ஒலித்துக்
கொண்டிருக்கும்
ஆயிரம் இரைச்சலையா
மறந்துவிடச் சொன்னாய்?!
••
இருட்டை சேமித்துக் கொண்டு
குளிரை செலவு செய்யும்
இரவுகளிலெல்லாம்
உன் நினைவுகளை–
போர்த்திக்கொண்டு
கனவு காணும்
கண்களின்
பசியை
மறந்துவிடச் சொன்னாயா?!
••
அன்றேல்...
உன்னையே
மறந்துவிடச்
சொன்னாயா?
••
உன்னை மறந்துவிட்டு
இனியும் நினைவில் கொள்ள
இன்னும் என்னயிருக்கிறது
பூமியில் எனக்கு???
••

பர்ஸான்–யடவத்த,
நிககொள்ள.

## அன்றும் இன்றும்



← 'உலகம் பலவிதம்' படத்தில் சிவாஜி கணேசனுடன் இருப்பவர் காகா ராதாகிருஷ்ணன். இருவருமே சிறு வயது முதல் இணைபிரியாத நண்பர்கள்.



← காலத்தின் கரங்கள் இளமையைத் திருடிய பின்னரும் இவர்கள் கவலைப்படவில்லை. 'தேவர் மகனில்' சிவாஜியும், காகா ராதா கிருஷ்ணனும்.

## யார் இவர்கள்?

↓ மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் அருகில் உள்ள வாலிபர் யார் என்று தெரிகிறதா? அடிக்கடி இவர் குரலைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். என்ன கண்டுபிடித்தாயிற்றா?



↓ யார் இந்தச் சிறு பெண்? அல்ல அல்ல பெண் வேடமிட்ட சிறுவன்? யார் இந்த நடிகர்? விடைகள் பக்கம் 19 இல்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(2.11.1997 தொடக்கம் 08.11.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் - சூரியன்.
விருட்சிகம் - புதன்.
தனு - வெள்ளி, செவ்வாய்.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.
சிம்மம் - இராகு.

சந்திரன்– விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண்குறை கேட்டல், காரியத் தடை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பண வரவு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், கடன் சுமை | மு.ப. | 10 | மணி |
| சனி- பிரயாண மிகுதி, அலைச்சல். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, புதிய முயற்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- உறவினர் பகை, பண விரயம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- காரியத்தடை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- கடன்சுமை, காரியத் தடை. | பகல் | 12 | மணி |
| சனி- முயற்சி பலிதம், பணவரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| சனி- செலவு மிகுதி, உறவினரால் தொல்லை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, அந்நியர் சகாயம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பெரியோர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன் - பலவித பேறு, குடும்ப சுகம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- பிரயாணக் கஷ்டம், தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிடப் பிரயாணம், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் தொல்லை, மனக் கிலேசம். | மு.ப. | 10 | மணி |
| சனி- பெரியோர் நட்பு, முயற்சியில் வெற்றி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பொருள் பேறு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, கௌரவம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, குடும்ப நன்மை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | காலை | 8 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் உயர்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- பிரயாணக் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |
| புதன்- கௌரவ மிகுதி, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்

www.padippakam.com





ஒன்றுண்டு மானிட சாதி- பயின்று
உண்மைகள் கண்டவர் இன்பங்கள்
சேர்வார்
இன்று படுத்தது நாளை-உயர்ந்து
ஏற்றம் அடையும் உயர்ந்தது இழியும்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# தந்தையின் செய்கை

ஒரு கிராமத்தில் விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். மகன்கள் சிறுவயதாக இருக்கும்போது அவர்களின் தாயார் இறந்து விட்டார். எனவே மைந்தர்களை அன்பாக வளர்த்தார் விவசாயி.

நால்வரும் ஒற்றுமையாக, தந்தையின் சொற்படி வளர்ந்து ஆளானார்கள்.

ஒரு நாள்-

நான்கு பேரும் வயலுக்குச் சென்று விட்டார்கள். வீட்டில் விவசாயி மட்டும் இருந்தார். திடீரென்று அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. உடனே அவர் தனது வேலையாளைக் கூப்பிட்டார்.

அவனிடம் தன் நான்கு மகன்களையும் உடனே அழைத்து வரும்படி சொன்னார்.

அவனும் ஓடோடிச் சென்று நான்கு பேரையும் அழைத்து வந்து அந்த விவசாயியின் முன் நிறுத்தினான்.

விவசாயி தன் பிள்ளைகள் நால்வரிடமும், ஆளுக்கொரு பையைக் கொடுத்து, "இப்போது இருப்பதைப் போன்று எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நான் தந்தவற்றைக்கொண்டு புத்தி சாலித்தனமாக வாழுங்கள்," என்று கூறி விட்டு, இறந்து விட்டார்.

நான்கு மகன்களும் தந்தை தம்மிடம் கொடுத்த பைகளை வைத்துவிட்டு, தந்தையின் இறுதிக்கிரியைகளைச் செய்தார்கள்.

எல்லாம் முடிவடைந்த பின்னர், நால்வரும் தந்தை கொடுத்த பைகளை அவிழ்த்துப் பார்த்தனர். மூத்தவனுடைய பையில் மண்ணும், இரண்டாமவனுடைய பையில் சாணமும், மூன்றாவது மகனுடைய பையில் பொன்னும், நான்காவது மகனுடைய பையில் உமியும் இருந்தன.



இதைப் பார்த்த சகோதரர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அறிந்தவர்-தெரிந்தவர்களிடம் கேட்டுப் பார்த்தார்கள். அவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

இறுதியாக அந்தக் கிராமத்தில் வயதான, ஊர்ப்பெரியவரிடம் சென்று பைகளில் உள்ளவற்றைக் கூறி விளக்கம் கேட்டனர்.

அவற்றை வாங்கிப் பார்த்து விட்டு, சற்றுநேரம் யோசனை செய்த அந்தப் பெரியவர், அவர்களைப் பார்த்து,

"பிள்ளைகளே! உங்கள் அப்பா திடீரென்று இறந்துவிட்டார். முதலிலேயே தனது சொத்துக்களை உங்களுக்குப் பிரித்து வைக்காததால், அவசரமாக இந்த உபாயத்தின் மூலம் உங்களையே பிரித்து எடுக்கும்படி செய்திருக்கிறார்.

மண்ணுள்ள பை நிலத்தினையும், சாணம் உள்ள பை கால்நடைகளையும், பொன் உள்ள பை பொன் அணிகலன்களையும், உமியுள்ள பை தானியங்களையும் குறிக்கிறது. எனவே எந்தப் பை உங்களுக்குத் தரப்பட்டுள்ளதோ, அப்பொருட்கள் உங்களுக்கே சொந்தம்," என்று கூறினார் பெரியவர்.

சகோதரர்கள் நால்வரும் தம் தந்தையின் செய்கையையும், ஊர்ப்பெரியவரின் புத்தி சாலித்தனத்தையும் மெச்சி, அவ்வாறே சொத்துக்களைப் பிரித்து, தந்தையின் சொற்படி வாழ்ந்தனர்.

## அதிசயம்-ஆனால் உண்மை!



↑ **மூழ்கடிக்கப்பட்ட கப்பல்:**
இங்கிலாந்திலுள்ள லின் என்ற இடத்திலிருந்து ஹொலண்டில் ஷீடம் என்ற இடத்திற்கு 1855 மார்ச் 21ம் திகதி 'வோட்டர்லூ' என்ற கப்பல் தானியங்களை ஏற்றிச் சென்ற போது வடகடலில் திமிங்கலம் ஒன்று மோதி கப்பல் மூழ்கியது. கப்பல் சிப்பந்திகளை மற்றொரு கப்பல் காப்பாற்றியது.

**செண்ட் உல்ரிச் தேவாலயம்:**
↓ ஜெர்மனியில் உள்ள உச்சிரஸ்டெட் என்ற இடத்தில் உள்ள இந்தத் தேவாலயத்தின் உச்சி மீது 1599க்கும் 1783ம் ஆண்டுக்குமிடையே 4 முறை இடி விழுந்தது. ஒவ்வொரு தடவையும் ஏப்ரல் 18ம் திகதியே இடி விழுந்தது.



**40 இலட்சம் கோயில்:** பர்மாவில், பகானைச் (PAGAN)



சுற்றி 60 சதுர மைல் சுற்றளவில் 1044க்கும் 1299ம் ஆண்டுக்கும் இடையே 225 ஆண்டுகளில் 40 இலட்சம் கோயில்கள் இருந்தன. இந்தக் கோயில்களின் இடிபாடுகளை இன்றும் காணலாம்.

## வாரம் ஒரு நாடு

### புருண்டி



| | |
|---|---|
| தலைநகர் | - புஜும்புரா |
| பரப்பு | - 27,834 சதுர கிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 64 இலட்சம் |
| மொழி | - ஃபிரெஞ்சு மற்றும் கிருண்டி |
| எழுத்தறிவு | - 50% |
| சமயம் | - பழங்குடி, கிறிஸ்தவம் |
| நாணயம் | - புருண்டி ஃபிராங்க் |
| தனிநபர் வருமானம் | - 210 டொலர் |

**அமைவிடம்:**

மத்திய ஆபிரிக்க நாடு, நாற்புறமும் நிலப்பகுதிகளால் சூழப்பட்டது. இதன் மேற்கில் ஸாய்யிரும்; வடக்கில் ருவாண்டாவும்; கிழக்கிலும், தெற்கிலும் தான்சானியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

1962ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் திகதி பெல்ஜியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1972-73, 1980களில் இனக்கலவரம். முதல் பொதுத் தேர்தல் 1993ல் நடைபெற்றது. 1994 ஜனாதிபதி சிப்ரியன் நடாரி யமரா கொல்லப்பட்டார்.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கியதொழில். கோப்பி முக்கிய விளைபொருள். தொழில் துறையில் வளர்ச்சி ஏதுமில்லை. ஆபிரிக்காவின் வறுமையான நாடுகளில் இதுவும் ஒன்று.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.11.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 217
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 215


பரிசுக்குரியவர்:
எம். நிஸான்,
சாஹிரா கல்லூரி, கொழும்பு-10.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| முகம்மது ஆமில்,<br>திரித்துவக் கல்லூரி, கண்டி. | யோகன் காயத்திரி,<br>சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| எஸ். ஸ்டெனோசன்,<br>புனித பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு-13. | பாத்திமா சஜிதா,<br>சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு-06. |
| கே. ஸ஼ப்ராஸ் மொஹமட்,<br>மஹவெல முல்ல முஸ்லிம் வித்., வெள்ளவாய. | தர்மராஜா கோபிநாத்,<br>கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| செல்வி வீ.ஸ்ரீரஜனி,<br>மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருமலை. | எம்.ஐ.நிரோஷியா பேகம்,<br>சாஹிறா தேசிய பாடசாலை, அனுராதபுரம். |
| செல்வி றிஸ்னா றஷீத்,<br>கே/மாவ/அல் அஸ்ஹர் மகா வித்., ஹெம்மாதகம. | ஆர். ருஷாந்தன்,<br>சீ.சீ.தமிழ் வித்தியாலயம், புஸ்ஸல்லாவ. |

## பறக்கும் பலூன்

விமானம் கண்டு பிடிக்கும் முன்னர் பலூன் மூலம் பறக்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டது. பறக்கும் பலூன்களில் இரண்டு வகையுண்டு. ஒன்று வெப்பக்காற்று பலூன். மற்றையது வாயு நிப்பிய பலூன்.



வெப்பக்காற்று நிரப்பிய பலூனை ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜோசப்-எடினே மான்ட் கோரியர் சகோதரர்கள் 1782ம் ஆண்டு கண்டு பிடித்தார்கள்.

எனினும் 1783ம் ஆண்டுதான் அதனை வெற்றிகரமாகப் பறக்கவிட்டார்கள். அதற்கு அடுத்த மாதமே ஐதரசன் வாயு நிரம்பிய பலூனை ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெளதீக விஞ்ஞானி ஜே.ஏ.சி. சார்ள்ஸ் என்பவர் வெற்றிகரமாகப் பறக்க விட்டார்.

## துருவப் பகுதிகளில் பனி ஏன்?



பூமியின் வடதுருவமான ஆர்க்டிக் பகுதியிலும், தென்துருவமான அன்டார்ட்டிக் பகுதியிலும் மக்கள் வசிக்க முடியாத அளவுக்குக் கடுங்குளிரும், அடர் பனியுமுள்ளது.

அன்டார்ட்டிக்காவில் பல ஆயிரம் மீட்டர் ஆழம் வரை பனிக்கட்டிகள் உள்ளன. அதற்குக் கீழேதான் பூமியின் மண் அல்லது பாறை தென்படும். இங்குள்ள பனிக்கட்டிகள் ஏதாவது ஓர் இயற்கைக் கோளாறினால் உருகுமாயின், பூமி முழுவதிலும் உள்ள கடல் மட்டம் ஏறத்தாழ 325 அடி உயர்ந்து விடும் என்று கருதப் படுகின்றது.

இந்த இரு துருவங்களிலும், எப்போதும் பனி மூடியிருப்பதற்கு, பூமி உருண்டையாக இருப்பதும், அது தனது அச்சில் சற்றுச் சாய்வாக இருந்து சூரியனைச் சுற்றுவதுமேயாகும். இதனால் சூரியன் உச்சிக்கு வருவதில்லை. சூரியன் உச்சிக்கு வராததால் அதிக வெப்பமும் ஏற்படுவதில்லை.

மேலும் பூமி தனது அச்சில் சாய்ந்தபடி சுற்றுவதால் இரு துருவங்களிலும் மாறி மாறி 6 மாத காலம் பகலாகவும், 6 மாத காலம் இரவாகவும் இருக்கின்றன.

இந்தக் காரணங்களால்தான் துருவப் பகுதிகளில் பனி படர்ந்து கடுங்குளிர் இருக்கிறது.

## வேகம்

- தேனீ தன் ஒரு சிறகை அசைக்க 0.005 வினாடியாகிறது.
- ஊசியால் குத்தப்பட்டால் அதன் வலியை உணர மனிதனுக்கு 0.02 வினாடிகளாகின்றன.
- நிலவுக்குச் செல்லும் விண்கலம் ஒரு கிலோமீட்டர் செல்ல 0.1 வினாடியாகிறது.
- நிலவின் ஒளி பூமிக்கு வர 1.25 வினாடிகளாகின்றன.

## எறும்பு தின்னி



எறும்பு தின்னி என்று அழைக்கப்படும் பங்கோலின் என்ற மிருகத்தின் உடல் முழுவதும் முள்போன்ற அடுக்கடுக்கான பட்டைகள் இருக்கும். இந்தப் பட்டைகள் மிக உறுதியானவை.

எறும்பு தின்னிக்குப் பற்கள் கிடையாது. ஆனால் இவைக்கு நீண்ட கயிறு போன்ற வழுவழுப்பான நாக்கு உண்டு. சிறுபூச்சிகள், எறும்புகள், கறையான்கள்தான் இவற்றின் முக்கிய உணவு.

பசியுடன் உள்ள எறும்பு தின்னி பெரிய கறையான் புற்றுக்களை தன் வலுவான நகங்களால் உடைத்து, அதன் உள்ளே தன் நாக்கைச் செலுத்தும். பின்னர் அது நாக்கை வெளியே எடுக்கும் போது நாக்கு முழுவதும் கறையான்கள் ஒட்டியிருக்கும். ஒரே இரவில் இவை சுமார் 200 கிராம் பூச்சிகளைத் தின்னும்.

ஆறு மீட்டர் ஆழத்திற்கு அதிகமான குழியில் வசிக்கும் எறும்பு தின்னிகள் பகல் முழுவதும் வெளியே வராது.

எறும்பு தின்னிகளுக்கு வலுவான சதையும், நீண்ட வாலும் உண்டு. இவை பிடிபட்டால் வாலால் தாக்கும். ஏதாவது ஆபத்து வந்தால் இவை தம் உடலை ஒரு பந்து போல சுருட்டிக்கொள்ளும். அப்போது அதனை யாராலும் பிரிக்க முடியாது.

## எவரெஸ்டில் ஏறியவர்கள்



உலகிலேயே மிக உயரமான சிகரம் எவரெஸ்ட் சிகரம் என்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும். இது 1852ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் 101 ஆண்டுகளுக்குப்பிறகே- அதாவது 1953ம் ஆண்டில்தான் வெற்றிகரமாக அதன் உச்சியை அடைய முடிந்தது.

எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலாக ஏறிச் சாதனை புரிந்வர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? எட்ண்ட் ஹிலரி என்பவரும் நார்கே டென்சிங் என்பவரும்தான்.



படிப்பகம்

www.padippakam.com

**தொடர் 23**

# உடைந்த இரவு

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**சென்றவாரம்**

மல்லிகை டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸில் காத்திருந்த மைத்ரேயி பாஸ்கர் வராமல் போகவே ஏமாற்றத்தோடு அலுவலகம் செல்கிறாள். அங்கு பாஸ்கர் ஃபோனில் தான் வரமுடியாமல்போன காரணத்தைக் கூறி, மறுபடியும் மாலை காலேஜ்ரோடு பூங்காவில் சந்திக்க வரும்படியும் சொல்லி றிசீவரை வைக்கிறான்.

பட்டாபி என்கிற லேபர் காணாமல் போனதாகப் புகார் கிடைத்ததை விசாரிக்க இன்ஸ்பெக்டர் ஒருவர் கம்பெனி வந்ததாகவும் மறுபடியும் விசாரணைக்காக அவர் வரலாம் எனவும் மைத்ரேயியின் அறைக்குள் வந்த ஃபாக்டரி மானேஜர் கூற கலவரமடைகிறாள் மைத்ரேயி.

கம்பெனி காம்பஸுக்குள் பொலிஸை அனுமதிக்க வேண்டாமென மானேஜரிடம் கூற; அவ்வாறு தடுக்க கம்பெனிக்கு உரிமையில்லை என்கிறார் மானேஜர். மைத்ரேயி மேலும் கலவரமடைகிறாள்.

இனி...

மைத்ரேயி கம்பெனியைவிட்டு ஆறரை மணிக்கே கிளம்பி காலேஜ் ரோட்டை நோக்கி காரை விரட்டினாள்.

மனசுக்குள் குழப்பம் புகைபோல் பரவியிருந்தது.

'பட்டாபியின் மரணத்தில் பொலிஸாருக்கு சந்தேகம் வந்துவிட்டால் அவர்களுடைய பார்வை எட்டுத் திசைகளிலும் பாயுமே...!'

போக்குவரத்தில் கார் தயங்கித் தயங்கி ஊர்ந்து காலேஜ் ரோட்டைத் தொட்டபோது,

மணி 6.55.

பஸ் ஷெல்டருக்கு கொஞ்சம் தள்ளியிருந்த சாலையோரப் பூங்காவுக்கு முன்பாய் காரை ஓரம்கட்டி நிறுத்த ஒரு மரத்துக்குக் கீழே கொட்டியிருந்த இருட்டிலிருந்து பாஸ்கர் வெளிப்பட்டான்.

"மைத்ரேயி..."

"வாங்க பாஸ்கர் காருக்குள்ளேயே உட்கார்ந்து பேசலாம்..."

காரின் முன்பக்கக் கதவைத் திறந்துவிட பாஸ்கர் உள்ளே ஏறி உட்கார்ந்தான்; கேட்டான்,

"உன் புருஷனுக்கு இப்போ எப்படியிருக்கு?"

"அபாயக் கட்டத்தைத் தாண்டி இப்போ நிம்மதியா மூச்சு விட்டுக்கிட்டு இருக்கார். இன்னும் பத்து நாளில் வீட்டுக்கு வந்து சோபாவில் சாய்ந்துகிட்டு டி.வி.பார்க்கப் போறார்."

"கவலைப்படாதே...! உன்னோட புருஷன் ஹாஸ்பிடலிலிருந்து உயிரோடு வீட்டுக்குத் திரும்பப் போறதில்லை..."

"பாஸ்கர்...! நீங்க நினைக்கிறமாதிரி அது அவ்வளவு சுலபம் இல்லை. என்னோட கணவர் இப்போ ஸ்பெஷல் வார்டில் அட்மிட் ஆகியிருக்கார். இருபத்தி நாலு மணி நேரமும் க்ளாக்வைஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டே இருக்காங்க..."

"கொடுக்கட்டுமே... அதனால என்ன?"

"என்ன பாஸ்கர் புரியாமே பேசறீங்க..? உடம்பு தேறிட்டு வர்ற என்னோட கணவரை ஹாஸ்பிடல் கண்காணிப்புக்களை மீறி எப்படித் தீர்த்துக்கட்ட முடியும்....?"

பாஸ்கர் புன்னகைத்தான்.

"சத்தமில்லாமே தீர்த்துக்கட்ட என்கிட்ட ஒரு வழியிருக்கு."

மைத்ரேயி தன் பெரிய கரிய விழிகளை விரித்தாள்.

"என்ன வழி..?"

தன் பாண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து ஒரு சிறிய கண்ணாடிக் குப்பியை வெளியே எடுத்தான் பாஸ்கர்.

உள்ளே....

கரித்துண்டு மாதிரி கறுப்பாய் ஏதோ ஒரு வஸ்து தெரிந்தது.

"இதைப் பார்த்தியா மைத்ரேயி?"

"என்ன இது...?"

"ஆட்காட்டி விரல் சைஸில் கரிக்கட்டி மாதிரி தெரியற இந்த இரசாயன வஸ்துக்கு பேரு சயனோ-கார்பன். இது ஒரு வகையான ஸ்லோ கில்லிங் பாய்ஸன். இதை ஒரு ரூமுக்குள்ளே காத்து படற மாதிரி திறந்து வெச்சுட்டா... சயனோ-கார்பன் காத்துல தன்னிச்சையாக கரைந்து அந்த ரூமில் இருக்கிறவங்களை மரணத்துக்கு கொண்டு போயிடும். டாய்லட்ஸ்- பாத்ரூம்ல வைக்கிற ஏர் ப்யூரிஃபையர் மாதிரிதான் இது."

மைத்ரேயி அந்தக் கண்ணாடிக் குப்பியை கையில் வாங்கி பயமாய்ப் பார்த்தாள்.

"இது எத்தனை மணி நேரத்துல முழுசா கரையும்...?"

"சரியா ரெண்டு மணி நேரம்...."

"மரணம் எப்போ சம்பவிக்கும்?"

"சயனோ-கார்பன் முழுசுமா கரைஞ்ச அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே மூச்சுத்திணறல் ஆரம்பமாகி இயற்கையான முறையில் ஹார்ட் அட்டாக் வரும்..."

மைத்ரேயி பெரிதாய் ஆச்சர்யப்பட்டாள்.

"இது விஷத்தால் ஏற்பட்ட மரணம்ன்னு டாக்டர்ஸ் கண்டுபிடிச்சுடமாட்டாங்களா?"

"முடியாது..."

"எப்படி...?"

"இந்த சயனோ-கார்பன் இரத்தத்தில் கலக்காது. நுரையீரல்களை இம்சை பண்ணி மூச்சுத் திணறலை உண்டாக்கி ஹார்ட் அட்டாக்கை வரவழைச்சுக் கொடுத்துட்டு நல்லபிள்ளை மாதிரி வியர்வையில் கலந்து வெளியேறிடும். ஹார்ட் அட்டாக் வந்ததுக்கு- விஷம்தான் காரணம்னு டாக்டர்களுக்குத் தெரியாது."

மைத்ரேயி அதை இன்னமும் வியப்பாய் பார்த்துக் கொண்டிருக்க பாஸ்கர் தொடர்ந்தான்.

"இதுல இருக்கிற ஒரே பிரச்சனை என்ன தெரியுமா?"

"என்ன?"

"ரூமுக்குள்ளே வைக்கும்போது இது இருக்கிற இடம் யாருக்கும் தெரியக்கூடாது. டாக்டர்ஸோட பார்வையிலோ, நர்ஸ்களோட பார்வையிலோ அது பட்டுட்டா... பிரச்சனை பெரிசாகி பொலிஸ் வரைக்கும் போயிடும்."

"எப்படி இதை தெரியாமே வைக்கிறது...?"

"ஒரு வழி இருக்கு..."

"சொல்லுங்க...."

"உன் புருஷன் படுத்துட்டிருக்கிற கட்டிலுக்கு கீழே கட்டிலோட குறுக்கு வாட்டு கம்பி ஒண்ணு இருக்கும்..."

"இருக்குமா...?"

"கண்டிப்பா இருக்கும்."

"சரி..."

"இந்த குறுக்கு வாட்டுக் கம்பியிலே இந்த சயனோ-கார்பனை ஒரு நூலால் கட்டித் தொங்கவிட்டுட்டா போதும். கட்டிலுக்கு கீழே டாக்டரோ நர்ஸோ குனிஞ்சு பார்க்கப்போறதில்லை. அதுவும் ராத்திரி பத்து மணிக்கு மேல இந்தக் காரியத்தைப் பண்ணிட்டா சுத்தமா யாருக்கும் தெரியாது... விடியறதுக்கு முந்தி உனக்கு புருஷன் போயிட்டதா நியூஸ் வந்துடும்...."

மைத்ரேயி மௌனமாயிருக்க- பாஸ்கர் கேட்டான்,

"என்ன யோசிக்கிறே....?"

"திட்டத்தைக் கேட்கும்போது சுலபமாத்தான் இருக்கு. ஆனா ப்ராக்டிகலா முடியுமான்னு பயம்மாயிருக்கு..."

"ஒரு பயமும் வேண்டியதில்லை மைத்ரேயி! இன்னிக்கு ராத்திரி பத்துமணிவரைக் கும் நீ ஹாஸ்பிடல்ல இரு. உன் புருஷன் ரூமுக்குள்ள யாரும் இல்லாத நேரமா பார்த்து கட்டிலுக்கு கீழே இருக்கிற குறுக்குக் கம்பியில இந்த சயனோ-கார்பனைக் கட்டிடு. கட்டிட்டு அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ள ஹாஸ்பிடலைவிட்டு வீட்டுக்கு போயிடு..."

"ரூமுக்குள்ளே நர்ஸ் இருந்தா...?"

"ஏதாவது வாங்கிட்டு வரச்சொல்லி அவளை அனுப்பிட்டு காரியத்தை முடி."

"எனக்கென்னவோ பயமாயிருக்கு பாஸ்கர்."

"எதுக்கு பயம்....? இதைவிட ஒரு சுலபமான வழி உன் புருஷனைத் தீர்த்துக்கட்ட கிடையாது."

"பாஸ்கர்! எனக்கு ஒரு யோசனை தோணுது."

"என்ன...?"

"என்னோட கணவரை தீர்த்துக்கட்டிற வேலையை அவர் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பின பிறகு வெச்சுக்கிட்டா என்ன...? அவர் வீட்டுக்கு வந்துட்டா இந்த சயனோ-கார்பனை உபயோகப்படுத்தறது எனக்கு சுலபமா இருக்கும்."

"வீட்ல வேண்டாம்."

"ஏன்...?"

"முதல் காரணம்- உன் புருஷன் உடம்பு தேற கரெக்டா எவ்வளவு நாட்களாகும்ன்னு சொல்ல முடியாது. டாக்டர் அவ்வளவு சீக்கிரத்துல டிஸ்சார்ஜ் பண்ணி அனுப்பிட மாட்டாங்க.... ரெண்டாவது காரணம்- உன் புருஷனோட மரணத்தில் எந்த விதமான சந்தேகமும் எதிர்காலத்தில் யாருக்கும் வந்துடக்கூடாது. ஹாஸ்பிடல் மரணம் என்னிக்குமே சேஃப்ட்டி. மூணாவது முக்கிய காரணம்- வீட்ல இருக்கும்போது இந்த சயனோ கார்பனை படுக்கையறையில வச்சுட்டு நீ மட்டும் வெளியேபோய் தனியா படுத்துத் தூங்க முடியாது. அப்படி நீ தனியா படுக்கப்போனா.... உன் புருஷனுக்கு சந்தேகம்வரும்..."

தலையசைத்தாள் மைத்ரேயி.

"நீங்க சொல்றது சரிதான் பாஸ்கர்... நான் அதையெல்லாம் திங்க் பண்ணவேயில்லை..."

"எதையுமே ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சு பார்க்கணும்...."

"சரி! இந்த சயனோ-கார்பன் உங்களுக்கு எப்படி கிடைச்சுது..."

"பெஸ்டிசைட்ஸ் கம்பெனியில் வேலை பார்க்கிற என் ஃப்ரண்ட் ஒருத்தன் இது மாதிரியான சில்மிஷ வேலைகளையெல்லாம் பண்ணக் கூடியவன். வர்ற வழியில அவனைப் போய்ப் பார்த்தேன். விஷயத்தைச் சொன்னேன். இதைக் கொடுத்தான். இதனோட விலை எவ்வளவு தெரியுமா?"

"எவ்வளவு?"

"பத்தாயிரம்."

"சொன்னபடி வேலை செய்யுமா?"

"என் கண் முன்னாடியே ஒரு சோதனையைப் பண்ணிக்காட்டினானே...!"

"என்ன சோதனை...?"

"ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள்ளே துறுதுறுன்னு இருந்த ஒரு எலியை ஓடவிட்டு இந்த சயனோ-கார்பனை ஒரு நிமிஷம் உள்ளே வெச்சுட்டு எடுத்தான். எலி அந்த நிமிஷமே சுருண்டு விழுந்து செத்துப் போயிருச்சு."

"அப்படின்னா இந்த மருந்து மரணத்துக்கு உத்திரவாதம்....?"

"சந்தேகம் இல்லாமே...."

"சரி...! இந்த திட்டத்தை அமுல்படுத்தற பொறுப்பை நான் ஏத்துக்கிறேன்.... இப்ப புதுசா ஒரு பிரச்சனை கிளம்பியிருக்கு பாஸ்கர்."

"என்ன...?"

"பட்டாபியைக் காணோம்ன்னு அவரோட வீட்டுக்கு எதிர்வீட்ல இருக்கிற ஒருத்தன் பொலிஸ்ல போய் புகார் பண்ணியிருக்கான். பொலிஸ் பட்டாபியைப் பத்தி என்கொயரி பண்றதுக்கு என்னோட கம்பனிக்கே வந்துடுச்சு...."

பாஸ்கர் முகம் மாறினான்.

"எப்போ...?"

"ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி."

"என்கொய்ரி யார்கிட்ட நடந்தது?"

"ஃபாக்டரி மனேஜர்கிட்டே."

"அவர் என்ன சொன்னார்....?"

"பட்டாபி எங்கேயாவது வெளியூர் போயிருக்கலாம். எதுக்கும் ரெண்டு நாள் வெயிட் பண்ணிப் பாருங்கன்னு சொல்லியிருக்கார்."

பாஸ்கர் புன்னகைத்தான்.

"பொலிஸ் பட்டாபியைத் தேடிட்டே இருக்க வேண்டியதுதான்...."

"பாஸ்கர்!"

"ம்..."

"பட்டாபியோட பாடியை ஒழுங்கா டிஸ்போஸ் பண்ணீங்களா...?"

"கச்சிதமா..."


"பொலிஸுக்கு ஏதாவது தடயம் கிடைச்சுடப் போவுது..."

"தடயமா...?" பாஸ்கர் சிரித்தான்.

"பட்டாபி மேல பட்ட காத்துகூட பொலிஸ் மேல படாது."

(தொடர்ந்து வரும்)






'கல்கி'யில் வெளியான காட்டூண்

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். பாலச்சந்திரன்,
வயது: 22
முகவரி: சங்கமான் கிராமம், தாண்டியடி, கோமாரி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: கே. ராஜலட்சுமி,
வயது: 18
முகவரி: கீஷ் தோட்டம், பொகவந்தலாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எஸ். ராஜன்,
வயது: 23
முகவரி: REICHENBUCHER STR-14, 48336 SASSENBERG, GERMANY.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: என். நபீல்,
வயது: 19
முகவரி: பாரதிபுரம், கன்னியா வீதி, திருமலை.
பொழுது போக்கு: கிரிக்கெட், தொலைக்காட்சி.



பெயர்: எஃப். நிஸானா,
வயது: 17
முகவரி: கோட்டே கொட, ஹெம்மாதகம.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். நிஸாம்,
வயது: 29
முகவரி: P.O.BOX-33040 AL-RAWDA-73451, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: ஏ. இனாஸ்,
வயது: 21
முகவரி: 36, 3ம் குறுக்குத் தெரு, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஐ. உவைஸ்,
வயது: 20
முகவரி: பன்சாலை வீதி, 3ம் குறுக்கு, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: பி. ரவிந்திரகுமார்,
வயது: 27
முகவரி: 185, கொலன்னாவ வீதி, தெமட்டகொட, கொழும்பு-09.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: ஏ. ரதீசன்,
வயது: 18
முகவரி: இராஜ்ஸ்தான், காரைதீவு-02.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல்.

பெயர்: எம். பாலகுமாரன்,
வயது: 28
முகவரி: P.O. BOX-8390, FREDERICKSBURG, VA, 22404, U.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். ஹில்மி,
வயது: 22
முகவரி: 86, வடுகெதரவத்தை, மெஹியல்ல வீதி, குருநாகல்.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி.



படிப்பகம்

www.padippakam.com



# மேக்கப் புன்னகை

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

**2**

"இந்த பாரும்மா, நீ சொன்ன எத்தனையோ விஷயங்களுக்கு நான் எதிர்த்து ஒரு வார்த்தை பேசாம சம்மதிச்சிருக்கேன். இது என் வாழ்க்கைப் பிரச்சனை. இதில நான் யாரோட தலையீடும் இல்லாம சுதந்திரமா முடிவெடுக்க விரும்பறேன். என் முடிவு சரியோ, தப்போ என் சொந்த முடிவா இருக்கட்டும். இந்த முடிவால நான் சந்தோஷப்பட்டாலும் சரி, சங்கடப்பட்டாலும் சரி... நான்தான் பொறுப்பு விட்டுடு! கல்யாண விஷயத்தில மட்டும் என் இஷ்டத்துக்கு விட்டுடு! நான் அமெரிக்கா மாப்பிள்ளை, லண்டன் மாப்பிள்ளைன்னு எதிர்பார்க்கலை. அவர் டாக்டரா இருக்கணும், எஞ்சினியரா இருக்கணும்னு எதிர்பார்க்கலை. என்னைப் புரிஞ்சுக்கிட்டவரா இருக்கணும். நான் புரிஞ்சுக்கிட்டவரா இருக்கணும். இந்த ரெண்டே தகுதி தான் என் எதிர்பார்ப்பு. ரெண்டு தகுதியும், வினோத்கிட்டே இருக்கு. ஜாதி, அந்தஸ்துன்னு எதையெதையோ காரணம் காட்டி எங்களைப் பிரிக்கப் பார்க்காதே! உன் சொந்த கௌரவத்துக்காக எங்க வாழ்க்கையைப் பலி கொடுக்க நாங்க தயாரா இல்லை! உன் சம்மதத்தோட எங்க கல்யாணம் நடக்கணும்னு நான ஆசைப்படறேன். நீ சம்மதிக்காவிட்டாலும் இந்தக் கல்யாணம் நடக்கத்தான் போகுது. என்ன பார்க்கறே...? நிச்சயமா நாங்க உனக்குத் தெரியாம ஓடிப்போய் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை! கல்யாணத்துல திருட்டுத்தனம் அவசியமில்லை. பகிரங்கமா பலபேரை கூப்பிட்டு விருந்து வச்சித்தான் நடக்கும். முதல் பத்திரிகை உனக்குத்தான் வெப்பேன்." என்றாள் மதுமிதா.

"கட்" என்றார் டைரக்டர். செட்டில் அத்தனை பேரும் கைதட்டினார்கள்.

திரையில் ஒரு முழு நிமிடம் ஓடுகிற ஷாட்! தொண்ணூறு அடி! சிங்கிள் ட்ராலி ஷாட்! ஆதிக்கம் கொண்ட ஷாட்! உதடுகள் துடிக்க, தொண்டை நரம்புகள் புடைக்க, ஏற்ற இறக்கத்துடன் பேச வேண்டிய ஷாட்! படித்துக் கொண்டிருக்கும் ஒரு புத்தகத்தை 'க்யூ' வசனம் சொல்லப்பட்டதும், தூக்கிப் போட்டு விட்டு, வேகமாக எழுந்து கேமிராவுக்கு வலது புறம் அம்மா நிற்பதாக கற்பனையாகப் பார்த்துக்கொண்டு, மெதுவாக நடந்தபடியே பேசி, நடுவில் ஒருமுறை கண்ணீரை உருளச் செய்து, அதை அலட்சியமாகச் சுண்டி விட்டு, மீண்டும் வசனம் பேசிவிட்டு, மறுபடி அதே சோபாவில் உட்கார்ந்து புத்தகம் எடுத்துக் கொண்டு ஒரு முத்தாய்ப்புப் பார்வை கொடுத்து முடிக்க வேண்டிய ஷாட்! இதை ஒரே டேக்கில் தப்பில்லாமல் செய்து முடிப்பதென்பது நிச்சயமாகக் கைதட்ட வேண்டிய விஷயம்தான். கேமிராமேனை ஒரு வார்த்தை கேட்டுக்கொண்டு ஷாட்டை ஓ.கே. செய்த டைரக்டர் சுதிர், டச்சப் பெண்ணிடம் ஸ்பொஞ்ச் எடுத்து இமைகளை ஒற்றிய மதுமிதாவிடம் "கிளாசிக்!" என்றார்.

"அந்த ரியர்ஸ் கரெக்டா ரோலாகுமான்னுதான் சந்தேகமா இருந்துச்சு. பர்ஃபெக்ட்! மதுவை நம்பி இருநூறடிக்கு சிங்கிள் ஷாட் தைரியமா வைக்கலாம்னு புரூவ் பண்ணிட்டே." வலிய அவள் கையைப் பற்றிக் குலுக்கி, விடுவிக்காமல் இருந்தார்.

"தேங்க் யூ சார்... இந்த சீன் ஓவரா?"

"ஒன் மினிட்" என்று சுதிர் திரும்ப, அவர் பார்வைக்குக் காத்திருந்த இரண்டு அசிஸ்டெண்ட்ஸ் அம்புகளாய்ப் பாய்ந்து வந்தார்கள். "இதுல ஏதாச்சும் பேலன்ஸ் இருக்காய்யா?"

ஒருவன் டயலாக் பேப்பரைப் புரட்ட, கையமர்த்தினார்.

"பேப்பரைப் பார்க்காம சொல்லுய்யா!"

பதில் தெரிந்தாலும் மரியாதை அடைக்க, சொல்ல வராமல் தடுத்தான். மதுமிதாவின் கையை விடுவித்து விட்டு, இரண்டு கைகளாலும் அபிநயித்தபடி, "மதுமேல ஓபனிங் மிட் ஷாட் எடுத்தமா? காபி கப்பை வெச்சுட்டு புக்கை கைல எடுத்திச்சா? வைட் வெச்சி அந்தம்மா ரைட் எண்ட்ரிஷாட் எடுத்தமா? முதல் நாலு வசனம் ரெண்டு பேருக்கும் மாறி மாறி க்ளோஸ் கட் செஞ்சோம். அதுக்கப்பறம்தான் இந்த டிராலி ஷாட். இப்ப மதுமிதா பாய்ண்ட் ஆஃப் வியூல அந்தம்மாவுக்கு ரியாக்ஷன் ஷாட் எடுக்கணும்... அதில அந்தம்மா லெஃப்ட்ல அவுட் போயிடுது. இதைச் சொல்றதுக்கு ஏன்யா முழிக்கிறீங்க? ஆப்போசிட் சைடுக்கு லைட்டிங் பண்ணச் சொல்லு. போ! விசுவாசம் காட்ற அளவுக்கு விஷயம் காட்ட மாட்டேங்கறீங்க!"

மதுமிதா வெல்வெட் நாற்காலியில் அமர்ந்து டச்சப் பெண் சுமதி கையில் பிடித்திருந்த பேட்டரி ஃபேனுக்கு முகம் காட்டி, அதன் நெருக்கக் காற்றில் கூந்தல் அலைய கண்களைக் குறுக்கிக் கொண்டிருந்தாள்.

"மது, ஒரு பாய்ண்ட் ஆஃப் வியூ ஷாட் தான் பேலன்ஸ். மேக்கப் டச்சப் பண்ணிக்க வேண்டியதில்லை."

"ஏழு மணிக்கு மாலினியோட வெடிங் ரிசப்ஷன் இருக்கு சார்."

"இந்த ஷாட்டோட பேக்கப்! எனக்கும் 'இன்வெட்டிங்லி யுவர்ஸ்...'னு பத்திரிகை அனுப்பிச்சிருக்கா... நானும் வரணும். அவளை சைல்ட் ஆர்ட்டிஸ்ட்டா இன்டிரடியூஸ் செஞ்சதே நான்தான்."

"அப்படியா சார்?"

"என்னோட வந்துடறியா? சேர்ந்தே ரிசப்ஷன் போய்ட்டு உன்னை அப்புறம் ட்ராப் பண்றேன்."

"ஸாரி சார்! அம்மாவும் வர்றாங்க. வீட்டுக்குப் போய் அவுங்களைப் பிக்கப் பண்ணிக்கணும்."

"உன் டிரைவரை வண்டியெடுத்துக்கிட்டு போகச் சொல்லிரு. என் வண்டியிலேயே போய் உங்கம்மாவை பிக்கப் பண்ணிட்டுப் போகலாம். முடிஞ்ச வரைக்கும் பெட்றோலை மிச்சப்படுத்தி, தேசத்துக்கு சேவை செய்யலாமே.... என்ன நான் சொல்றது?"

இந்த இடத்தில் புன்னகைக்காவிட்டால் வருத்தப்படுவாரென்று புன்னகைத்தாள். "பரவாயில்லை சார், உங்களுக்கு எதுக்கு சிரமம்?"

"இதுல என்ன சிரமம்? தி கிரேட் ஆர்ட்டிஸ்ட் மதுமிதாவோட சேர்ந்து போறதுக்குப் பெருமை இல்லையா?"

'அய்யா, எனக்கு உன்னோடு வர ஒரு சதவிகித அளவுகூட இஷ்டம் இல்லை அய்யா!' என்று முகத்துக்கு முன்னால் எப்படிச் சொல்வது?

"நீங்க உங்க வைஃபை கூட்டிட்டு வரலையா சார்?"

"பூவைப் பத்திப் பேசிட்டிருக்கிறப்ப முள்ளைப் பத்தி ஞாபகப்படுத்தறியே நீ?"

ஒரு நாற்காலியை அவள் அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார். "உன் காதைக் கொடு. ஒரு விஷயம் சொல்றேன்," என்றார். அவர் பக்கம் சாய்ந்தாள்.

> "திரைப்படத்துறையில் பல பேராசை மிக்க தாய்மார்கள் தங்கள் பெண்ணை பணம் காய்ச்சி மரமாகவே கருதுகிறார்கள். நடிகைகள் மனதிலேயே மருகுகிறார்கள். பாதுகாப்பில்லாத உணர்வு மேலிட, ஏற்கனவே மணமான ஒருவரைத் திருமணம் செய்கிற முடிவுக்குத் தள்ளப்படுகிறார்கள்."
>
> –நடிகை ராதிகா ஒரு பேட்டியில் 'கல்கி' 9.2.97 இதழில்–

அவள் அருகில் கிசுகிசுப்பாக, "அவனுக்கு ஒரு பொட்டு வெளிச்சம் இல்லாம இருட்டா இருக்கணும்... இந்தச் சண்டையில எட்டு வருஷம் ஓடிடுச்சி. பெட்ரூம் கூரையில கண்ணாடி பதிச்சதெல்லாம் வேஸ்ட்டு! பைதி பை, தூரத்திலேர்ந்து பார்த்தா இப்ப நான் உன்கிட்டே ரகசியம் பேசற மாதிரி தெரியுமா, இல்லை முத்தம் கொடுக்கற மாதிரி தெரியுமா?" என்றார்.

"பிக் ஜோக் சார்" என்று பொய்சொல்லி பொய்யாய்ச் சிரித்தாள். இந்த வேடச் சிரிப்பு இயக்குநர் என்கிற மரியாதைக்காக. வர்த்தக ரீதியான நட்புறவில் விரிசல் விடக்கூடாதென்பதற்காக. 'நீ சொல்லும் எதையும் நான் ரசிப்பதில்லை என்கிற அப்பட்டமான உண்மை உனக்குத் தெரியுமா? உனக்குள் இருக்கும், கசியும் வக்கிர எண்ணங்



பிரபாகர்

களை நான் அறிவேன் என்பதை நீ அறிவாயா? உன் ஒவ்வொரு வார்த்தையும் எதற்காகத் தூண்டில் என்பதை நான் புரியாதவள் அல்ல என்பதை நீ உணர்ந்ததில்லையா?'

"லைட்டிங் பண்ண நேரமாகும் போலிருக்கு. நான் ரூம்ல இருக்கேன் சார்." எழுந்து கொண்டாள் மதுமிதா. சுமதி-ஃபேன், ஐஸ் பாக்ஸ், மேக்கப் ஸ்பிரே சேகரித்து எல்லாம் எடுத்துக்கொண்டாள்.

"ஏன், நான் போரடிக்கிறேனா?"

"சேச்சே! நீங்க ஒரு இன்ரஸ்டிங் பர்சனாலிட்டி சார்."

"எதிலேயும் நான் வெளிப்படை: நோ ரகசியம்ஸ். அதனால்தான் வழுக்கையை மறைச்சி விக்கும் வைக்கிறதில்லை. தொப்பியும் வைச்சிக்கிறதில்லை. வழுக்கை வயசை மட்டும்தான் காட்டுதா? அனுபவஸ்தன்னு இன்னொரு சேதி சொல்லலையா, என்ன?" கண்ணடித்துச் சிரித்தார்.

'போடா குப்பை வண்டி!' என்று மனது சொன்னதை உதடுகள் அழகாக நாகரிகப்படுத்தி, "உங்க சிந்தனையே தனி சார்!" என்றன.

மதுமிதா மேக்கப் அறைக்குள் வந்தாள். சுமதி ஓட்டமாக வந்து ஏ.சி. போட்டாள். அடையாளம் வைக்கப்பட்ட ஆங்கில நாவலை எடுத்து அவள் கையில் கொடுத்தாள்.

வாங்கிக் கொண்டு படிக்காமல் தன் மனதில் சற்று முன் தோன்றிய 'குப்பை வண்டி' என்கிற வார்த்தைகளை யோசித்தாள்.

இப்படி–

ஒரே ஒரு குப்பை வண்டிதானா? இந்தத் துறையில் மட்டும்தானா? காமம் மட்டும்தான் குப்பையா? குப்பை வண்டியில் எத்தனை வகை குப்பைகள்! தேசத்தில் ஊழல் ஒரு குப்பை இல்லையா? ஜாதி வெறி ஒரு குப்பை இல்லையா? எனில்... குப்பை தேசமா இது? சரி எந்த தேசத்தில் குப்பை இல்லை! எய்ட்ஸ் குப்பை வெளிநாட்டு இறக்குமதி தானே? எல்லா தேசத்திலும் வேறு வேறு வகைக் குப்பைகள் எனில் இது குப்பை உலகமா? உலகமே குப்பை எனில், இதில் யார் சுத்தம்?

எனக்குள் இருக்கிறதா இல்லையா இந்தக் குப்பை? நிச்சயமாய் இருக்கிறது. இது வேறுவகை குப்பை!

யோசித்ததில் 'குப்பை உலகம்' என்று தலைப்பிட்டு ஒரு கவிதை எழுதலாம் என்று பட்டது.

"சுமதி என் டைரி எடு."

சுமதி தொங்கிய பைப்பைக்குள்ளிருந்து, கேட்ட டைரியும், கேட்காத பேனாவும் எடுத்துக் கொடுத்துவிட்டு, "மேடம், உங்க தங்கச்சியோட ஃபோன்ல பேசணும்னு சொன்னீங்க," என்றாள்.

"லைன் போட்டுக்கொடு" என்றுவிட்டு டைரியில் 'குப்பை உலகம்' என்று எழுதி அடிக்கோடிட்டு ஆரம்ப வார்த்தைக்கு யோசித்தாள்.

சுமதி டெலிஃபோனில் மறுபடி மறுபடி முயன்று கொண்டிருக்க, 'எக்ஸ்யூஸ் மீ' என்ற குரலும், கதவுத் தட்டலும் தொடர உள்ளே பாதி உடம்பை நீட்டி எட்டிப் பார்த்தான் பாலாஜி-நிருபர்.

"பாலாஜி சார், உங்களை நாளைக்குத்தானே வரச் சொன்னேன்."

"சொன்னீங்க. இன்னைக்கு நைட் நான் ஃபிலிம் ஃபெஸ்டிவலுக்குப் புறப்படறேன். ஜஸ்ட் ரெண்டே கேள்விதான். அஞ்சே நிமிஷம்தான். ஆறாவது நிமிஷம் 'வெளில போடா'ன்னு சொல்லிடுங்க."

"உட்காருங்க."

மேக்கப் போடும் சுழல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சின்ன நோட்டும் பேனாவும் எடுத்துக் கொண்டு, "ஸ்டார் டஸ்ட்ல திடீர்னு கல்யாணத்தைப் பத்தி பரபரப்பா சொல்லியிருக்கீங்களே!" என்றான்.

"அம்மா லைன்ல இருக்காங்க" என்றாள் சுமதி.

ரிசீவரை வாங்கிக்கொண்ட மதுமிதா, "இனியா! உன் படிப்பைப் பாதியில நிறுத்தட்டுமா? விளையாட்டில்லை. சீரியஸாத்தான் பேசறேன். நீ புறப்பட்டு வீட்டுக்கு வா, நேர்ல பேசிக்கலாம்," என்றாள்.

**(தொடரும்)**

---

# திட்டம்

**அழகிரி**

சக அலுவலகவாசியான மாதவன் இன்றைக்கும் என்னைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். முதுகில் தட்டிக் கொடுத்தான்.

"முருகா, உன்னை மாதிரியான ஆளை நாட்டுல இப்ப பாக்கிறது சந்தேகம்பா... பொறுப்பான பிள்ளை..."

பெற்ற தாயை மருத்துவமனைக்கு இரண்டாவது நாளாக டாக்டர் அழைத்து வரும்படி சொன்னதால் அழைத்து செல்லப்போகிறேன். இதை என்னவோ பெரிய விசயமாய் நினைத்து அடிக்கடி ஆச்சரியப்பட்டு, 'பொறுப்பான பிள்ளை... அது இது,' என்கிறான்.

நான் செய்வது கடமை தானே! பெற்ற தாய்க்கு பிள்ளை நான்... அதுவும் ஒரே பிள்ளை... நான் செய்யாமல் வேறு யார் செய்வார்கள்?

தலைமை அலுவலரிடம் சொல்லி விட்டு சைக்கிள் நிறுத்துமிடத்துக்கு வந்தேன். ஒரே காரணத்தை இரண்டாவது முறையாக மூன்று நாள் இடைவெளியில் சொன்னதும் சின்ன யோசிப்போடுதான் அனுமதி கிடைத்தது தலைமை அலுவலரிடம் இருந்து.

ஒரு வாரமாய் தலைவலி என்று போன வாரம் தான் அம்மா சொன்னாள். மனைவிக்குப் பயந்து காது இருந்தும் கேளாதவனாய் இருந்தேன். அம்மா தினமும் டாக்டரை பார்க்கணும் என்பாள். இது போல் தொடர் தலைவலி தனக்கு வந்தது இல்லை என்றாள்.

படிக்கத் தெரியாத பெட்டிக் கடைக்காரன் கொடுத்த இங்கிலீஷ் மருந்து உண்டாள். அமிர்தாஞ்சன் தேய்த்தாள். பிரயோஜனம் இல்லை.

மூன்று நாட்களுக்கு முன்னர் அம்மா புலம்புவதற்கு பதிலாக எனது மனைவி சுந்தரி புலம்பினாள். எனக்கு ஆச்சரியம். மாதவன் என்னைப் பார்த்து ஆச்சரியப் பட்டானே... அது போல பல மடங்கு ஆச்சரியம் எனக்கு.

பின்னே என்னங்க... மாமியாருக்கு பரிந்து மருமகளா!

"என்னங்க... மாமி சொல்றது காதுல விழுதா இல்லையா? தலைவலியால துடிக்கிறாங்க. அம்மா படுற அவஸ்தை எனக்கு தானே தெரியும்! டாக்டரை பாருங்க இன்னிக்கே."

அன்று காலையே டவுனுக்குச் சென்று 'ஐ ஸ்பெஷலிஸ்ட்' வாசுதேவனிடம் டோக்கன் வாங்கிக் கொண்டேன். அம்மாவை பரிசோதித்த டாக்டர்... இரண்டு நாள் சென்ற பிறகு, மறுபடியும் வரச் சொன்னதால்... இன்றும் போக வேண்டும்.



நான் சொன்னபடியே அம்மா கிளம்பி ரெடியாகி காத்திருந்தாள். சைக்கிளில் உட்கார வைத்து மிதித்தேன். இந்தக் காட்சியை பார்த்தால் கண்டிப்பாய் மாதவன் காலில் விழுவான்.

மறுபடியும் டெஸ்ட்...

பத்து நிமிட பரிசோதனையில் டாக்டர் வியர்வை பூத்தார்.

"ஹலோ மிஸ்டர் முருகன்... உங்க மதருக்கு கிளாஸ் - போட்டு ஆகணும். அப்பத்தான் சரியா பார்க்க முடியும்." என்றார். இன்னும் என்னென்னவோ சொன்னார்.

அடுத்த மூன்றாவது நாளே... அம்மா கண்ணாடி அம்மாவானாள்.

அதற்கு அப்புறம் அம்மாவிடம் புலம்பல் இல்லை. பொக்கை வாய் ஓரம் எப்போதுமே நிரந்தர புன்னகை, வருவோர் போவோரிடம் கண்ணாடியை ஒரு விரலால் தூக்கிப் பிடித்தவாறு பேசி இம்சை பண்ணிக் கொண்டு இருந்தாள்.

அன்று இரவு மனைவியிடம் ஒரு முத்தம் கிடைத்தது. ஐநூறு ரூபாய் கண்ணாடி போட ஆனதை நினைத்து அவதியாய் கிடந்ததில் முத்தத்தில் ஆர்வம் காட்டவில்லை.

"சரியான மரம்..."

என்னை குத்தி விட்டு கிசுகிசுத்தாள் சுந்தரி.

"பணம் விரயம் ஆன கவலை எனக்கு மட்டும் இருக்காதா...? என்னங்க பண்றது... உங்க அம்மாவால சரியா சமைக்க முடியல. அரிசியில கல்பொறுக்க முடியல. ஒரு வாரமா வீட்டு வேலை அத்தனையும் பார்த்தேன். தூங்கவும், புக்ஸ் படிக்கவும் முடியல. அதனாலதான் உடனடியா அம்மாவை அழைச்சிக்கிட்டு டாக்டரைப் பார்க்கச் சொன்னேன்."

விடிந்ததும் எழுந்து தோட்டப் பக்கம் போனபோது நானும், சுந்தரியும் ஒரு கணம் அதிர்ந்தோம்.

"என்ன நேத்துல இருந்து கண்ணாடி போட்டுக்கிட்டு அலையறீங்க?" என்ற பக்கத்து வீட்டு அம்மாளுக்கு, எனது அம்மா இப்படி பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்:

"ஒரு வாரமா ஒரே தலைவலி. சொல்லி சொல்லி பார்த்தேன். என் மகன் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுபோறதா தெரியல. அதான் அரிசி பொடைக்கிறப்ப... கல்லை பொறுக்கி அரிசியில போட்டேன். கண்ணு தெரியலைங்கிறதை சாக்கு சொல்லி சமைக்காம இருந்தேன். ஒரு வாரந்தான். அரண்டுபோன மருமக... மகன்கிட்ட சொல்லி டாக்டர் கிட்ட போக ஏற்பாடு செஞ்சா. இப்ப கண்ணாடி போட்டுக்கிட்டேன்."

சொல்லிவிட்டு ஒத்தை விரலால் கண்ணாடியை தூக்கி விட்டுக் கொண்டாள் அம்மா. இது நேற்று முதல் அறிமுகமான புத்தம் புது மானரிசம். ■



படிப்பகம்

# முற்றுப்புள்ளி

## யாழ். மு. கலை




சீரான வேகத்தில் வந்து கொண்டிருந்த புகையிரதம், தனது வேகத்தைக் குறைத்து ஓய்வுக்கு வந்தது.

பயணக்களைப்பால் சோர்ந்து போய் உறங்கிக் கொண்டிருந்த மல்லிகாவை, கொழும்பிலிருந்து- பக்கத்து இருக்கையிலிருந்து பயணஞ்செய்து வந்த பெண்மணி எழுப்பிவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள்.

சோம்பலை முறித்துக் கொண்டு புகையிரத ஜன்னலின் ஊடாக வெளியே பார்வையைச் சுழல விட்டவளின் கண்ணுக்குள் 'திருகோணமலை புகையிரத நிலையம்' எனும் பெயர்ப்பலகை வந்து நின்றது.

தனது ஊருக்கு வந்துவிட்டதை உணர்ந்தவளுக்கு புத்துயிர் கிடைத்த உணர்வு வந்தது.

பயணப்பையைக் கஷ்டப்பட்டு இழுத்துக் கொண்டு, வெளியேறும் வாசலுக்கு வந்தாள். சீருடையினரின் சோதனைக்குச் சிறிது தாமதித்து வெளியே வந்தாள்.

பயணிகளின் எண்ணிக்கைக்கு மேலாக ஓட்டோக்கள் அவர்களை எடுத்துச் செல்வதற்காக நின்றமையினால், ஓட்டோக்காரர்களுக்கிடையே போட்டி காணப்பட்டது.

"என்னுடைய ஓட்டோவிலை வாங்க!" என ஓர் ஓட்டோக்காரன் மல்லிகாவின் பெட்டியைப் பற்றித் தனது ஓட்டோவில் ஏற்றினான். மல்லிகாவும் ஏறிக் கொண்டாள்.

ஓட்டோ உயிர் பெற்று, அவளது வீட்டை நோக்கி ஓடிக் கொண்டிருக்க, அதை முந்திக் கொண்டு அவள் மனம் ஓடிக் கொண்டிருந்தது.

கணவன், பிள்ளைகளின் சிந்தனை அவள் நினைவில் எழுந்து நின்றது. இரண்டு வருடங்களுக்குப்பின் அவர்களை பார்க்கப் போகிறவளுக்கு ஆவல் அதிகரித்துக் கொண்டிருந்தது. மல்லிகா, சுந்தரத்தை மணந்து இருபத்தைந்து வருடங்கள் கரைந்து காணாமல் போயிருந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்பு வரையும் கணவனின் உழைப்பில் உருண்டு கொண்டிருந்த வாழ்க்கை இப்போது மல்லிகாவின் உழைப்பில் உருள வேண்டியதாகிவிட்டது.

சுந்தரம் இருதய நோயாளியான பின் அவனால் கடுமையான வேலைகள் எதனையும் செய்ய முடியாமல் போய்விட்டது.

தொடர்ந்தும் அவன் கடுமையான வேலைகளில் ஈடுபட்டால், விரைவில் அவனது உடல் பலவீனப்பட்டு உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்ற செய்திதான் அவர்கள் குடும்பத்தின் மீது இடியாய் இறங்கியது.

இதனால் சுந்தரம் வேலைகளில் ஈடுபட மல்லிகாவும், பிள்ளைகளும் அனுமதிக்கவில்லை. குடும்பம் கஷ்டமில்லாமல் இருக்க வேண்டுமெனில் உழைப்பில்லாமல் முடியுமா?

மல்லிகா வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஊரில் கூலி வேலைக்குச் சென்றுவந்தாள். கூலி வேலையில் உழைக்கும் பணம் குடும்பத்தை நகர்த்தவே போதாமல் இருந்தது.

இந்நிலையில் கல்யாண வயதில் இருக்கும் மூத்தவள் அகிலாவை எப்படிக் கரை சேர்க்க முடியும்? இந்தச் சிந்தனைதான் மல்லிகாவை குவைத்துக்குச் செல்லத் தூண்டியது.

சுந்தரத்துக்கு மல்லிகாவை மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்கு அனுப்ப விரும்பமில்லாவிட்டாலும், அவனது இயலாமை மல்லிகாவை குவைத் செல்லாமல் தடுக்க முடியாமலிருந்தது.

இன்று இரண்டு வருடங்களை முடித்துக் கொண்டுதான் குவைத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறாள்.

குவைத்துக்குப் பணிப் பெண்ணாகச் சென்றவள், அரபுக்காரன் வீட்டில் பதினெட்டு மணிநேரம் மாடாக உழைத்து, ஓடாகத் தேயவேண்டியிருந்தது.

நிறையக் கஷ்டங்களை அங்கு அவள் அனுபவித்தாள். அந்தக் கஷ்டங்கள் அவளைப் பெரியளவில் பாதிக்கவில்லை. குடும்ப நலனுக்காக எதனையும் தாங்கும் இதயமாக அவள் மாறியிருந்தாள். ஆனால்,–

குவைத்தில் நின்ற இரண்டு வருடத்தில் கணவன், பிள்ளைகள் பற்றி அறிய முடியாதிருந்ததைத்தான் அவளால் ஜீரணிக்க முடியாதிருந்தது.

கணவன், பிள்ளைகள் அனுப்பியவற்றில் ஒரு கடிதம் மட்டுந்தான் அவள் கரம் கிடைத்தது. அதுகூட குப்பைக் கூடைக்குள்ளிருந்துதான் எடுத்துக் கொண்டாள்.

பணிப் பெண்களாக வேலை செய்யும் பெண்கள் வீட்டு நினைவுகளின் பாதிப்பால் இடையிலேயே வீட்டுக்குத் திரும்பிவிடுவார்கள் என்ற நினைப்பில் சில வீட்டு எஜமானர்கள் அவர்களுக்கு வீட்டிலிருந்து வரும் கடிதங்களை அவர்களிடம் சேர்ப்பதில்லை.

பல கொடுமைகளை பணிப் பெண்கள் அனுபவித்து வருகிறார்கள். அதில் ஒன்றுதான் இது.

மல்லிகாவுக்கும் வீட்டிலிருந்து வந்த எந்தவொரு கடிதமும் சேர்க்கப்படவில்லை. ஏதேச்சையாகத்தான் கசக்கிப் போடப்பட்ட கடிதம் குப்பைக் கூடைக்குள்ளிருந்து பெற்றுக் கொண்டாள்.

வீட்டிலிருந்துதான் கடிதங்களைப் பெறாவிட்டாலும், தான் அனுப்பும் கடிதங்களையாவது தபாலில் சேர்க்கிறார்களா? என்பதுகூட தெரியாத, சிறையைவிட கொடிய சிறை வாழ்க்கையைத்தான் மல்லிகா அனுபவித்தாள். அவள் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பெண்கள்! இந்தக் கொடுமைகளிலிருந்து விடுபட-நாட்டுக்குத் திரும்பியிருக்க மல்லிகாவால் முடிந்திருக்கும். ஆனால் குடும்பநிலை, எதையும் தாங்கும் இதயமாக அவளை மாற்றியிருந்தது.

வீட்டு வாசலில் ஓட்டோ வந்து நின்றது. ஓட்டோவுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே வந்தாள்.

வீடு அமைதியாக இருந்தது. யாரையும் அழைக்காமலேயே உள்ளே வந்தாள்.

அடுக்களைக்குள்ளிருந்து வந்த மல்லிகாவின் மூத்த மகள் அகிலா தாயைக் கண்டாள்.

இரண்டு வருடப்பிரிவுக்குப்பின் தாயைச் சந்திக்கும் போது ஏற்படவேண்டிய மாற்றம் முகத்தில் இல்லை.

தாயை நோக்கி ஓடிவந்தவள், தாயைக் கட்டியணைத்து மார்பில் முகம் புதைத்து அழுதாள்....

"நான் தானே வந்திட்டன். பிறகேன் பிள்ளை அழுகிறாய்? இங்கே அம்மாவைப் பார்!" என தாய் மகளின் முகத்தை நிமிர்த்தினாள்.

அகிலாவின் கண்களிலிருந்து நீர் அருவியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அழுகையை அவள் நிறுத்தவில்லை.

மீண்டும் தாய், மகளைத்தேற்றினாள்.

"பிள்ளை! அழுகையை நிப்பாட்டன். இனி நான் உங்களோடைதானே இருப்பன். அழுகிறதை நிப்பாட்டிப்போட்டு அம்மாவுக்குக் குடிக்கக்கொஞ்சத் தண்ணீ கொண்டு வா!" என சொல்லி விட்டுத் திரும்பியவளது பார்வை சுவர் மீது விழுந்தது.

மல்லிகாவின் இதயத்தை யாரோ குண்டு வைத்துத் தகர்த்தது போலிருந்தது.

கணவன் சுந்தரத்தின் புகைப்படத்திற்கு மாலை போடப்பட்டிருந்தது. அவன் இறந்துவிட்டான்.

மல்லிகா வெளிநாடு சென்ற சில மாதங்களின் பின் இதய நோயால் சுந்தரம் இறந்துவிட்டான். வீட்டிலிருந்து அவளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் கிடைக்காமையினால் கணவன் இறந்த விடயத்தை இத்தனை நாட்களுக்குப்பின் அறியவேண்டிய கொடுமை அவளுக்கு ஏற்பட்டது.

சுமங்கலி வாழ்க்கைக்கு என்றோ முற்றுப் புள்ளி விழுந்தது தெரியாமல் இன்றுவரை சுமங்கலி என நினைத்து வாழ்ந்த கொடுமைக்குரியவளானாள்.

மல்லிகாவுக்கு உலகே இருண்டு வருவது போலாக, சுயநினைவிழந்து விழுந்தாள்.

# அழகி

## கிண்ணியா அமீரலி



'ஈரவிழிப் பாவையரின்
உள்ளத்துக் கற்பனையில்
ஒரு கோடிக் காதல் அலை தாவும்!
இவள்–
ஊரறியா உறவுதனை
ஓரிதழால் மறைத்தாலும்
ஒளி முகத்தில் தெரிகிறதே யாவும்!'

சிவநாயகம் ஐயாவின் இந்தக் கவிதையை ஞாபகமூட்டியது அவளது சிரிப்பு. கடைசிக் 'கடலை'யையும் வாய்க்குள் போட்டுக் கொண்டவள், இரண்டு கைகளையும் துடைத்தாள். ஜன்னலை முழுமையாகத் திறந்து விட்டாள். மடியிலிருந்த பத்திரிகையை அவசர அவசரமாகப் பிரித்து.. பட்டுச்சேலைக்காரி யாரென்று தேடினாள்.

அவளை ஒருகணம் ஆடாமல் அசையாமல் ஆழமாக விழிகளால் விழுங்கி விட்டுத்தான்.... ஆசனத் தேடுதலில் இறங்கினார் கம்ப விழிக்காளையர்கள்.

'பால்வதனம் வட்ட நிலா!
பல் வரிசை பச்சரிசி!
ஆள் கவனம் எனக்கூறும்
அம்புவிழி என்னை கீறும்'

கவிஞர் ஏ.எம்.எம். அலியின் கவிதையையும் ஞாபகப்படுத்தினாள் அவள். சங்கர், அவளை வர்ணிக்க வார்த்தைகளைத் தேடினான்.

'சில அழகுகள்
நெஞ்சை விட்டும்
அகல்வதேயில்லை!
அதில் நீயும் ஒருத்தி!'– என்று,

'கலைக் காதலன் சத்தார்' காதுக்குள் சொல்லிப் போனான்.

'பள்ளியாவத்தை'யில் வந்துநின்றது பஸ்.

இறங்க மனமில்லாமல் இறங்கினான் சங்கர்.

ஏழாவது தடவையாக நேற்றுப் பார்க்கப் போன பெண் ஞாபகம் வந்தாள்.

'மூக்கும் முழியுமாக இருக்கிறாள்' என்ற தரகர், சங்கரின் கண்ணில் படாமல் இருக்க வேண்டும்.

'என்லாஜ்' பண்ணப்பட்டிருந்த மூக்குக்காரியை எவன் கட்டிக் கொள்ளப் போகின்றான்?

நாளைக்கு எட்டாவது 'பெண்'ணைக் களுத்துறையில் பார்க்கப் போகின்றான். 'கழுத்து' எப்படி அமைந்த குமரோ?

எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று.... ஏதோ... அது ஏதோ... அது எவளிடம் இருக்கிறதோ....?

இந்த ஜென்மத்தில் சங்கருக்குக் கல்யாணம் நிச்சயமாக நடக்கப் போவதில்லை.

தனியார் நிறுவனம் ஒன்றில் கை நிறையச் சம்பளம் எடுக்கும் சங்கருக்கு இப்பொழுது முப்பத்தி எட்டு வயதாகிறது.

***

களுத்துறைக்காரிக்கு மாறு கண்ணைக் காரணம் காட்டிக் கல்யாணத்தை நிறுத்தக் காரணமானவள் வேறு யாருமல்ல- பஸ்ஸில் வந்த அழகிதான்.

'அழகி'யின் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளத் தீர்மானித்தான், சங்கர்.

அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

பஸ் புறப்பட்டது.

இவள் மட்டும் எனக்கு மனைவியாக வந்து வாய்த்து விட்டால்....

"எக்ஸ் கியூஸ் மீ...."

நிமிர்ந்தான்.

தீக்காயங்களால் முற்று முழுதாகச் சேதமாகி இருந்த அகோர முக வாலிபன்.

சங்கர் எழுந்து நின்று அவனை அமரச் சொன்னான்.

நன்றி கூறி அவன் அமர–

அழகி கேட்டாள்:

"ஏங்க... குமாரிக்கு எத்தனை மணிக்கு வகுப்பு முடியுமாம்...?"

அவனது கரங்களை தனது கரங்களுக்குள் கோர்த்து, அவனது முகம்பார்த்துச் சிரித்துப் பேசி, சக பயணிகளின் அதிசயப் பார்வையில் விழுந்து கொண்டிருந்தாள் அந்த அழகி.

பக்கத்து 'சீற்'றில் இருந்த அவளது பக்கத்து வீட்டுக்காரி... தனக்குப் பக்கத்திலிருந்த தங்கச்சியிடம் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தாள்:

"மீனா அவ பேரு... அவட புருஷன் மோகன். முந்தி நல்ல அழகா இருந்தான். குருரங்கன் மாதிரி. மேசையிலிருந்த மண்ணெண்ணெய் அடுப்பு வெடிச்சு... இப்படியாச்சு.... இது நடந்தது இவங்கட கல்யாணத்துக்கு ஒரு மாசத்துக்கு முந்தி. மீனா நல்ல பொண்ணு. காதலிச்சவனைக் கடைசி வரைக்கும் அவ.. ஏமாத்தல்ல... இப்படித்தான் இருக்கணும் 'லவ்' வுன்னா!"

சங்கர் ஆச்சரியத்தால் அசந்து போனான்.

வீடு இல்லை என்றதும் காதலி விமலாவை மறந்தவன் சங்கர்.

அதன்பின் இதுவரை எத்தனை பேரைத்தான் பெண் பார்த்துவிட்டான்.

ஒருத்திகூட இவனுக்குப் பொருத்தமாக அமையவில்லை.

பஸ் நின்றது.

அழகி மீனாவும், அவளது கணவன் மோகனும் வீதியில் இறங்கி நடந்தார்கள்.

சங்கர் விமலா வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். ■

# வெடிகுண்டுக் காதல்

## ரிஸ்கி ஷெரீப்

கல்லூரியில் இரண்டாமாண்டு இலத்திரனியல் விஞ்ஞான மாணவனாக நானிருந்த வேளை, அதே கல்லூரியில் முதலாமாண்டு ஆங்கில இலக்கிய மாணவியாய் நுழைந்தவள் கவுசல்யா.

பார்த்தவுடனேயே பணக்காரத்தனம் தெரியும் செழிப்பான அவளுடம்பில் கவிதைத்தனமான அழகும் இருந்தது உண்மை. கவுசல்யா- கவிசல்யா.

கல்லூரியில் நடந்த வருடாந்தக் கவியரங்கில் நான் கவிதைபாடிய மறுநாள், என்னைத் தேடி வந்தாள் கவுசல்யா. இரண்டு நிமிடங்கள் பேசினாள். இரண்டு வார்த்தைகளில் பாராட்டினாள். அப்படியே... இரண்டாய் மடிக்கப்பட்ட கடிதமொன்றையும் தந்துவிட்டு, இரண்டு நாட்களுக்குள்ளாகப் பதிலை எதிர்பார்ப்பதாகக் கூறி நகர்ந்துபோனாள். போகும்போது இரண்டு முறை திரும்பித் திரும்பிப் பார்க்க... அந்த நிலவு முகம் என் நெஞ்சில் பதிந்துபோனது.

"வாசமுள்ள–
உன் கவிதையோடு
உனையும் நான்
–நேசிக்கிறேன்.
கண்ணா,
நாம் காதலிக்கலாமா?"

–அந்தக் கவிதைத்தனமான அழகி தந்த கவிக்கடிதம் ஏனோ என்னைக் கவர்ந்தது. அன்றைய இரவுத் தூக்கம் என்னில் காணாமல் போவதற்கு அது காரணமாய் அமைந்தது.

"வாலிபர்களிடத்தில் தோன்றும் காதலின் முதல் அறிகுறி கோழைத்தனம். பெண்களிடம் தோன்றும் காதலின் அறிகுறி துணிச்சல். இந்தக் கோழைத்தனமும் துணிச்சலும் ஒன்றையொன்று நெருங்கும் தன்மையுடையவை!" என்கிற ரைஸ் டைலிசின் கூற்றைப்போல–

நாமிருவரும் நெருங்கி... நெருங்கி... நெருங்கி...

மிகவும் இறுக்கமாக எமக்குள் காதல் படர்ந்தது–வளர்ந்தது.

மனதிலும் உடம்பிலும் எதையும் மறைக்காமல் நாமிருவரும் காதலித்துக் கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த எனது நினைப்பில் இப்படி– இவ்வளவு சீக்கிரம் மண் விழுமென்று நான் நினைத்திருக்கவில்லை. ஆனால் கவுசல்யா...

மனசைக் காட்டி உடம்பை மறைக்கும் பெண்களிடத்தில் வித்தியாசமாக–

உடம்பைக் காட்டி மனசை மட்டும் மறைத்திருக்கிறாள்.

'ஏன்...ஏன் ஏமாற்றினாள்?'

"கவுசல்யா... ஏன்மா ஏமாற்றினாய்?"

எனக்குள் நான் கேட்டுக்கொண்டு– எனக்குள் நானே சொல்லிக்கொண்டேன்.

"ஏமாறமாட்டேன் நான்!" அப்படியே காலையில் நடந்தவற்றை அசைபோட்டேன். கவுசல்யா கடைசியாக சொன்னவற்றை அசைபோட்டேன்.

காலை பத்துமணியைத் தாண்டிய விநாடிகளில்–

கல்லூரியில் அவ்வளவாகக் கூட்டமிருக்கவில்லை.



லைப்ரரியில் வலக் கோடி மூலையில் நானும் கவுசல்யாவும் அமர்ந்திருந்த போதுதான்,கவுசல்யா சொன்னாள். "சக்தி! (சக்திவேல்) வர்ற 30ம், திகதி எனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்காங்க..." சர்வசாதாரணமாகச் சொல்ல, நான் நம்பவில்லை. முதலில் வெறுமனே விளையாட்டு என்றுதான் நினைத்தேன். ஆனால்... வார்த்தையில் ஏதோ உக்கிரம் தென்பட அதுவே எனக்கு விபரீதமாகப்பட்டது.

"கவி... கவுசல்யா..." திணறினேன்.

"ஆமா சக்தி... நாம பிரியிற நேரம் வந்தாயிற்றுன்னு நெனைக்கிறேன்!"

நான் சடசடவென மேலும் மேலும் அதிர்ந்தேன்.

"நல்ல நண்பர்களாக நாம பிரிஞ்சிடலாம் சக்தி..."

என் மனசுக்குள் புயல் அடித்தது.

"கவு... சல்யா...."

"சினிமா வசனமெல்லாம் பேசுற நேரமில்லயிது. நடைமுறை யதார்த்தம் பார்த்து நாம பிரிஞ்சிடலாம். லவ் பண்ணி டைம் வேஸ்ட் பண்ணினது போதும்னு படுது சக்தி..."

நான் விலுக்கென நிமிர்ந்தேன்.

"நீ என்ன சொல்றே?" நா வரண்டு போய்க்கேட்டேன்.

"வர்ற முப்பதாம் திகதி நான் வேறொருத்தருக்கு மனைவியாகப் போறன். அதனால நம்ம காதல் விளையாட்டையெல்லாம் இண்ணையோடே நிறுத்திக்கலாம் சக்தி."

"அப்போ... காதாலிச்ச என்னையே கல்யாணம் பண்ணிக்கணும்னு உனக்குத் தோணலையா கவுசல்யா?" என்றேன். அவள் சாதாரணமாகவே சொன்னாள்: என்னைப் போல் எந்த அதிர்வும் அவளில் இல்லாமல் போய்... எப்படி.... எப்படி இயலும் இது?

"நீ இப்போதான் படிச்சிட்டிருக்கே... படிக்கிற வயசுல காதலிக்கலாம் சக்தி. ஆனால் கல்யாணம் பண்ணிக்கலாம்னா வசதி! தொழில் வேணுமில்லையா? நீ தொழில் செஞ்சு சம்பாதிச்சு கல்யாணம் பண்ணிக்கிற வரைக்கும் எங்க வீட்டுல பொறுக்கமாட்டாங்க. நானும் இளமை தட்டிப்போயிடுவேன்."

நான் மவுனமாயிருந்தேன். அவளே சொன்னாள்:

"காதல் வேகத்துல என் வாழ்க்கைய என்னால சீரழிச்சுக்க முடியாது சக்தி. 'சேர்ந்து வாழ்வோம்! இல்லேன்னா சேர்ந்து சாவோம்' என்று சினிமா வசனம் எழுதுறவன் கூட ஒண்ணுக்கு ரெண்டா வப்பாட்டி வெச்சிருப்பானுக. இதுதான் நடைமுறை. மனசைக் குழப்பிக்காதே! கல்யாணத்துக்கு வந்துடு. ஏன்னா... உன் கல்யாணத்துக்கும் எனக்கு சொல்லணும்... இங்கே பாரும்மா சக்தி..." என்று அவள் என் தலையைக் கோத முயல, விலகிக்கொண்டேன்.

"வேணாம் கவுசல்யா...!" அப்படியே அழ ஆரம்பித்தேன்.

"ஆம்பிள்ளை அழக்கூடாதுப்பா."

"மனசுல காயம்பட்டா வரும் அழுகைக்கு ஆண், பெண் வித்தியாசம் பார்க்கத் தெரியாது கவுசல்யா..."

"இதை ஏன் நீ காயம்னு நினைக்கிறே சக்தி!"

கண்களில் உக்கிரச் சிவப்போடு அவளைப் பார்த்தேன்.

"உன்னை மாதிரி காதலை சாதாரணமாக என்னால் எடுத்துக்க முடியாது. ஏன்னா... 'சேர்ந்து வாழ்வோம் இல்லேன்னா சேர்ந்து சாவோம்' என்கிற காதல் இலக்கணம் மட்டும்தான் எனக்குத் தெரியும் கவுசல்யா... வாடகைக்கு காதல் கொண்டு குத்தகைக்கு மனைவியெடுக்க எனக்குத் தெரியாது...."

அவள் என்னை விநோதமாகப் பார்ப்பதை உணர்ந்தேன்.

"உன்னோட இந்தக் கனவு தெளியணும் சக்தி. இல்லேன்னா வாழ்க்கையை அனுபவிக்க முடியாதுப்பா... எல்லாம் மறந்துடு... நான் வர்றேன்..."

அவள் போய்விட–

நான் மேசையில் முகம் புதைத்து மீண்டும் அழ ஆரம்பித்தேன்.

'சேர்ந்து வாழணும்... இல்லேன்னா சேர்ந்து சாகணும்.'

–என்பதை மனதுக்குள் உணர்வுபூர்வமாக எண்ணிப் பார்த்துக்கொண்டேன்.

முப்பதாம் திகதி! விபரீதம் நடக்கப் போகும் முப்பதாம் திகதி!!

கவுசல்யா சொன்ன அதே 30ம் திகதி! நான் கையில் பார்சலோடு உள்ளே நுழைந்த போது,

திருமண மண்டபம் களை கட்டியிருக்க, தடல் புடலான ஏற்பாடுகளுக்கு மத்தியில்–

மேடையில் கவுசல்யா தனது மணாளனோடு அமர்ந்திருந்தாள்.

கவுசல்யா தேவதையாய்த் தெரிந்தாள். எனக்கென்று இருந்த தேவதை.

'விடமாட்டேன் என் இனிய காதலியே!'

நினைத்துக்கொண்டே கவுசல்யாவை நெருங்கிப்போக–

அவள் முகம் மலர்ந்து பார்த்தாள். சந்தோஷித்தாள். கண்களால் அழைத்தாள்.

இன்னும் அவளை நெருங்கினேன். அப்படியே கையில் இருந்த பார்சலைக் கொடுத்தேன்.

கேட்டாள் "கல்யாண பரிசா?" சிரித்தேன்.

"என்னோட காதல் பரிசு!" மீண்டும் சிரித்தேன்.

அவள் தன் முகத்தில் அதிர்வதற்கு முன்னால்... அப்படியே சடாரென அவளை இழுத்து அணைத்துக்கொண்டேன். அடுத்த கணம்- 'டமார்!' என்கிற ஒலியோடு கரும்புகை பரவி–

அவளது கையில் இருந்த எனது பார்சல்– பண்ணப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்துச் சிதறிப்போக... உடம்பில் ஏராளமான காயங்களோடு கவுசல்யா என்மீது சரிய... எனதும், அவளதும் உயிர் அடங்குமுன் சொன்னேன், அவளை அணைத்தபடியே–

"சேர்ந்து வாழ முடியல. சேர்ந்து செத்துப்போவோமே...." அடுத்த கணம்–

எனது மாரில் அவளது தலை அப்படியே சரிய...

நான்னும் கொஞ்சம் கொஞ்சமாய் செத்துக்கொண்டிருந்தேன். ■



படிப்பகம்

www.padippakam.com

# புது நூல்

கற்பதிலே அவனுக்கு
கடல்போல் ஆசை!
நூல் கற்பதிலே
கடல் போல் ஆசை!

நூலுடன் போர்தொடு
நூலுடன் போர்தொடு

இரத்தம் சிந்தாமல்
கத்தி இல்லாமல்
சித்தம் இனிக்கின்ற
புத்தி செழிக்கின்ற
போர்தொடு! போர்தொடு!

புரட்ட புரட்ட புதுமை
திரட்ட திரட்ட இனிமை!
படித்தது இனிக்க
படிக்காதது அழைக்கும்!
நூற்கடல் கடைய
கிடைப்பது அமுதம்!

அறிவின் திறவுகோல்
அர்த்தமுள்ள நூல்கள்!

காதலியின் முத்தம்போல
உணர்ந்த பின்னர்
உயிருள்ளவரை
இனிப்பவையும் உண்டு!

கடும் மருந்துபோல
கசந்தாலும்
ஆயுள் உள்ளவரை
உரம் தருபவையும் உண்டு!

அவனுக்கு அதனால்தான்
நூல்களிலே ஆசை!
அவனுக்கு அதனால்தான்
நூல்களிலே மோகம்!

"நகமும், தசையும்போல
நூலும் நீயும்!
உன்னை கைப் பிடிப்பவள்
என்ன கதி ஆவாளோ?"

நண்பர்கள் நகைத்ததுண்டு
கேலிச் சொல் எறிந்ததுண்டு.

அன்றுதான் அவனுக்கு
மணநாள்!
மாப்பிள்ளை முறுக்கு
முகத்தில் குறுகுறுப்பு!

"உள்ளே போனதும்
நூலைப் புரட்டாதே
உன்னவளைப் புரட்டு!
நூல் பற்றும் கையால்
உன்னவள்
நூல் இடை பற்று!"

நண்பர்கள் கிண்டல்
கிளர்ச்சி விதைத்தது.

தனிமை
அருகில் ஒரு இனிமை!
தனியறை
பக்கத்தில் ஒரு பளிங்குச் சிலை!

"வெள்ளித் தட்டுத்தான்
மஞ்சம்!
அள்ளிக் கொட்டலாம்
விருந்தை!
துள்ளும் இளமைக்கோ
பஞ்சம்?
வெல்லும் போரினை
தொடங்கு!
விடியும் வரையிலே
மயங்கு!"

எங்கோ படித்தது
உள்ளே இடித்தது!
மனதே இனித்தது
உள்ளே தகித்தது!

"கண்ணே" என்றான்.
கரம் தொட்டான்.

அனுபவம் புதுமை
மலர் சிலிர்த்தது!

"என்மேல் விருப்பமா?"
என்றான்.
அசட்டுக் கேள்விகள்
உதிக்கும் வேளை அது!

"ம்" என்பாள்
உள்ளே மூச்சு கொதிக்கும்.
கள்ளி இதழ் துடிக்கும்!
வந்து மூடு என
நொந்து கொள்ள விரும்பும்!

"கண்ணே! கண்மணி"
காதுக்குள் முணு முணுப்பு!
கரத்தின் வெள்ளோட்டம்!
சுரம் மீட்ட
பெண்வீணை சிணுங்கும்!
அந்த சிணுங்கலும்
இன்ப நாதமாய் ஒலிக்கும்!

"கைபட்ட இடமெங்கும்
சுரங்கம்" என்பான்!

'கைபட்ட இடமெங்கும்
சொர்க்கம்' என்று
நினைப்பாள்! சொல்லமாட்டாள்!

"நூலுக்கு அட்டை உண்டு
இந்த நூலுக்கு
ஆடை உண்டு"
கற்பனை சிறகடிக்கும்!

அட்டை விலக்காமல்
நூல் படிக்க இயலாது!



## இலக்கிய நயம்

நூல் அனுபவம் கைகொடுக்க
அவன் கைசெய்த காரியத்தால்
நூல் இடையாள் வெட்கித்தாள்!
பால் போல் வதனத்தில்
பருவ வெட்கம் திரையிட்டது!

ஆசைதான்
ஆடை அங்கே!
மோகம்தான்
ஆடை அங்கே!

நெருப்பாலே நீர் கொதிக்கும்
நீராலே தீ குளிரும்
விருப்பாலே உடல் கொதிக்கும்
கலப்பாலே உடல் குளிரும்!

'ஆண்பால், பெண்பால் இரண்டும்
விருப்பால், இனிப்பால்
காதல் தகிப்பால், காம நெருப்பால்,
கலப்பால் உண்டாகும்
இன்பப் "பால், இது புதுப்பால்!'
என்று புதுப் பொருள் கண்டான்
பள்ளியறைப் பாடத்தால்!

இதழில் படித்தது கவிதை
இதுவரை படிக்காத கவிதை

இடையது மெல்லிய சிறு நூல்
இதுவரை காணாத சிறுநூல்
நூலினை புரட்ட விரியும்
நூல் இடை தொடத் துவளும்!

கொடியிடை தாங்கிடும்
கனிகள்.
கொத்திடும் அணிலென
இதழ்கள்.

படமெடுத்தாடும் பாம்பாய்
பின்எழில் தொடுகின்ற கூந்தல்
நடமிட்டு வருகின்ற சிலையே
புடமிட்ட தங்கச்சிலை நீ!

மோகித்து கிடந்தான் காளை
மூர்ச்சித்துப் போனாள் மூழ்கி
இன்ப மூர்ச்சித்துப் போனாள்!

நெற்றியில் வியர்வை மின்ன
வெற்றியில் தேகம் துள்ள
ஒற்றிய இதழ்கள் தேய
பற்றியே கொண்டு தூங்கி
முற்றிய காதல் நுகர்ந்தான்!

காலையில் நண்பர் கேட்க
காளையோ முறுவல் கொண்டான்.
"நூலினை படித்தேன்-புதிய
நூலினை படித்தேன்!
விடிந்தது மூடி வைத்தேன்
மறுபடி படிக்க ஆவல்!"

நண்பர்கள் முகத்தில் அதிர்வு
"போச்சடா போச்சுதேடா
முதலிரவு முள்ளாய் ஆச்சே
பாவம் அந்த பெண்தான்."
என்றனர் சலிப்பின் ஊடே!

தருவது ரசிகன்

காளை கள்ளமாய்
சிரிப்புற்றான்.

நூலினை படிக்கும்போது
அறிந்திட அறிந்திட
அறியாமை இன்னும்
கடலளவு என்று உணர்வோம்!
என்னவள் தந்த இன்பம்
பொன் வண்ண மேனிச் சுரங்கம்
அள்ளிட மேலும் ஊறும்
அறிந்திட மேலும் தூண்டும்
புதுமையும் உண்டு-நல்ல
புதிர்களும் உண்டு!

என்று நினைத்தான்
சொல்லவா முடியும்?
இதை மட்டும்
சொன்னான் முடிவில்;

"நூல் கண்டேன்! நூலே
கண்டேன்
வேல் விழி பெண்ணாள்
நூல் போல ஆனாள்
கண்டேன்!"

காளை மனதில் நினைத்ததை
திருவள்ளுவர் குறளில் சொல்கிறார்;

"அறிதோறு அறியாமை கண்டற்றால்
–காமம்

செறிதோறும் சேயிழை மாட்டு."

அதிகாரம்-111, குறள்-1110.

## சிந்தியா பதில்கள்

மட்டக்களப்பு கிளையை தூண்டிவிட்டு இவர் ஏன் பின்னால் நிற்கிறார்? முன்னால் வந்து வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூற வேண்டியதுதானே! 'மீனுக்கு வால், பாம்புக்கு தலை!'

★ இலங்கையில் அமெரிக்கத் தலையீடு இந்தியாவுக்கு பாதகம்தானே?

பா. ராஜ்மோகன், கண்டி.

தான்! குஜ்ரால் கண்ணை மூடிக்கொண்டு இருந்தாலும்கூட, இந்திய வெளியுறவுத் துறை விழிப்பாக நோக்கத் தொடங்கும்! கொழும்பு குண்டுவெடிப்பை இந்தியா கண்டிக்காததும் கவனிக்கத்தக்கது!

★ தமிழ்க் கட்சிகள் அமெரிக்காவுக்கு ஆதரவுக் கட்சிகளாக மாறிவிட்டனவா?

கே. குலசிங்கம், திருமலை.

தமிழ்க் கட்சிகள் போலிச்சாமியார்கள் மாதிரி; பதவி ஆசையைத்தவிர அனைத்தையும் துறந்துவிட்டு நிற்கின்றன! கொள்கை, கோட்பாடு, முன்னைய நிலைப்பாடுகள் என்று அவை துறந்துவிட்டவற்றை பட்டியல் போட்டால் பக்கம் போதாது!

★ டியர் சிந்தியா! தமிழ் சேவையில் செய்திக் கண்ணோட்டத்தில், ஒரு தமிழ்ப் பத்திரிகை அரசியல் தீர்வில் ஒன்றுமில்லை என்று பிரசாரம் செய்வதாகக் கூறினார்கள், கேட்டீரா?

மா. பாண்டியன், மட்டக்களப்பு.

அப்படியா? நான் ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்!

உலகம் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதுபற்றி கடவுளிடம் புகார் செய்ய ஒருவன் சொர்க்கத்துக்குப் போனான்.

"எல்லாம் வல்ல இறைவனே! நீங்கள் எல்லாம் அறிந்தவர் என்று கூறுகிறார்கள். ஆனால் நீங்கள் படைத்த பூமியில் என்ன நடக்கிறது என்பதே உங்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். உண்மையைப் பற்றி யாருமே கவலைப்படுவது இல்லை," என்றான்.

அதை கடவுள் மறுத்தார். "எனக்கு எல்லாம் தெரியும். அதோ எதிரே உள்ள பலகையைப் பார். ஒருவர் பொய் சொல்லும் போதெல்லாம் ஒரு சிவப்பு ஒளி பளிச்சிடும். பொய் சொல்லுவது யார் என்று தெரிந்து கொள்வேன்!"

பலகையைப் பார்த்துக் கொண்டிருந்த போது ஏராளமான சிவப்பு விளக்குகள் இடைவிடாமல் பளிச்சிட்டன.

"ஒரே சமயத்தில் எல்லா சிவப்பு விளக்குகளும் ஏன் பளிச்சிடுகின்றன?" என்று கேட்டான் அப்பாவி மனிதன்.

கடவுள் சொன்னார்: "ஓ. அதுவா? இப்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், ரூபவாகினி செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்!"

★ கொழும்பில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கை பற்றி என்ன சொல்கிறீர்?

க. பரந்தாமன், கொழும்பு-09.

தேறுதல் சொல்லமுடியாது என்பதால்தான், தமிழர்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கை என்று சொல்லி, பாதிக்கப்பட்டவர்களை சிரிக்க வைக்க முயன்றிருக்கிறார்கள்!

★ ஐ.தே.கட்சி பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட முறையை தமிழ்க் கட்சிகள் கண்டித்துள்ளன. உமது கண்டனம் என்ன?

ஆர். ருத்திரகுமார், வவுனியா.

தமிழ்மக்கள் தங்களைக் கண்டிக்க முன்பாக, தாங்களே முந்திக்கொண்டு ஐ.தே. கட்சியைக் கண்டிக்கின்றன அந்தக் கட்சிகள். இரு பெரும் கட்சிகளுமே ஒருவர்மீது ஒருவர் பழியைப் போட்டுக்கொண்டு சடுகுடு ஆட்டம் போடுகின்றன! இரு தரப்புமே ஏமாற்றுகிறது என்று உலகம் முன்பாக உரத்துச்சொல்ல தமிழ்க் கட்சிகளுக்கு முதுகெலும்பு இல்லை. பதவியில் இல்லாத கட்சி என்ற துணிச்சலில் பாய்ந்துவிட்டு மீசையை முறுக்கிக் காட்டுகிறார்கள். நம்பி விடாதீர்கள்!

★ அமெரிக்காவின் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் தளர்வு உள்ளதாக இந்திய ஏடான 'இந்து' கூறியுள்ளதே?

வி. தர்மலிங்கம், தெகிவளை.

'தற்போதைய போரில் இலங்கைக்கு உதவ அமெரிக்கா முன்வரவில்லை,' என்று தன் கூற்றுக்கு 'இந்து' ஆதாரம் காட்டப் பார்க்கிறது! இலங்கைப் படையினருக்கு உதவ அமெரிக்க கொமாண்டோக்கள் வந்தது எதற்காம்? உலக சமாதானத்திற்கு உதவ என்று 'இந்து'வும் கூறுமோ!

★ ஜனாதிபதியின் தீர்வு முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு நெல்சன் மண்டேலா கூறியுள்ளாரே?

எம். நஹீபா, குருநாகல்.

சம்பிரதாயமான வார்த்தைகள்!

★ அம்பாறையைப் பிரிக்க கூட்டணி பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் உடன்பட்டுள்ளாரா?

இ. ரவீந்திரன், மட்டக்களப்பு.

தலைவிதியை நிர்ணயிக்கும் கோட்பாட்டில் அவரது மௌனம் சந்தேகம் தருகிறது!

★ தங்களை அழகு படுத்துவதில் பெண்கள் அதிக கரிசனம் காட்டுவது ஏன்?

சி. உஷ்மான், புத்தளம்.

பின்னே அழுக்காக இருக்க வேண்டும் என்றா சொல்கிறீர்கள்?! நிற்க: ஆண்கள் மட்டும் முகக் கண்ணாடி பார்க்காமல்; முகம் கழுவாமல், முடி வாராமல்தான் இருக்கிறார்களாக்கும்! பெண்கள் என்றாவாவது கைப்பைக்குள்தான் சீப்பு வைத்திருக்கிறார்கள். ஆண்கள் பலர் காற்சட்டைப் பையிலேயே சீப்பு வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் தெரியுமா உஷ்மான்! அழகாக இருக்க நினைப்பதில் தப்பு ஒன்றும் இல்லை.



'நாம் இருவர் நமக்கு இருவர்' படத்தில் பிரபுதேவா–மகேஸ்வரி.

★ 'வி.ஐ.பி'க்கு அடுத்து அபிமான பிரபு தேவாவின் அடுத்த படம் எது?

ஏ. புஸ்பக்குமார், மாத்தளை.

'நாம் இருவர் நமக்கு இருவர்'.

★ எல்லோருக்கும் குட்டிக் கதை எடுத்து விடுகிறீரே. எனக்கும் ஒன்று கொடுக்கலாமா?

செல்வி கி. ரமணி, அவிசாவளை.

'நேருக்கு நேர்' படத்தில் நடித்துள்ள சிறுமி ஜெனிபர் சொல்லியுள்ள ஒரு ஜோக் தருகிறேன்.

"தட்டுங்கள் திறக்கப்படும் என்று இயேசு ஏன் கூறினார் தெரியுமா?"

"ஏன்?"

"அந்தக் காலத்திலே 'கோலிங் பெல்' கிடையாது!"

★ பிரதமர் சிறிமாவோ அம்மையாரின் சத்தத்தையே காணோமே?

பி. சிவபாலன், கண்டி.

அவர் மட்டும்தான் அமைதியை விரும்புகிறார்.

★ எதற்கெடுத்தாலும் விளம்பரம் செய்யத் தொடங்கிவிட்டார்களே! மக்கள் எதை நம்புவது? எப்படி நம்புவது?

எஸ். வாசுகி, மட்டக்களப்பு.

"புகை பிடிப்பவர்கள் மூப்பு அடைவதே இல்லை" என்று சிகரெட் விளம்பரத்துக்காக ஒருவர் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்.

கேட்டுக் கொண்டிருந்த எண்பது வயதான ஒருவர் சொன்னார்: "அவர் சொல்வது உண்மைதான். வாலிப வயதில் புகைப்பிடிக்கத் தொடங்குபவன் நடுவயதை அடையும் போதே செத்துவிடுவான். அவன் முதுமை அடையமாட்டான் என்பது உண்மைதான்!"

★ அவசரப்பட்டு முடிவெடுப்பவர்கள் யார்–ஆண்களா? பெண்களா?

திருமதி விஜயா கணேஷ், கொழும்பு-04.

அமரர் மு. வரதராசனார் கூறியுள்ள மணிமொழி என்ன தெரியுமா?

"பெண்களைப் போல் தயங்குகிறவர்களும் இல்லை; நிலைமை நெருக்கடியாகிவிட்ட போது அவர்களைப் போல துணிகிறவர்களும் இல்லை."

## ஸ்போர்ட்ஸ்

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. 3 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் இரண்டு போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. மூன்றாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 53 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் 1-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா தொடரை வென்றுள்ளது.

இந்த டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தானிய வீரர்கள் அலி நக்வியும், அஸார் மஹ்மூத்தும் தாம் அறிமுகமான முதல் போட்டியிலேயே சதம் அடித்துச் சாதனை புரிந்தனர். 120 வருட கிரிக்கெட் வரலாற்றிலே ஒரு போட்டியில் இரு அறிமுக வீரர்கள் சதமடிப்பது இதுவே முதல் முறை.

பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் நடந்த இந்தப் போட்டியில் 20 வயதான துவக்க ஆட்டக்காரர் அலி நக்வி 115 ஓட்டங்களும், 22 வயதான சகலதுறை ஆட்டக்காரர் அஸார் மஹ்மூத் ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதற்கு முன்னர் ஒரே போட்டியில் இரு அறிமுக வீரர்கள் விளையாடி ஒருவர் சதமடித்தும், மற்றவர் சதத்தை நெருங்கி அவுட்டாகி, சாதனை நழுவ விட்ட சந்தர்ப்பங்கள் வருமாறு:

1947–48ல் இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணி சார்பாக அன்டி கன்டியும், ஃபிராங்க் வொரல் ஆகிய புதிய வீரர்கள் சேர்க்கப்பட்டார்கள். மேற்கிந்தியத் தீவின் போர்ட் ஒஃப் ஸ்பெயினில் நடந்த போட்டியில் அன்டி கன்டியும் 112 ஓட்டங்களை எடுத்தார். ஃபிராங்க் வொரல் 97 ஓட்டங்கள் எடுத்து அவுட்டானார்.

அதே போல் 1964–65ல் அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் காலிட் இபாதுல்லாவும், அப்துல் காதரும் அறிமுகமானார்கள். பாகிஸ்தானின் கராச்சியில் நடந்த இந்தப் போட்டியில் இபாதுல்லா 166 ஓட்டங்களை எடுத்தார். அப்துல் காதர் 95 ஓட்டங்களுடன் அவுட்டானார்.

### மூன்றாவதில் வெற்றி



மஹ்மூத்–நக்வி

கடைசியாக, சென்ற வருடம் ஜூன் மாதம் இந்திய அணி இங்கிலாந்திற்குச் சென்றது. இந்திய அணி சார்பாக சௌரவ் கங்குலியும், ராகுல் ட்ராவிட்டும் லோட்ஸ் மைதானத்தில் நடந்த டெஸ்ட்டில் முதல் முறையாக விளையாடினார்கள். இப்போட்டியில் கங்குலி 131 ஓட்டங்களை எடுத்தார். ஆனால் ராகுல் ட்ராவிட் 95 ஓட்டத்துடன் அவுட்டாகி விட்டார்.

### லாரா மறுப்பு

இங்கிலாந்து கவுண்டி கிளப்களில் ஒன்றான வோர்விக்ஷயர் கிளப் அடுத்த சீசனில் தமது கிளப்பிற்காக விளையாட தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்டை ஒப்பந்தம் செய்திருந்தது.

ஆனால் அதேசமயம் தென்னாபிரிக்க அணி வெளியூர் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதால் டொனால்ட் வோர்விக்ஷயர் கிளப்பிற்காக விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வோர்விக்ஷயர் கிளப் மேற்கிந்தியத்தீவு வீரர் பிரையன் லாரா மீது குறி வைத்துள்ளது. ஆனால் லாரா கவுண்டி அணிக்காக விளையாட விருப்பமில்லை என்று கூறியுள்ளார்.

இருப்பினும் வோர்விக்ஷயர் கிளப் கோடிக்கணக்கில் பணம் தருவதாகக் கூறியிருக்கிறது. சில வேளையில் லாரா கவுண்டி அணிக்காக விளையாடக்கூடும் என்று பேசப்படுகிறது.

### இவர்கள் தான் அவர்கள்



எஸ்.பி. பாலசுப்பிரமணியம்



சிவாஜி கணேசன்



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 106

இராமபிரான் நன்றிப் பெருக்கோடு ஆஞ்சநேயரை அருகழைத்து ஆரத்தழுவினார். இக்காட்சி அங்கிருந்த அனைவரையும் நெகிழ வைத்தது. ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றிருந்த ஜாம்பவனையும் அழைத்து மறுபுறத்தில் அணைத்துக் கொண்டார்.

இலக்குவன் உயிர்பெற்றெழுந்திருந்த

## சீற்றங்கொண்ட இராவணேசன்

போதிலும், அங்கு என்னதான் நடந்தது என்பதை அறியாதிருந்தார். அங்கதனை அருகழைத்து வினவினார். இந்திரஜித்து பிரம்மாஸ்திரத்தை ஏவியமையினால் நேரடியான பாதிப்புக்குள் இலக்குவன் சிக்கி உயிரிழந்ததையும் ஏனைய பலரும் உயிரற்று விழுந்ததையும் அங்கதன் கூறினான். இலக்குவனுக்கு நேர்ந்த கதிகண்டு கலங்கிய இராமபிரான் மூர்ச்சித்து விழுந்ததையும் சொன்னான். ஜாம்பவனின் அறிவுரையின்படி ஆஞ்சநேயர் விண் தாவி வடதிசை சென்று சஞ்சீவி பர்வதத்தையே கொண்டு வந்து சேர்த்தமையினால் அனைவரும் உயிர்த்தெழுந்ததையும் தெரிவித்தான்.

இத்தகவல்களை அறிந்த இலக்குவன் ஜாம்பவனின் தாளினைத் தொட்டு வணங்கினார். இதனை எதிர்பார்க்காத ஜாம்பவன் துணுக்குற்றுப் பின் வாங்கினார். தொடர்ந்து அனுமனின் பாதங்களையும் தொட்டு வணங்க இலக்குவன் முயற்சிப்பதற்கு முன்னரே அவர் இலக்குவனைத் தடுத்து, இராமபிரானின் தாளினைச் சுட்டிக்காட்டி, "எங்களால் எதுவும் நடைபெறவில்லை. எல்லாமே 'ஸ்ரீ இராம ஜெயம்' எனும் மந்திரத்தின் மகிமையே!" என்றார்.

மீண்டும் மீண்டும் 'ஸ்ரீ இராம ஜெயம்' மந்திர உச்சாடனம் வான் முட்டிய கோஷமாக எழுந்தது. வானர வீரர்கள் அனைவரும்

**இராஜகுமாரன்**

கைகளைச் சிரமேல் குவித்து 'ஸ்ரீ இராம ஜெயம்' என்று கோஷித்த வண்ணம் ஆனந்தக் கூத்தாடினர். அப்போது இராமபிரான் தன் கைகளை உயர்த்தி எல்லோரையும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். எங்கும் நிசப்தம் குடிகொண்டது.

"அதர்மத்தை அழித்து தர்மநெறியை நிலை நாட்டும் நோக்குடன் நடைபெறும் போரில் எம்முடன் இணைந்து நிற்கும் வீரர்களே! இப்போரின் இறுதிக்கட்டத்துக்கு வந்துவிட்டோம். பல சோதனைகளை எதிர் நோக்கி அனைத்திலும் வெற்றி கண்டோம். இருப்பினும் இனிமேல்தான் எமது எதிரிகள் மூர்க்கத்தனமாக எம்மை எதிர்க்க வருவார்கள். மிகவும் எச்சரிக்கையாக நாம் நடந்து கொள்ள வேண்டும்! தர்ம தேவதை எம்முடனிருப்பதால் நிச்சயம் வெற்றி பெறுவோம்! அடுத்த கட்டப் போருக்கான ஆயத்தங்களை உடன் கவனியுங்கள்!"

இவ்வாறு இராமபிரான் கூறியதும் வானர சேனை பலத்த ஜெயகோஷமிட்ட வண்ணம் போருக்கான முன்னேற்பாடுகளில் இறங்கியது.

### தூது ஓதிய வண்டுகள்

இராவணன் தனக்கு இனி எதிரிகள் எவரும் இல்லை என்று மமதை கொண்டான். சுரபானத்தை அருந்தி, ஆடற்கரசிகள் ஆடிய ஆட்டங்களிலும் பாவாணர்களின் இன்னிசையிலும் மெய் மறந்திருந்தான். சற்று நேரத்துக்குப்பின், இராவணன் தன் கழுத்துகளில் அணிந்து தோள்களில் துவண்ட அழகிய மலர் மாலைகளிலிருந்த தேனீக்கள் சில தன் காதுகளில் எதையோ கூறுவதைப் போன்ற உணர்வினைப் பெற்றான். முதலில் அதனை அசட்டை செய்த இராவணன், தொடர்ந்து அவ்வொலிகள் வந்தமையினால் சற்றுக் காது கொடுத்துக்கேட்டான்.

அவனுடைய கண்கள் மேலும் இரத்தக் குண்டுகள் போலாயின. பற்களை நறநற வென்று கடித்தான். அந்த ஓசை பேரொலியாக எழுந்தமையினால் ஆடற்கலைஞர்கள் ஆட்டத்தை நிறுத்தினர். பாட்டிசைக்கும் பாவாணர்கள் பாடலை நிறுத்தினர். அத்துடன் அங்கிருந்த அனைவரும்- இராவணனின் முகத்தில் பொங்கியெழுந்த கோபாக்கினியின் வெப்பம் தாங்காமல் எழுந்தோடினார்கள்.

### இசைப் பிரியன் இராவணன்

இராவணன் தனது பிரத்தியேக அரண்மனைக்குள் எப்போதாவதுதான் நுழைவான். இன்னிசையில் நாட்டம் கொண்டவனான இலங்கேசன், தனது ஆயிரம் தந்திகளை உடைய யாழினை மீட்டிப் பாடுவான். வேறு சில இசைக் கலைஞர்களையும் ஆடற் கணிகையரையும் மட்டுமே அவ்வரண்மனைக்குள் அனுமதிப்பான். அங்கிருக்கும்போது, அவனை வேறு எவரும் நெருங்கிக் குழப்ப முடியாது. இதனால்தான், 'இராமபிரானும் இலக்குவனும், போர்க்களத்தில் மாண்டதாகக் கருதப்பட்ட வானர வீரர்களும் உயிருடன்தான் இருக்கிறார்கள்,' என்ற செய்தியை அறிந்த உளவுப் படையினர் நேரடியாக இராவணனை அணுகிச் சென்று தாமறிந்த உண்மைகளைச் சொல்ல முடியாமற்போயிற்று.



உண்மை நிலைமையை உடனடியாகக் கூறாவிட்டாலும் உளவுப்படையினரின் உயிரை வாங்கிவிடுவான். இதனால்தான் அவர்கள் தேனீக்கள்போல் மாய உருவெடுத்து அம்மண்டபத்தினுள்ளே நுழைந்து, மலர் மாலைகளிலிருந்த வண்ணம் இராவணன் காதுகளுக்கு மட்டும் கேட்கக் கூடிய வகையில் போர்க்கள நிலமை பற்றிக் கூறினர்.

★ ☆ ✻

"யாரங்கே...!" என்று இராவணேசன் கர்ஜித்தான். முன் வாயிலில் காப்போராக நின்றிருந்த இரு காவலர்கள் உள்ளே நுழைந்தனர். அதேவேளையில்தான், தேனீக்களாக உருவெடுத்து வந்திருந்த உளவுப்பிரிவினரும் சுயரூபமெடுத்தனர். இந்த உருமாற்றக் காட்சியைக் கண்டதும் இராவணனுக்கும் சற்றுச் சிரிப்பு ஏற்படத்தான் செய்தது. காவலர்கள் கூடச் சிரித்தனர். ஒரு நொடிப் பொழுது தான்; அதற்குள் இராவணனின் முகம் மீண்டும் கடுகடுப்பானது.

"உடனடியாக மந்திராலோசனைக்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்! சபைக்கு வர வேண்டியவர்கள் அனைவரையும் உடன் வரச் செய்யுங்கள். இந்திரஜித்து எங்கிருந்தாலும் அவன் உடனடியாக இங்குவந்து சேரவேண்டும்!"

இவ்வாறு இடியோசை போன்று கட்டளையிட்டான். காவலர்கள் அப்பால் சென்றதும் உளவுப் படையினரை அருகழைத்து முழுவிபரங்களையும் கேட்டறிந்தான்.

### மாலியவான் ஆவேசம்

இராவணன் முன்னிலையில் நீதி நியாயங்களை எடுத்துரைத்து, அறிவுரை கூற பெரும்பாலும் எல்லோருக்கும் பயம். ஆனால் முதியவனான மாலியவான் தெட்டத் தெளிவாகத் தன் கருத்துக்களை- எத்தகைய அச்சமுமின்றி எடுத்துரைப்பான். இப்பொழுதும் இராவணனின் ஆலோசனைக் கூடத்தில் முதலில் தன் கருத்தை மாலியவானே எடுத்தியம்பினான். போர்க்களத்தில் மாண்டு மடிந்து போன அரக்க வீரர்களின் சடலங்களையெல்லாம் கடலில் வீசிவிடுமாறு ஏற்கனவே இராவணன் இட்ட கட்டளைப்படி எல்லாச் சடலங்களையும் சமுத்திரத்தில் வீசிவிட்டிருந்தனர். இச்செயலைச் சுட்டிக்காட்டிய மாலியவான், ஆவேசம் வந்தவன்போல் கடும் வார்த்தைகளை வீசிக் கண்டித்தான். "அவ்வாறு அச்சடலங்கள் அகற்றப் படாதிருந்தால், ஆஞ்சநேயர் கொண்டு வந்து சேர்த்த சஞ்சீவி பர்வதத்தின் மகிமையினால் வானர வீரர்கள் உயிர்த்தெழுந்ததைப் போன்று அரக்க வீரர்களும் உயிர்பெற்று எழுந்திருப்பார்களே!" என்று கூறினான்.

தொடர்ந்து பேசும்போது, ஆஞ்சநேயரின் ஆற்றலையிட்டும் இவ்வாறு தெரிவித்தான்:-

**முறை கெட வென்று வேண்டின்**
**நினைந்ததே முடிப்பன் முன்னின்**
**குறை இலை குணங்கட்கு என்னோ**
**கோள் இலா வேதம் கூறும்**
**இறைவர்கள் மூவர் என்பது**
**என் இலார் எண்ணமே தான்;**
**அறை கழல் அனுமனோடும்**
**நால்வரே முதல்வர் அம்மா!**

*(யுத்த காண்டம்-2786)*

பொருள்:

*"உலக நியதிகளின் முறைகளை மாற்ற வேண்டும் என்று நினைத்தானானால் தான் நினைத்ததையே செய்து முடிக்க வல்லவன் ஆஞ்சநேயன். அவனிடம் நற்குணங்களுக்குக் குறைவில்லை என்பதனால் முறை தவறி எதையும் செய்யமாட்டான். குற்றமற்ற மதங்கள் பிரம்மா, உருத்திரன், விஷ்ணு ஆகிய மூவருமே கடவுளர்கள் என்று கூறுவதாக ஆய்ந்தறியாதவர்கள் கூறுவார்கள். ஆனால் ஒலி செய்கின்ற வீரக் கழல்களை அணிந்த அனுமனோடு கடவுள்கள் நால்வர் ஆவர்."*

இவ்வாறு மாலியவான் ஆஞ்சநேயரின் ஆற்றல்கள் இறைவனின் சக்திகளுக்கு ஏற்புடையதாக இருப்பதாக எடுத்துக்காட்டினார்.

வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் மாலியவானின்பேச்சு இராவணனுக்கு கோபத்தையும் வேதனையையும் ஒருங்கே ஏற்படுத்தியது. இவ்வுரை கேட்டு இந்திரஜித்தும் கொதித்தெழுந்தான். தனது தந்தையின் தாளினைத் தொழுதெழுந்தான். "சர்வ வல்லமை பொருந்திய பிரம்மாஸ்திரத்தால் அழிக்க முடியாதவர்கள் நிச்சயமாக மானிடர்களல்ல. இராமபிரான் நிச்சயமாக இறைசக்தி பெற்றவன் என்பதுதான் உண்மை. எவ்வாறிருப்பினும் நாம் எவர்க்கும் அஞ்சிப் பின்வாங்கப் போவதில்லை. இவர்களை அழிக்க வேண்டுமானால் நிகும்பலை ஆலயம் சென்று அங்கு முறைப்படி வேள்வி செய்து நிச்சயம் இவர்களை அழிப்பேன். இந்த யாகத்தினைத் தொடங்க உத்தரவு தருமாறு வேண்டுகிறேன்!" என்று தந்தையிடம் வேண்டினான். இராவணனும் இந்திரஜித்தின் கோரிக்கையினை ஏற்று உடனடியாக யாகத்தைத் தொடங்குமாறு பணித்தான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி 104லும் 105லும் ஒரே வினாவே கேட்கப்பட்டிருந்தமையினால் சரியான விடையும் பரிசு பெற்றவர்களின் விபரமும் அடுத்த வாரம் பிரசுரமாகும்.**

**போட்டி இல. 106** கேள்வி:- **சஞ்சீவி பர்வதம் பற்றிய யோசனை கூறியவர் யார்?**

*நவம்பர் 08 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:*

**இராமாயணப் போட்டி–இல.106, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# தீபாவளி பட்டாசுகள்

## காதிலை பூ கந்தசாமி

**கா.பூ.க: சபா சிதம்பரம் ஐயா அவர்களே! உங்கள் தீபாவளி செய்தி என்னவோ?**

சபா.சி: அடுத்த தீபாவளிக்குள் சமாதானம் கொண்டுவருவோம்.

**கா.பூ.க: அடுத்த பொங்கலுக்குள் தமிழ் ஈழம் என்று சொல்லி இருபது வருசமாச்சு. அதை ஏன் ஞாபகப்படுத்துகிறீர்கள்?**

சபா.சி: நன்றி. இதோ செய்தி. கொட்டை எழுத்தில் பேப்பரின் நெற்றியில் போடுங்கோ.

**கா.பூ.க: சொல்லுங்கோ ஐயா!**

சபா.சி: தீபாவளி கொண்டாட குறுக்கே நிற்கக்கூடாது என்று யாராவது சொன்னால், நாங்கள் விலகி நிற்க ரெடியாக இருக்கிறோம். ஆனால் வேறு யாராவது குறுக்கே நிற்கக் கூடும். எனவே நாங்களும் குறுக்கே நிற்க வேண்டிவருமே தவிர, நாங்களாக குறுக்கே நிற்க மாட்டோம்.



ஏகப்பிரதிநிதிகள் என்று யாராவது சொன்னால் நாங்கள் வெறும் தேகப் பிரதிநிதிகளாக இருக்கத் தயார். ஆனால் வேறு சிலர் அதற்கு உடன்பட மாட்டினம். ஆகவே நாங்களும் பிரதிநிதிகளாக தொடர்ந்து கூவிக்கொண்டிருப்போம். நாங்கள் உயிரோடு இருப்பதுகூட ஏனையோர் உயிரோடு இருப்பதால்தான். நாங்கள் பிரதிநிதிகளாக இருப்பது ஏனையோரும் பிரதிநிதிகளாக இருப்பதால்தான். நாங்கள் உண்பதுகூட ஏனையோரும் உண்ணும்போது நாம் ஏன் உண்ணக்கூடாது என்பதற்காகவே!

**கா.பூ.க: உங்கள் தீபாவளி ஆசை என்ன?**

சபா.சி: வெடியோசைகள் ஓயவேண்டும். வெடியோசைகள் கேட்க வேண்டுமானால் அது எங்கள் தேர்தல் பிரசார கூட்ட மேடைகளுக்கு பின்புறம் நின்று வீர இளைஞர்கள் கொளுத்தும் பட்டாசு ஓசைகளாகத்தான் இருக்க வேண்டும்!

**கா.பூ.க: ஐயா சீலன் வணக்கம். உலகெங்கும் இருப்போர் கல்லாநிதிகள். நீர் மட்டும் தான் கலாநிதி. அதுதான் வீரப்பட்டம் போல உங்கள் பெயருக்கு முன்னால் தொங்கவிடுகிறீர்கள். அந்தப் பாணியே தனி.**

சீலர்: ஏதேது, புகழ்ச்சி அதிகமாக இருக்கிறதே?



**கா.பூ.க: எல்லாம் உங்கள் சகவாசம்தான்! ஐயா! உங்கள் தீபாவளி ஆசை என்னவோ?**

சீலர்: நாடுகள் தோறும் பிரச்சனை தோன்ற வேண்டும். அங்கு என் பிரச்சன்னம் இருக்கவேண்டும். யோசனை சொல்வதும் நானாக இருக்க வேண்டும். அதற்கு திருத்தம் சொல்வதும் நானாக இருக்க வேண்டும்! பாட்டும் நானே, எதிர்ப் பாட்டும் நானே.

**கா.பூ.க: பாட்டு, எதிர்ப்பாட்டு, இனத்திற்கு வைக்காதீர் வேட்டு என்று சிலர் சொல்வதாகக் கேள்வி.**

சீலர்: சட்டம் தெரியாதவர்கள்! என் சட்டைப் பையில் உள்ள விமர்சகர்களை வைத்து என் திட்டத்தை விற்றுவிடுவேன். நீர் கவலைப்படாதேயும்!

**கா.பூ.க: அடுத்த தீபாவளிக்குள் தீர்வு வந்து விடுமா ஐயா?**

சீலர்: தீபாவளிக்குள் வந்துவிடும், ஆனால் எந்த தீபாவளிக்குள் என்பதுதான் சட்டப்படி சொல்லக்கூடாத விஷயம்.

**(தலை முடியை பிய்த்தபடி நகர்கிறார் கந்தசாமியார்)**

**கா.பூ.க: அம்மையாரே! தாங்கள் விடுக்கும் தீபாவளிச் செய்தி என்னவோ?**

அம்மையார்: நாட்டின் 99 சதவீதமான பகுதியில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது. இந்தத் தீபாவளிக்கு வடக்கு-கிழக்கில் பட்டாசுகள் சுடுவதற்கு பயங்கரவாதிகள் தடையாக இருக்கிறார்கள். வடக்கு-கிழக்கின் பெரும்பகுதி அரசின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. வடக்கு-கிழக்கில் உள்ள மக்களுக்கு பயங்கரவாதிகள்தான் அச்சுறுத்தலாக உள்ளனர். இந்த வருட இறுதிக்குள் புலிகளை ஒழித்துக் கட்டிவிடுவோம். நாம் புலிகளோடு பேச தயாராகவே இருக்கிறோம். சமாதானக் கதவு திறந்தே இருக்கிறது. உலக நாடுகள் புலிகளை தடைசெய்ய வேண்டும், அவர்கள் பயங்கரவாதிகள் என்பதை உணரவேண்டும். புலிகளோடு பேச எதிர்க்கட்சிதான் தடையாக இருக்கிறது. புலிகளுக்கு அரசியல் தீர்வில் அக்கறை இல்லை, எதிர்க்கட்சியுடன் அரசியல் தீர்வில் ஒரு உடன்பாடு கண்டால்தான் புலிகளுடன் அரசியல் பேச்சை ஆரம்பிக்கலாம்.

**கா.பூ.க: மிகத் தெளிவான நிலைப்பாடு. நன்றி. (செல்கிறார்)**



அம்மையார்: ஹலோ கந்தசாமி கம்.

கா.பூ.க: என்ன அம்மா?

அம்மையார்: இதையும் குறித்துக் கொள்ளும்! அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம். வழங்கியே தீருவோம். யார் எதிர்த்தாலும், யார் கண்டித்தாலும் வழங்கியே தீருவோம்.

**கா.பூ.க: (முணுமுணுக்கிறார்) தேவாரம் பாடிவிட்டு நம பார்வதிபதியே அரகர மகாதேவா என்று கூறுவதுமாதிரித் தானோ இதுவும்?**

அம்மையார்: என்ன கூறுகிறீர்?

**கா.பூ.க: ஒன்றுமில்லை அம்மா! கோவிந்தா! கோவிந்தா!**

**கா.பூ.க: வணக்கம் அனில் அண்ணா? தீபாவளிச் செய்தி சொல்லுங்கள். பேஷாக இருக்கட்டும்!**

அனில். அ: நாங்கள் ஒத்துழைக்கத் தயார். ஆனால் அமெரிக்காவில் அரசியல் அமைப்பு செய்ய எத்தனை வருடம் சென்றது? ஆபிரிக்காவில் எத்தனை வருடம் ஆனது? ஐரோப்பாவில் எத்தனை யுகம் சென்றது? என்ற தகவல்களை முதலில் அரசு வெளியிடட்டும். அந்த உண்மைகளை முதலில் துணிந்து சொல்லட்டும். இதென்ன அப்பமா? தோசையா? உடனே சுட்டுத்தர முடியுமா? ஒரு ஆறு மாதம் பொறுக்க முடியுமா? என்று கேட்டோம். ஆம், அல்லது இல்லை என்று பதில் சொல்லியிருந்தால் அதற்கேற்றபடி நாங்கள் இன்னொரு நல்ல கதை சொல்லியிருப்போம்.

சரி போகட்டும், நாம் ஆட்சியில் இருந்த போது தீபாவளி, புதுவருசம், பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் யுத்த நிறுத்தம் அறிவித்தோம். பண்டிகைக்கு முதல்நாள் அல்லது மறுநாள்தான் குண்டு போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். அதனால் பண்டிகையை ஆ....ஓ... என்று தமிழ்மக்கள் கொண்டாட முடிந்தது. இன்றைய அரசுக்கு திட்டமிட்டு யுத்தம் நடத்தத் தெரியவில்லை.

**கா.பூ.க: இந்தியா போய் வந்தீர்களே, என்ன கொண்டு வந்தீர்கள்?**



அ.அ: அல்வா!

**கா.பூ.க: யாருக்கு கொடுக்கப்போகிறீர்கள்?**

அ.அ: பொதுநலன் கருதி நாட்டு மக்கள் அனைவருக்கும் கொடுக்கப் போகிறேன்.

**கா.பூ.க: இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்களே, என்ன இரண்டாம் பதிப்பு வெளியிடப்போகிறீர்களா?**

அ.அ: உயிர் கொடுக்கச் சொல்கிறேன்.

**கா.பூ.க: உயிரை எடுத்ததே உங்கள் ஆட்சியில் தான் என்கிறார்கள்.**

அ.அ: அப்போது நான் தொண்டன். இப்போது தலைவன்!

**கா.பூ.க: உங்கள் கட்சியிலும் குண்டர்கள் இருக்கிறார்களே, அவர்கள் குழப்ப மாட்டார்களா?**

(ரணில் முறைக்கிறார். கந்தசாமியார் நழுவுகிறார்.)



**கா.பூ.க: வணக்கம் தொண்டரே! என்ன உங்கள் சத்தத்தையே காணோம்?**

தொண்டர்: மலையை நிமிர்த்தும் பணியை கலையாகச் செய்து கொண்டிருக்கிறேன்.

**கா.பூ.க: உங்கள் தீபாவளி ஆசை என்னவோ?**

தொண்டர்: ஆசையே இல்லாதவன் நான். இப்போது நினைத்தாலும் பதவியை தூக்கி, தலையை மூன்றுதரம் சுற்றிவிட்டு எறியத் தயங்கேன். பதவி சுமையானது. பதவி ஒரு முள் படுக்கை!

**கா.பூ.க: அடிக்கடி இப்படிச் சொல்லிவிட்டீர்கள் தீபாவளி போனசாக என்ன சொல்கிறீர்கள்?**

தொண்டர்: எப்போதுமே இங்கே சேவல் தான் கூவணும். ஒன்றே தலைவன்! ஒன்றே கட்சி! ஒன்றே காங்கிரஸ்! ஒன்றே சின்னம்!

**(பட்டாசு ஓசைபோல கைதட்டிக் கொண்டு விடைபெறுகிறார் கந்தசாமியார்)**



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/45/NEWS/97)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# வர்ணம் ஐந்து

சிவப்பு அதிகமாகக் காணப்படும் பஞ்சவர்ணக்கிளி உலகில் காணப்படும் மிக அழகான பறவைகளில் ஒன்று. பெரும்பாலும் தென் அமெரிக்காவில் பரவலாகக் காணப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்காக காடுகள் அழிக்கப்படுவதனால் இப்பறவைகள் கூடுகளைக் கட்டி குஞ்சு பொரிப்பதற்கு முடியாமற் போய்விடுகிறது.

பஞ்சவர்ணக் கிளிகள் உட்பட பல பறவை இனங்கள் உலகில் அழிந்து வருகின்றன. எதிர்த்து நிற்கப் பலம் இல்லாமையால் சுவடே இல்லாமல் போகப் போகின்றன.

யாழ் குடாநாட்டில் ஆனையிறவுக்கு கிழக்கே அமைந்த சுண்டிக்குளம் பறவைகளின் சரணாலயமாக இருந்தது. ரசியாவில் இருந்துகூட பறவைகள் வந்து செல்வதுண்டு. தற்போது ரசியாவில் வாங்கப்பட்ட அலுமினியப் பறவைகள்தான் (விமானங்கள்) அங்கு நடமாடுகின்றன. பறவைகள் வருவதில்லை. சாகப் பயம்.

வடக்கில் பனைமரங்கள் வெட்டிச் சரிக்கப்பட்டு காவலரண்களாகப் பயன்படுவதால் பச்சைக் கிளிகள் கூடு கட்ட பனைமரங்களும் இல்லாமல் போகின்றன.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657




அண்டவெளியில் இன்னும் மனிதன் கண்களுக்குப் புலப்படாத, ஏன் சிந்தனைக்குக்கூட எட்டாத பல அதிசயங்கள் கொட்டிக்கிடக்கின்றன. பல கோடி ஒளி வருடங்களுக்கு மேலான தூரத்தில்கூட எத்தனையோ புதுமைகள் கிடக்கின்றன அவற்றை கண்டறிய மனிதன் ஆசைப்படுகிறான். அந்த ஆசையினால் ஏற்பட்ட ஊக்கத்தினால்தான் இப்பிரமாண்டமான கண்ணாடியைப் பொருத்தி ஒரு தொலைநோக்காடியை உருவாக்கும் முயற்சி நடக்கிறது.

சிலி என்ற இடத்திலுள்ள ஐரோப்பிய தென்பிராந்திய வானிலை ஆய்வுகூடத்தில் பொருத்தப்படவிருக்கும் இக்கண்ணாடி 27அடி விட்டம் கொண்டது. இதன் தடிப்பம் 7 அங்குலமாகும். 45 மெட்ரிக்தொன் கண்ணாடியை 2,900 பாகை ஃபாரன்ஹைட் வெப்பத்தில் உருக்கி நான்கு பிரிவுகளாக இதனை வார்த்தெடுத்துள்ளனர். பின்னர் இவற்றைச் செப்பனிடுவதற்காக பாரிஸ் நகருக்கு அனுப்பப்பட்டன.

தென்துருவத்தில் வாழும் பென்குயின்களின் வாழ்க்கையைப் பற்றி முரசு 226ன் கடைசிப் பக்கத்தில் குறிப்பிட்டு, ஆண் பென்குயின்கள் அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

பென்குயின்களின் விசித்திரமான வாழ்க்கை முறைகளை, சான்டியா கோவிலிலுள்ள ஹப்ஸ்-உலகக் கடல் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆன் பொவல்ஸ்- மிகக்கடுமையான- பயங்கரமான குளிரில் ஆராய்ந்தார், பென்குயின் முட்டையை அவர் ஏந்தியிருக்கிறார். இம்முட்டை எந்த அளவானது என்பதை அவருடைய விரல்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

கடுங்குளிர் காலம் தொடங்கியதும் இணை சேரும் பென்குயின்களில் 'பெண்' பென்குயின்கள் முட்டையையிட்டு 'ஆண்' குயின்களிடம் அடைகாக்க விட்டு வடக்கே வெப்பமான இடங்களை நாடி ஓடிவிடுகின்றன.


65 நாட்கள் இம்முட்டையை அடைகாத்து நின்ற நிலையிலேயே நிற்கும் ஆண் பறவைகள் தம் பாதங்களிலேயே முட்டைகளை வைத்துக் கொள்கின்றன.

பெண் பென்குயின்கள் முட்டையிடுவதில் மகா கஞ்சத்தனம் காட்டுகின்றன. ஒரு தடவையில் ஒரே ஒரு முட்டையை மட்டும் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று போட்டுவிட்டுப் போய்விடுகின்றன. அதனால்தான் அந்த முட்டையை அருமை பெருமையாக கண்ணும், கருத்துமாக ஆண் பென்குயின்கள் அடைகாக்கின்றன.

எதுவும் அளவோடு இருந்தால்தான் மவுசு!

# ஒன்றே ஒன்று





# பெரிய வேலை

ஏறத்தாழ ஒன்றரை வருடங்களாக செப்பனிடும் பணி நடைபெறுகின்றது. இதனைத் தொடர்ந்து இவ்வருட இறுதியில் பிரத்தியேகக் கப்பலில் ஏற்றப்பட்டு தென் அமெரிக்காவில் பசுபிக்கடலிலுள்ள சிலித் தீவுக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்குள்ள 8,740 அடி உயரத்திலுள்ள மலைச்சிகரத்துக்கு இக்கண்ணாடிகள் எடுத்துச் செல்லப்படும். இதற்கென 90 மைல் நீளமான பாதை புதிதாக அமைக்கப்படுகிறது.

இதற்காகவே தனியான வண்டிகள் உருவாக்கப்படுகின்றன. மலை உச்சிக்கு இவ்வண்டிகள் ஆக 3 மைல் வேகத்தில்தான் நகர்ந்து செல்லும். மலை உச்சியில் ஏறி நின்று இந்த தொலைநோக்கி வழியாக அண்டவெளி இரகசியங்களை அலசப் போகிறார்கள் விஞ்ஞானிகள்.

2000 ம் ஆண்டு இத்தொலை நோக்கி கண்ணாடி இயங்கத் தொடங்கி புதிய தகவல்கள் கிடைக்க வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது. உலகிலேயே மிகப் பெரிய தொலைநோக்கிக் கண்ணாடி இதுதான். மஞ்சள் வட்டமாக தெரிகிறது பாருங்கள் அதுதான் பிரமாண்டமான தொலை நோக்கி கண்ணாடி.

# மகுடம் போகுமா?



இந்திய அணியின் தோல்விக்கான பழியை கப்டன்மீது போடுவதே வாடிக்கையாகிவிட்டது. முதலில் அசார் தலையில் முட்டை முட்டையாக பழி போட்டார்கள். இப்போது டெண்டுல்கரை விளாசுகிறார்கள். சரியான பயிற்சியாளர் இல்லாமை, இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுவின் சர்வாதிகாரத்தனம், வேகப்பந்து வீச்சாளர்கள் போதாமை, சகல துறை ஆட்டக்காரர்கள் பற்றாக்குறை என்று அணியின் தோல்விக்கு பல காரணங்கள் இருக்கின்றன.

மிக முக்கியமாக, சில ஆட்டக்காரர்கள் தங்கள் பெயர் பிரபலமானவுடன், அந்தப் பெயரைத் தக்கவைக்க நினைத்து பதற்றமடைகிறார்கள். தங்கள் பெயருக்காக ஆடத் தொடங்கி, அந்தப் பதற்றத்திலேயே ஆட்டம் இழந்து போகிறார்கள். இந்திய அணியில் நீண்டகாலக் குறைபாடு இதுவாகும். சமீபத்தில் கங்குலியிடம் கூட அந்தத் தடுமாற்றம் தெரிந்தது.

கப்டன் டெண்டுல்கர் ஒரு பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார். "ஒரு வீரர் சில போட்டிகளில் நன்றாக ஆடிவிட்டால் போதும் பத்திரிகைகள் ஆஹா ஓஹோ என்று புகழ்கின்றன. முன்னாள் வீரர்களுடன் எல்லாம் ஒப்பிட்டு எழுதுகிறார்கள்.

"அது தவறு. முன்னாள் வீரர்கள் பல ஆண்டுகளாக கடுமையாக உழைத்து, தங்கள் திறமையை பல போட்டிகளில் நிரூபித்தவர்கள். பல ஆண்டுகள் நீடித்தவர்கள். அவ்வாறானவர்களுடன் புதிய வீரர்களை ஒப்பிட்டால், அந்தப் புதிய வீரர்களுக்குக்கூட ஒரு மெத்தனமும், சுய திருப்தியும் ஏற்பட்டு அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டுவிடுகிறது. தட்டிக்கொடுங்கள், தகுதிக்குமீறிப் புகழாதீர்கள்" என்று சொல்கிறார். அது சரிதான்.

டெண்டுல்கருக்கு இப்போது 25 வயது. 24 வயதில் கப்டனாகினார். கப்டனுக்குரிய போர்க்குணம் அவரிடம் இருந்தும், அணியை நிமிர்த்த பல தடைகள் குறுக்கிடுகின்றன. டெண்டுல்கர் தலைமையில் 16 ஒருநாள் போட்டிகளில் வெற்றிக்கனி பறித்த அணி, 27 போட்டிகளை கோட்டைவிட்டது. 14 டெஸ்ட் போட்டிகளில் மூன்றில் மட்டும் வெற்றியை ருசி பார்த்தார்கள். நாலு போட்டிகளில் தோல்வி அணைத்தது.

ஒரு பெண் குழந்தைக்கு அப்பாவாக புதிய பதவி கிடைத்திருக்கிறது டெண்டுல்கருக்கு. சந்தோசம்! டெண்டுல்கரிடம் முன்னைய துடிப்பையும் ரன் குவிப்பையும் எதிர்பார்க்கிறார்கள் அவரது விசிறிகள். இப்போதெல்லாம் மந்தமாக ஆடுகிறார். அல்லது அடித்தாட ஆரம்பித்தால் விரைவாக அவுட்டாகி விடுகிறார்.

இளம் புயல் ஓய்ந்துவிட்டதா? அல்லது புயலுக்கு முந்திய அமைதியா? பார்க்கலாம்.

## நன்றி நவிலல்



செல்வி பாலகிருஷ்ணன் மேரி டிலூஷா

அன்னை மடியில் 20.05.92 — ஆண்டவன் அடியில் 30.08.97

பாலகிருஷ்ணன் (ஜீவன்)- காலஞ்சென்ற ரேகா தம்பதியின் செல்வப்புதல்வி மேரி டிலூஷாவின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதங்கள் போன்றவற்றின் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும், 31ம் நாள் வைபவங்களில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்: எம். அசோக்,



படிப்பகம்